www.padippakam.com

# வித்தியாலயம்
# 2005



**வேலணை மத்திய மகாவித்தியாலய**
**பழையமாணவர் சங்கம் - பிரான்ஸ்**

படிப்பகம்

www.padippakam.com



## துகள்கள் துளிர்த்திருக்கின்றன

அப்படிச் செய்வதா ? இப்படிச் செய்வதா ?
அதைச் செய்வதா ? இதைச் செய்வதா ?
வாங்குவதா ? விடுவதா ?
தேவையா? தேவையில்லையா ?
விவாதங்கள், விதண்டாவாதங்கள் எனப்பல வாதங்கள்
வந்து நீங்களும் நாங்களுமாய், பிய்த்து பிடுங்கி துண்டாகி துகளாகி....
சிதறுண்ட துகள்கள் துளிர்த்திருக்கின்றன.

உடன்பாடானவைகள் சந்திக்கும்போது, சேரும்போது
எந்த மாற்றங்களும் ஏற்படாது, முரண்பாடானவை
சந்திக்கும் போது அதனிடையேயான தாக்கங்கள் - தா்க்கங்கள்
பெரிய மாற்றங்களை ஏற்படுத்தி விடுகின்றன.
அப்படியான சூழ்நிலைப்பரப்பிலுருந்துதான் இவ்வாண்டின்
வித்தியாலயம் மலர்கிறது.

தாமதமான புறப்படல், தாமதமான சேரல்,
விரோதகுரோதங்களுக்குள்ளும்
விருப்பு வெறுப்புகளுக்கிடையேயும் கொண்டுவந்து
சேர்க்கப்பட்டிருக்கின்றது இம்மலர்.
புறப்படல் தாமதமாகும்போது சேரலுக்கு வேகம்
தேவைப்படுகிறது, எல்லாக்காரியங்களும் இடைஞ்சல்களைத் தாண்டி
புறப்பட்டு செல்கையில் வேகம் விரைவுபடுத்தப்படுகிறது,
இம்மலரும் அப்படியே...

கெதியாய்ச் செய்ய வேண்டும், கெதியாய் முடிக்க வேணும்
என்ற சூழ்நிலையில் கெதியாய்ச் செய்திருக்கிறோம்.

வருடங்கள் தோறும் வெளியிடப்பட்டு வரும்
“வித்தியாலயம்” மலர்கள் பற்றிய மதிப்பீடுகள்
பெறுமதியான பதிவுகளாயிருக்கின்றன என்பதை
எண்ணுகையில் பெருமித்துடன் பிறக்கின்ற உற்சாகம்
இம்மலருக்கு உரம்.

இம்மலர் வெளிவர அச்சுக்குப்போகும்வரை ஆக்கங்கள் தந்துதவிய
ஆக்கதாரர்களுக்கும்,
மலரை வடிவமைத்து “கெதியா” வெளியிட காரணமாயிருந்த
கிருஷ்ணா அச்சகத்தினருக்கும் எம் நன்றிகள்.

- மலர்க்குழு



படிப்பகம்

www.padippakam.com



# கல்லூரிக்கீதம்

வாழ்த்துவோம் வாழ்த்துவோம் வாழ்த்துவொம்
வாழ்க பாட சாலையென்று
வணங்கிக் கூடி வாழ்த்துவொம்



ஆழி சூழும் ஏழு தீவும்
அறிவு காணும் சாலையாம்
ஊழி ஊழி ஓங்கும் சேவை
உயர்வு காணும் சாலையாம்
வாழி வேலணை மத்திய மகா
வித்தியா சாலையாம்
வாழி ஊழி ஊழி யென்று
வணங்கிக் கூடி வாழ்த்துவோம்

வாழ்க பாட சாலையென்று
வணங்கிக் கூடி வாழ்த்துவொம்

அன்பு ஒளியைக் காட்டும் வழியே
ஆய சின்னம் அதுவாய்க்
கொண்டு ஊங்கும் கொள்கை வழியே
குலாவும் சிறார்கள் வாழ்கவே
நன்று கல்வி நாழும் நல்கி
நல்லொழுக்கம் வளர்க்குமே
நின்று நாமும் நாடும் வாழ
நிலைக்கும் சேவை போற்றுவோம்

வாழ்க பாட சாலையென்று
வணங்கிக் கூடி வாழ்த்துவொம்

ஞானம் சீலம் நாடு எங்கும்
நல்கி மல்கி பெருகவே
மான வீர மாணவர்கள்
வளர்த்தெடுக்கும் தாயிவள்
ஆயகலைகள் அறிவியல்கள்
அள்ளி அள்ளி ஊட்டுவாள்
தேனருந்து வண்டு எனத்
திளைத்து நாங்கள் போற்றுவோம்

வாழ்க பாட சாலையென்று
வணங்கிக் கூடி வாழ்த்துவொம்

அன்பு ஆசார் அதிபர் கூடி
ஆக்கம் காட்டும் கோவிலாம்
இன்பத் தமிழோடாங்கிலத்தை
ஏந்திப் போற்றும் கோவிலாம்
நன்று ஆட நயந்துபேச
நமக்கருள் செய் கோவிலாம்
நின்று நாமும் நாடும் வாழ
நிலைக்கும் சேவை போற்றுவொம்

வாழ்க பாட சாலையென்று
வணங்கிக் கூடி வாழ்த்துவொம்

போற்றுவோம் போற்றுவோம்
வாழ்த்துவோம் வாழ்த்துவோம் வாழ்த்துவோம்



படிப்பகம்

www.padippakam.com





# பிரதம விருந்தினர் செய்தி

வேலணை மத்திய மகா வித்தியாலய பழைய மாணவர் சங்க பிரான்ஸ் கிளையின் «வித்தியாலயம் 2005» மலருக்கு வாழ்த்துச் செய்தி அனுப்புவதில் மகிழ்ச்சியும் பெருமையும் அடைகிறேன்.

பிரான்ஸ் கிளை 1992ம் ஆண்டு தொடங்கியது முதல் செயற்குழு உறுப்பினராக இருந்து திறம்பட இயங்கி சென்ற ஆண்டு காலமாகிய பொறியியலாளர் திரு. யா. பத்மநாதன் அவர்களின் சேவையை இவ்வேளையில் நினைவு கூருகிறேன்.

எமது மண்ணின் தற்போதைய காலச் சூழலில் பலதரப்பட்ட பிரச்சினைகட்கு மத்தியில் இயங்கி வருகின்றபோதும் கல்லூரி முன்னேற்றத்திற்கு பல வழிகளிலும் உதவி வருகின்ற பிரான்ஸ் வாழ் பழைய மாணவர்களையும் நலன் விரும்பிகளையும் பாராட்டுகிறேன்.

திரு. யா. பாலகிருஷ்ணன் அவர்களின் தலைமையில் 1992இல் ஆரம்பிக்கப்பட்டு பிரான்ஸ் கிளை காலப்போக்கில் பாடசாலை மாணவர்கள் நலன்கருதி பல திட்டங்களை முன்னெடுத்து வருகின்றது.

இந்நிலையில், நாங்கள் எல்லோரும் தற்போது பல்வேறு நாடுகளில் சிதறுண்டு வாழ்ந்தாலும் எமக்கு அறிவூட்டிய கல்லூரித் தாய்க்கு நன்றி உணர்வோடு பல தரப்பட்ட நல்ல திட்டங்களை பழைய மாணவர் சங்கங்கள் முன்னெடுக்க வேண்டும் என்று பணிவுடன் கேட்டுக் கொள்கிறேன்.

நன்றி

**த. சந்திரகுமார்**
பழைய மாணவர்

பிரான்ஸ்
01.10.2005




படிப்பகம்

www.padippakam.com



# அதிபரின் இதயத்திலிருந்து



வேலணை மத்திய கல்லூரியின் பிரான்ஸ் நாட்டு பழைய மாணவர் சங்கம் வருடந்தோறும் வித்தியாலய விழாவையும் "வித்தியாலயம" மலர் வெளியீட்டையும் சிறப்பாகச் செய்து வருவது கல்லூரிக்கு பெருமை சேர்க்கிறது. இக்கல்லூரி வளர்த்தெடுத்த பண்பாட்டு விழுமியங்கள் தொடர்ந்தும் பாதுகாக்கப்பட்டு வருவது கண்டு கல்லூரித் தாயுடன் நாங்களும் மகிழ்ச்சியடைகிறோம்.

புலம்பெயர் வாழ்க்கையின் பல்வேறு துன்பங்களின் மத்தியிலும் தமது கல்லூரியையும், தமது ஊரையும், உறவுகளையும் மண்வாசனைகளையும் மறக்காமல் மனதில் வரித்துக் கொண்டு அவற்றின் முன்னேற்றத்திற்காக பல வழிகளில் எமக்கு உதவுவது கண்டு மெய்சிலிர்த்து நிற்கிறோம். எமது பிரதேசத்தின் முன்னேற்றத்திற்காக அயராது உழைத்து வரும் எமது கல்லூரி பழைய மாணவர்களின் செயல்கள் எம்மைப் பிரமிக்க வைக்கிறது. இதய சுத்தியுடன் உழைக்கும் தன்னலங் கருதாத பழைய மாணவர்கள் அனைவருக்கும் கல்லூரிச் சமூகத்தின் நன்றிகளை முதலில் தெரிவித்துக் கொள்வதுடன் உங்கள் பணி தொடரவேண்டும் என வாழ்த்துகிறேன்.

நபிகள் நாயகம் அவர்களின் கருத்து இங்கு பொருத்தமாக இருக்கும் என எண்ணுகிறேன். "கல்விக்கு உயிர் கொடுத்தோர் மரணிப்பதில்லை" என்ற கருத்து எக்காலத்திற்கும் பொருந்தக் கூடியது. விமர்சனங்களும், கண்டனங்களும், விதண்டாவாதங்களும் எப்பொழுதும் புதியவையல்ல. இது தொடர்ந்து கொண்டே இருக்கும். இவற்றைக் கண்டு மனம் சோர்ந்து போனால் நாம் நிச்சயித்த இலக்குகளை அடைய முடியாமல் போய்விடும்.

பிரான்ஸ் பழைய மாணவர்களும் நீண்ட காலமாக எமது கல்லூரி வளர்ச்சியில் அதிக அக்கறையுடன் உழைத்து வருவது அனைவருக்கும் தெரிந்த விடயம். அதற்குப் பல சான்றுகள் உள்ளன.

1. கல்லூரிக்கான காணி கொள்வனவு
2. விளையாட்டு மைதானத்திற்கான காணி கொள்வனவு
3. போட்டோ பிரதி இயந்திரம் அன்பளிப்பு
4. பக்ஸ் (Fax) இயந்திரம் அன்பளிப்பு
5. றோனியோ இயந்திரம் அன்பளிப்பு
6. நூலக அபிவிருத்தி
7. ஆசிரியர் மாணவர்களுக்கான நூல்கள் அன்பளிப்பு



படிப்பகம்

www.padippakam.com



என்று தொடர்ந்து கொண்டே இருக்கிறது. இது தொடர வேண்டும். அண்மையில் பிரான்ஸ் பழைய மாணவர்சங்க செயலாளர் கல்லூரிக்கு வந்து பலருடன் கலந்துரையாடிள்ளார் அவருடன் எமது தேவைகள் பற்றிக் கலந்துரையாடியுள்ளோம்.

இந்த ஆண்டு எமது கல்லூரியின் 60வது வருடமாகும். வைரவிழாவை சிறப்பாகக் கொண்டாட எண்ணியுள்ளோம். சிறப்பு மலர் ஒன்று வெளியிட உள்ளோம். தங்கள் சங்கத்தின் வாழ்த்துச் செய்தி, உத்தியோகத்தர் குழு புகைப்படம், ஆக்கங்கள் அனுப்பி உதவவும். விளம்பரங்களும் சேர்த்துக் கொள்ளப்படும். பழைய மாணவர் கையேடு ஒன்று தயாரிக்க உள்ளோம்.

(1) பழைய மாணவர் பெயர்
(2) கல்வி கற்ற காலம்
(3) நிரந்தர முகவரி
(4) தற்போதய முகவரி
(5) தொலைபேசி இலக்கம்

இந்த விபரங்களை சேர்த்து அனுப்பி உதவவும்.

உங்கள் விழா சிறப்பாக நடைபெற எமது வாழ்த்துக்களைத் தெரிவித்து மகிழ்ச்சியடைகிறேன். கல்லூரி அபிவிருத்தியில் உழைப்பதற்கு நாம் எல்லோரும் ஒன்றாய் இணைந்து நிற்போம்.

அன்புடன்
**பொ. அருணகிரிநாதன்**
அதிபர்

## வைரவிழா கொண்டாடும்
## வேலணை மத்திய மகா வித்தியாலயமே
## வாழ்க! வாழ்க! பல்லாயிரம் ஆண்டுகள்

தமிழ் ஈழ வள நாட்டின் தீவகத்தின்
புகழ் ஓங்கும் மேரு மலையாக
திகழ்கின்ற வேலணை மத்திய மகா
வித்தியாலய தாயே!
பல்லாயிரம் ஆண்டுகள் பேருடனும்
புகழுடனும் வாழ்க! வாழ்க!

ஏழு தீவிலும் வாழ் மாணவ
மணிகளை பலதுறையிலும்
மாமேதைகளாக்கி பாருகழ
வைத்த - வைக்கின்ற - வைக்கும்
வேலணை மத்திய மகா வித்தியாலய
தாயே! உன் அறுபது வருட
வைர விழாவை கோலாகலமாக
கொண்டாடும் அதிபர் ஆசான்கள்
மாணவ மணிகள் வாழ்க! வாழ்க!
பல்லாயிரம் ஆண்டுகள்
வித்தியாலயத் தாயே! உன் புகழ்
வாழ, உன் சேவை வாழ
புலம்பெயர் மண்ணில் வாழும்
சகல பழைய மாணவ மணிகளும்
நலன் விரும்பிகளும் பழைய
மாணவரும் வேலணை மேற்கு
முன்னாள் பயிர்ச்செய்கை
உத்தியோகத்தரும் வைரவிழா
சீரும் புகழும் நிறைவாக பெற்று
இனிதாக நிறைவேற எல்லாம்
வல்ல இறை அருள்வேண்டி
மேலும் மேலும் பேரும் புகழும்
பெற்று வாழ வேண்டும்
வாழ்க! வாழ்க!! வாழ்கவே!!!



**பஞ்சாட்சரம் கந்தப்பிள்ளை**
பழைய மாணவர்
முன்னாள் வேலணைமேற்கு
பயிர்ச்செய்கை உத்தியோகத்தர்
07-10-2005



படிப்பகம்

www.padippakam.com





**கு. கணேசலிங்கம்**
ஓய்வு பெற்ற அதிபர்
வேலணை மத்திய கல்லூரி
வேலணை.
16.10.2005.

வேலணை மத்திய கல்லூரியின் பழைய மாணவர் சங்கத்தின் பிரான்சுக் கிளையினர் தமது சங்கத்தின் 12ம் ஆண்டு நிறைவு விழாவைக் கொண்டாடுகின்றனர். பழைய மாணவனாகிய நானும் பெருமை அடைகின்றேன். இவ்விழாவிற்கு என்னையும் அழைத்து கௌரவிப்பதில் மட்டற்ற மகிழ்ச்சி அடைகின்றேன். நாம் படித்த கல்லூரியை மறவாமல் அக்கல்லூரிக்குச் சேவை செய்வது முக்கியமானது. இச் சேவை அர்ப்பணிப்புடன் செய்யப்படல் வேண்டும். அர்பணிப்புக்கு பாசம், பற்று, விடாமுயற்சி, காலம்தாழ்த்தாமை, ஈடுபாடு போன்ற பல்வேறு இயல்புகள் வேண்டும். அர்ப்பணிப்புடன் நாம் செய்யும் சேவையினால் குடும்பம, கிராமம், சமுதாயம், நாடு என்பன வளம் பெறுகின்றன. பாடசாலைக்கு செய்யும் சேவையையும் அத்தகைய இயல்புகளைக் கொண்டு அர்ப்பணிப்புடன் செய்யப்படல் வேண்டும்.

அர்ப்பணிப்புப் பணியினை உங்கள் சங்கத்திடம் காண்கின்றேன். 1990ல் இருந்து எமது கல்லூரி பல இடப்பெயர்வுகளைக்கண்டு தற்போதும் பல வளத்தேவைகளுடன் சொந்த இடத்தில் செயற்பட்டு வருகின்றது. இச்செயற்பாடுகளுக்கு 1993ல் இருந்து உங்கள் சங்கம் வருடா வருடம் ஏறு நிலை நோக்கில் சேவை செய்து வருவதை நான் அறிவேன். இவ் வருடம் அவ் ஏறு நிலையின் உயர் நிலையாகக் கல்லூரியின் விளையாட்டு மைதானத்தை அதற்குரிய அளவுத்திட்டத்திற்கு ஏற்ப விஸ்தரிப்பதற்கான காணிகளைக் கொள்வனவு செய்து கொடுத்துள்ளீர்கள். இது நிலையானது. தேவையானது. பாராட்டப்படக்கூடியது.

அதிபர் திரு. வி. தம்பு அவர்களின் காலத்தில் மாணவனாக இருந்தேன். அதிபர்கள் திரு. சீ. குணபாலசிங்கம். திரு. கே. இராசையா. திரு. சிவ. இராஜரத்தினம். திரு. எஸ். சண்முகநாதன் ஆகியோர் காலத்தில் ஆசரியராகக் கடமை ஆற்றும் பேறு பெற்றேன். இவர்களிடமிருந்து பெற்ற பட்டறிவைக்கொண்டு நானும் அதிபராக 1997 - 2002 வரை கடமையாற்றி என்னால் ஆன சேவைகளைச் செய்துள்ளேன். பழைய மாணவன். ஆசிரியர். அதிபர் என்ற மூன்று கோணங்களில் இருந்து உங்கள் சங்கத்தின் சிறப்பான அர்ப்பணிப்புச் சேவைகளைப் பாராட்டுவதுடன் இப் பணி தொடர வேண்டும் என வாழ்த்துகின்றேன்.

கு. கணேசலிங்கம்.



படிப்பகம்

www.padippakam.com





14. 10. 2005
பிரான்ஸ்

# தலைவரின் செய்தி

பிரான்சுக்கு வந்து பல ஆண்டுகள் கடந்தோடி விட்டன. பழைய மாணவர் சங்கம் அமைத்து பன்னிரெண்டு வருடங்கள் ஓடி விட்டன. இந்தக் காலப் பகுதியில் பழைய மாணவர்களும் கல்லூரியின்பால் அக்கறைகொண்ட நலன்விரும்பிகளும் சரியான முறையில் என்ன செய்தோம் என்று பல கோணங்களில் பல கேள்விகள் கேட்கின்றனர். இவ்வாறான கேள்விகளும் விமர்சனங்களும் சங்கத்தின் நடவடிக்கைகளை விரிவுபடுத்தவும், கல்லூரி மாணவர்களது கல்வியை ஓரளவாவது மேம்படுத்தவும் உதவும் என்பது எனது நம்பிக்கை.

எமது சங்கம் ஆரம்பிக்கப்பட்ட பின்னர் பலர் இணைந்தும் பலர் விலகியும் உள்ளனர். இதற்கு பல்வேறு காரணங்கள் இருப்பதை நாம் அறிவோம். இப்படியான சூழ்நிலையில் இன்னமும் சேர்ந்து இயங்குகின்ற உறுப்பினர்களையும் சங்கத்தில் இருந்து வெளியேறத் தூண்டாமல் சங்கத்தின் செயற்குழுவில் ஆர்வமுள்ளவர்கள் இணைந்து, நல்லதென்று நம்புகின்ற வேலைத்திட்டங்கள் முன்னெடுக்க முன்வரும்படி வேண்டிக்கொள்கிறேன்.

சங்கம் மிகக் குறுகிய வட்டத்திற்குள் இயங்குகின்றது என ஓர் கருத்தும் முன்வைக்கப்படுகிறது. அது உண்மையாக்கூட இருக்கலாம். எங்களுக்குத் தெரிந்தமுறையில் கடந்த ஆண்டுகளில் வேலைத்திட்டங்களை முன்னெடுத்துள்ளோம். மாணவர்கள் சொந்த இடத்திலிருந்து 1991 இல் யாழ்ப்பாணத்தில் தற்காலிகமாகப் பாடசாலை இயங்குகின்ற நேரத்தில், மாணவர்கட்காக ஓலைக் கொட்டகைகள் அமைக்கவும், இருந்து படிக்க வாங்குகள் வாங்கவுமே இச்சங்கம் ஆரம்பிக்கப்பட்டது. காலப்போக்கில் கணனிகள், விளையாட்டு மைதான விஸ்தரிப்பு, மேலதிக பாடப்புத்தகங்கள் போன்றவற்றிற்கான வசதிகள் ஏற்படுத்தும் வண்ணம் இயங்கிவருகிறது. குறுகிய வட்டம் என்பது எங்களின் இயலாமையே. இதைத் தவிர்ப்பதற்கு பாடசாலையில் ஆர்வமுள்ள அனைவரையும் சேர்ந்து இயங்க முன்வருமாறு அன்போடு அழைக்கிறேன்.

வருடத்தில் விடுமுறை மாதமான ஆவணியைத் தவிர 11 செயற்குழு கூட்டடங்கள் கூடியிருக்கிறோம். பெறுமதிமிக்க ஞாயிறுதினத்தின் சிலமணிநேரங்களை பொதுநோக்கிற்காக செலவிட்ட எமது செயற்குழு உறுப்பினர்கள் போற்றுதற்குரியவர்கள். கூட்டங்களில் சங்க நடவடிக்கைகள் உட்பட பொது விடயங்கள் பலவும் பேசப்பட்டிருக்கின்றன. இந்த செயற்குழுவில் இருக்கின்ற ஜனநாயக நிலைப்பாடும் உறுப்பினர்களிடையே கட்டி எழுப்பப்படுகின்ற புரிந்துணர்வும் பொறுப்பும் கூட்டாக வேலை செய்கின்ற முறையும்தான் சங்கம் இந்த அளவு வேலை செய்யக்கூடியதாக உள்ளது என நம்புகிறேன்.

மேலும், இந்த ஆண்டும் வித்தியாலவிழாவும், மலர்வெளியீடும் இடம்பெறுகின்றது. பாடசாலைக்கிராமத்தையும், அதைச்சூழவுள்ள கிராமமக்களையும் ஒன்றிணைத்த ஒன்றுகூடலாக நடக்கின்ற இந்த நிகழ்வு எம் மக்கள் மத்தியில் பொதுச்சேவையின்பால் ஓர் ஈர்ப்பை ஏற்படுத்து உந்துசக்தியாக அமையுமென நம்புகிறேன்.

அன்புடன்
யா. பாலகிருஷ்ணன்



படிப்பகம்

www.padippakam.com





# செயலாளரிடமிருந்து...

இரண்டு மாதங்களுக்கு முன்னர் பாடசாலைக்கு செல்லும் சந்தர்ப்பம் கிடைத்தது. பாடசாலையின் வளர்ச்சிக்கு அதிபர், ஆசிரியர்கள், நலன்விரும்பிகள் மிகவும் அக்கறையுடன் செயல்படுவதைக் காணக் கூடியதாக இருந்தது. இருப்பினும் வெளிநாடுகளிலுள்ள சங்கங்களுக்கிடையிலும், பாடசாலை சமூகத்துக்கிடையிலும் நல்ல ஒருங்கிணைப்பு (coordiantion) அமையாதது பெருங்குறையாக உள்ளது. எமது சங்கமும் ஏதாவது செய்துதான் ஆக வேண்டுமென்ற நோக்கில் விளையாட்டு மைதானத்திற்கான காணிகளை மனமுவந்து விற்றோரிடம் வாங்கி கல்லூரிக்கு அளிக்கிறது. இதைவிட வேறு வழியில் ஏதேனும் உதவி செய்யவும் சங்கம் தயாராக உள்ளபோதிலும் அதற்கான சரியான நடைமுறைபடுத்தக் கூடிய திட்டங்கள் ஒன்றையும் முன்வைத்ததாக தெரியவில்லை. கல்லூரியில் சில வேறு பணிகள் மேற்கொள்வதற்கு அங்குள்ள எல்லா சாத்தியக்கூறுகளும் சரியாக அமையாதது விசனத்துக்குரியது. கணனிகள் வாங்கிக் கொடுக்கலாமென்று முயன்றும் அது ஈடேறவில்லை, அதைவிட அங்கு கணனி கற்பிக்க வேண்டிய கணனி அறையும், கணனிகளும் உள்ளன. ஆனால் கற்பிப்பாரின்றி வீணாகக்கிடக்கின்றது. இதற்கு ஒரு ஆசிரியரை நியமித்தல் இன்றியமையாதது ஆகும். கல்லூரி நிர்வாகத்தினர்தான் இதற்கு ஒரு ஆசிரியரை நியமிக்க முயற்சி எடுக்க வேண்டும்.

பல ஆசிரியர்கள் தூர இடத்திலுருந்து வந்து பல கஸ்ரத்துக்கு மத்தியிலும் பணி ஆற்றுவது கண் கூடாகத் தெரிகிறது.

இங்குள்ள பழைய மாணவ மாணவிகள் சங்கத்தில் தானாக செயலாற்ற முன்வர வேண்டும். இவ்வகையில் கல்லூரியின் பழைய மாணவர் திரு. சந்திரகுமார் அவர்களை இவ்வருட வித்தியாலய விழா 2005 இல் பிரதம விருந்தினராக அழைத்திருக்கும் அங்கத்தினர்களின் முயற்சி வரவேற்கத்தக்கது. அத்துடன் அவர்கள் வேறு வழிகளில் இன்னும் சிறப்பாக இயங்கலாம் என்ற கருத்துடையவர்களையும் தங்கள் கருத்துகளை கூற சந்தர்ப்பம் வழங்கியது பாராட்டத்தக்கது.

இராணுவ முகாம் 100 மீட்டரில் இருப்பதால் கல்லூரி சமூகத்தினர் பல இடர்களுக்கு இடையிலும், கல்லூரியை நடத்தி செல்வது சிரமமான காரியமே. ஆகவே இச்சமூகத்திற்கு அவர்களது சகோதரர்களாகிய நாங்கள் ஒன்று சேர்ந்து இவ்வுதவிகளை செய்யவேண்டியது எங்கள் கடப்பாடாகும்.

கடந்தவருடம் பிரான்ஸ் கிளையினராகிய நாம் எமது கல்லூரிக்கு றோணியோ இயந்திரம், போட்டோ கொப்பி இயந்திரம், தொலைநகல் இயந்திரம் ஆகியவற்றை வழங்கியதுடன் 6ம்தர மாணவர்களுக்கு அப்பியாசக்கொப்பிகளையும் வழங்கியிருந்தோம். மேலும் மாணவர்களின் கல்வி வளற்சிக்கு பங்காற்ற வேண்டியவர்களாக இருக்கிறோம்.
இவற்றை மனதில் நிறுத்தி மேலும் புதிய அங்கத்தவர்களை சேர்த்து, சங்கத்துக்கும், கல்லூரி சமூகத்திற்கும் செயலாற்ற வேண்டுமென்று எல்லோரையும் அன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

செயலாளர்
**நா. மகேந்திரன்.**
16-10-2005



படிப்பகம்

www.padippakam.com



# வேலணை மத்திய மகா வித்தியாலயம் பிரான்சுக் கிளையின் 2004/2005 ம் ஆண்டுக்கான வரவு செலவு விபரம்

(01.07.2004 - 15.10.2005)

## சந்தா / நன்கொடை

| பெயர் | தொகை |
|---|---|
| திரு. செ. தேவன் | 50,00 € |
| திரு. க. நவரத்தினம் | 50,00 € |
| திரு. க. தவச்செல்வம் | 50,00 € |
| திரு. நா.மகேந்தரன் | 50,00 € |
| திரு. மு. கேதீஸ்வரன் | 50,00 € |
| திரு. செ. பாஸ்கரன் | 50,00 € |
| திரு. மகிழினன் | 50,00 € |
| திரு. செ. சிறீபாஸ்கரன் | 200,00 € |
| திரு. நா. மகேந்திரன் | 100,00 € |
| திரு. தி. ஞானசொரூபன் | 50,00 € |
| திரு. யா. பாலகிருஷ்ணன் | 500,00 € |
| திரு. செ. சிறீதரன் | 50,00 € |
| திரு. சி. பாலச்சந்திரன் | 50,00 € |
| திரு. க. வாசுதேவன் | 50,00 € |
| திரு. கு. விக்னராசா | 50,00 € |
| திரு. த. சந்திரகுமார் | 50,00 € |
| திரு. கு. குணாளன் | 50,00 € |
| திரு. கு. சிறீஸ்கந்தராசா | 50,00 € |
| திரு. சு. பாஸ்கரன் | 50,00 € |
| திரு. சிறீஸ்கந்தன் (வீனஸ்) | 50,00 € |
| திரு. இன்பராசன் | 50,00 € |
| திரு. மா. சிறிகாந்தன் | 50,00 € |
| திருமதி. திலகவதி பரராசசேகரன் | 50,00 € |
| திரு. P. வசந்ததராசன் | 50,00 € |
| திரு. கே. கேதீஸ்வரன் | 150,00 € |
| திரு. மா. வசந்தராசா | 50,00 € |
| திரு. ப. கந்தப்பிள்ளை | 50,00 € |
| திரு. சு. கருணாநிதி | 50,00 € |
| திரு. யா. பாலகிருஷ்ணன் | 1500,00 € |
| திரு. சு. பாஸ்கரன் | 500,00 € |
| திரு. கு. சிறீஸ்கந்தராசா | 150,00 € |
| திரு. செ. சிறீபாஸ்கரன் | 500,00 € |
| திரு. செ. சிறீதரன் | 150,00 € |
| திரு. கு. விக்னராசா | 100,00 € |
| திரு. த. சந்திரகுமார் | 200,00 € |
| திரு. S. தங்கேஸ் | 100,00 € |
| திரு. சி. பாலச்சந்திரன் | 100,00 € |
| திரு. மு. கேதீஸ்வரன் | 300,00 € |
| திரு. நா. மகேந்திரன் | 500,00 € |
| திரு. செ. தேவன் | 50,00 € |
| திரு. க. வரதராசா | 100,00 € |
| திரு. சோ. கந்தவேள் | 100,00 € |
| திரு. சோ. கந்தசாமி | 50,00 € |
| மொத்தம் | 6550,00 € |

## சுனாமி

| பெயர் | தொகை |
|---|---|
| திரு. செ. சிறீபாஸ்கரன் | 100,00 € |
| திரு. யா. பாலகிருஷ்ணன் | 100,00 € |
| திரு. கு. விக்னராசா | 100,00 € |
| திரு. கு. குணாளன் | 100,00 € |
| திரு. த. சந்திரகுமார் | 100,00 € |
| Extra Exchange | 1000,00 € |
| திரு. நா. மகேந்திரன் | 100,00 € |
| திரு. சு. கருணாநிதி | 100,00 € |
| திரு. செ. சிறீதரன் | 100,00 € |
| திரு. மு. கேதீஸ்வரன் | 50,00 € |
| திரு. ப. கந்தப்பிள்ளை | 50,00 € |
| திரு. செ. சுந்தரலிங்கம் | 50,00 € |
| திரு. செ. மகிழினன் | 50,00 € |
| மொத்தம் | 2000,00 € |

| வரவு | தொகை |
|---|---|
| நன்கொடை / சந்தா | 6550,00 € |
| சுனாமி | 2000,00 € |
| மொத்த வரவு | 8550,00 € |
| 30.06.2004 இல் கை இருப்பு | 3476,90 € |
| மொத்தம் | 12026,90 € |

| செலவு | தொகை |
|---|---|
| பொதுச்சபை கூட்ட மண்டபவாடகை | 1100,00 € |
| ஒலிபெருக்கி மைக் | 100,00 € |
| போட்டோ கொப்பி (Copie la Chapelle) | 312,00 € |
| பாடசாலைக்கு றோணியோ, கொப்பி | 2355,00 € |
| சுனாமி நிதி TRO இற்கு | 2500,00 € |
| மண்டப முற்பணம் (2005) | 100,00 € |
| மைதானக் காணிக்கு அனுப்பியது | 3020,00 € |
| மைதானக் காணிக்கு அனுப்பியது | 1170,00 € |
| **மொத்த செலவு** | **8057,00 €** |
| 15.10.2005 இல் கையிருப்பு | 839,90 € |
| **மொத்தம்** | **12026,90 €** |




பொருளாளர்
சு. கருணாநிதி



படிப்பகம்

www.padippakam.com





# வைர விழாக்காணும் வேலணை மத்திய கல்லூரி

இத்தாலியிலிருந்து பழைய மாணவன்
நாரந்தனையூர் V. **குமரன்**

**மு**ழுத் தீவுப்பகுதிக்கும் ஒரு முன்னணிக் கல்வி நிறுவனமாகத் திகழ்வது வேலணை சேர் வைத்தியலிங்கம் துரைச்சுவாமி மத்திய மகா வித்தியாலயம் என்றால் அது மிகையாகாது. பன்னெடுங்காலமாகத் தன் கல்விப் பணியை ஆற்றி வருவது உலகறிந்த விடயம். அனைத்து தீவுகளிலுமிருந்து இக்கல்லூரியின் விடுதிகளில் தங்கியிருந்து கல்வி கற்று இலங்கையிலும் புலம்பெயர் நாடுகளிலும் நன்நிலையில் வாழுபவர்கள் ஏராளம். அது மட்டுமின்றி கல்லூரியின் வளர்ச்சிக்கு தம்மாலான பணிகளையும் செய்துகொண்டிருக்கிறார்கள்.

இக் கல்லூரியின் பொற்க்காலம் எனச் சொல்லப்படுகின்ற தன் சொந்த மண்ணிலிருந்த 1991ம் ஆண்டின் இடப்பெயர்வின் பின் மீண்டும் 1996ம் ஆண்டு முதல் தன் சொந்த இடத்தில் இயங்கிக் கொண்டிருப்பதேயாகும். ஆரம்ப காலத்தில் இருந்ததோடு ஒப்பிட்டு பார்க்கும்போது தற்போது 700 மாணவர்களும் 37 ஆசிரியர்களுமே இங்கு உள்ளனர். கல்லூரியின் எல்லையில் கடற்படை முகாம் ஒன்று அமைந்துள்ளது. இதனால் பிரதான பாதை தடைசெய்யப்பட்டுள்ளது. அதிபர், ஆசிரியர், மாணவர்கள் மட்டுமே தடையை தாண்டி செல்லுவதற்கு அனுமதி வழங்கப்படுகிறது. ஏனையோருக்குத் தடை விதிக்கப்பட்டுள்ளது. மூன்று பேருந்து பாதைகள் (778,779,780) தடை காரணமாக கலலூரிச் செயற்பாடுகளில் பெரும் இடையூறு காணப்படுகிறது. முகாமை அகற்றுவதற்கும், பாதையை திறப்பதற்கும், கல்லூரி நிர்வாகம் பல முயற்களை மேற்கொண்ட போதும் எவையும் பயனளிக்கவில்லை.

பல மாணவர்கள் சேர்ந்து கற்பதற்குரிய விருப்பத்தை கொண்டிருந்தபோதும் இந்த முகாம் அவர்களுக்கு பெரும் அச்சுறுத்தலாக இருக்கிறது. உலக வங்கியின் அபிவிருத்தி திட்டத்தோடு ஆண், பெண் விடுதிகள் 25 இலட்சம் ரூபா செலவில் புனரமைக்கப்பட்டுள்ளது. விடுதிகள் அரம்பிப்பதற்குரிய முயற்சிகள் மேற்கொள்ளப்பட்ட போதும் அருகே உள்ள முகாம் பெரும் தடையாக உள்ளது. இவ்விடுதி ஆரம்பிக்கப்படும் பட்சத்தில் வீடுகளில் இருந்து கற்பதற்கு வசதி இல்லாத மாணவர்களுக்கு பெரும் வரப்பிரசாதமாக அமையும். அது மட்டுமின்றி ஏனைய தீவுகளில் வாழுகின்ற மக்களுக்கு இதனால் பெரும் பயன் கிடைக்கும்.

இலங்கையில் தோற்றம் பெற்ற 54 கல்லூரிகளிலே எமது கல்லூரியும் ஒன்றாகும். சோல்பரி பிரபுவினால் அடிக்கல் நாட்டப்பட்டு முன்னால் பிரதமர் சேர் ஜோன் கொத்தலாவல அவர்களால் திறந்து வைக்கப்பட்டது. பாரம்பரியம்மிக்க அக்கல்லூரியின் செயற்பாடுகள் தற்போது துரித கதியில் முன்னேற ஆரம்பித்துள்ளது. இதன் வெளிப்பாடாக இந்த வருடம் எட்டு மாணவர்கள் பல்கலைக்கழக அனுமதி பெற்றிருக்கிறார்கள். விளையாட்டுத்துறையிலும் மிக அண்மைக்காலமாக பாரிய வளர்ச்சியை எட்டியுள்ளோம். கடந்த வருடம் உதைப்பந்தாட்டப் போட்டியிலே வடகிழக்கு மாகாண மட்டத்திலே தெரிவாகி திருகோணமலை சென்று விளையாடியது. இவ்வாறு பல்வேறு வகையிலும் பாடசாலையின் வளர்ச்சி வேகம் பெற்று வருகிறது.

இந்த வகையில் கல்லூரியின் பழைய மாணவர் சங்கம் பல்வேறு வகையிலும் இக்கல்லூரியின் வளர்ச்சிக்கு உதவி வருவதை இவ்வேளையில் சுட்டிக்காட்ட வேண்டியுள்ளது. தாய்ச்சங்கம் வேலணையிலும் துணைச்சங்கம் பிரான்ஸ், இலண்டன், கனடா, அவுஸ்திரேலியா, கொழும்பு, போன்ற இடங்களில் செயற்பட்டு வருகின்றன. கனடாவில் கிளைச் சங்கம் மந்த நிலையை அடைந்துள்ளது. இக்கிளைகளில் இலண்டன் கிளையினர் மாணவர்களுக்கான மதிய உணவைத் தினந்தோறும் வழங்குவதற்கு ஏற்பாடு செய்துள்ளனர். பிரான்ஸ் கிளையினர் விளையாட்டு மைதானப் புனர் அமைப்பிற்கும், நூலக அபிவிருத்திக்கும்,




படிப்பகம்

www.padippakam.com



உதவியதுடன் பல்வேறு காணிகளையும் பாடசாலைக்காக கொள்வனவு செய்து கொடுத்துள்ளார்கள். அவுஸ்திரேலிய கிளையினர் புலமைப்பரிசில் திட்டங்களை ஏற்பாடு செய்ததுடன் நூல் நிலையை அபிவிருத்திக்கும் உதவியுள்ளனர். கொழும்புக் கிளையினர் மதிற்சுவர், இவர்கள் அனைவரினதும் செயற்பாடுகளைக் கல்லூரி மனதார வரவேற்கின்றது.

அதே வேளை பாடசாலை ஆரம்பித்து இவ்வருடம் தனது வைர விழாவைக் கொண்டாடுவதுடன் பாடசாலையின் பரிசளிப்பு வைபவம் எதிர்வரும் நவம்பர் மாதம் 1ம் திகதி நடைபெறுகிறது. இதனால் பாடசாலைக் கட்டடங்கள் புனரமைப்புச் செய்யப்படுவதுடன் வர்ணப் பூச்சு வேலைகளும் அவசியமாகிறது. இவைகளைச் செய்யக்கூடிய வசதிகள் இருந்தும் போக்குவரத்து இடையூறுகள் இவற்றைத் தடைசெய்கிறது. எனவே எமது பாடசாலையின் வளர்ச்சியே தீவகத்தின் வளர்ச்சியாக அமையும். ஆனாலும் அண்மையில் உள்ள கடற்படைமுகாம் எம் நோக்கங்கள் எல்லாவற்றையும் தலைகீழாக மாற்றுவதாகவே உள்ளது. பிரதான பாதை அருகில் இருந்து இம்முகாமை உள்ளாக இடம்பெயரச் செய்வதோ அல்லது முற்றாக அகற்றுவதோதான் பாடசாலை வளர்ச்சிக்கு முக்கியமாக அமையும். மாணவர்கள் எண்ணிக்கையை அதிகரிக்கவும் பாடசாலைக்கு அண்மையில் மக்கள் குடியேறவும் வசதியாக இருக்கும். அத்தோடு, மெல்லக் கற்கும் மாணவர்களே எம் கல்லூரியில் அதிகமாகும். கணித, விஞ்ஞான, ஆங்கில பாடங்களில் அறிவு மட்டம் குறைவாகவே உள்ளன. இவர்களுக்கான பிரத்தியேக வகுப்புக்களை நடாத்தவேண்டிய தேவையும் உள்ளது. இவற்றுக்கான நிதிகளை புலம் பெயர் பழைய மாணவர்களாகிய நாமே செய்யவேண்டியுள்ளது. அத்தோடு இத்தகைய செயற்பாடுகளுக்கு புலம் பெயர் மாணவர்களுக்கிடையேயான தொடர்பாடல் இருக்கவேண்டியது அவசியமாகிறது. அதற்காக பாடசாலைப் பெயரில் இணையத்தளம் ஒன்றை உருவாக்க வேண்டியது ஆரோக்கியமானது என்றே நினைக்கின்றேன். இச் செயற்பாடுகளில் ஒன்றுபட்டு பாடசாலையின் வளர்ச்சிக்கும், எமது எதிர்கால சந்ததிக்கும் உழைப்போம். ●



எங்கள் பாடசாலையில் கணனிகள் காத்துக்கிடக்கின்றன...
ஆசிரியருமின்றி, மாணவருமின்றி



படிப்பகம்

www.padippakam.com



# மனதில் பதிந்த அதிபர் அமரர் செ. குணபாலசிங்கம்



மனிதன் மனிதனாக வாழ முற்படுகின்றபோது அவன் தெய்வ நிலைக்குத் தள்ளப்படுகின்றான். இதனால்த்தான் வள்ளுவன் «வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவன் வானுறையும் தெய்வத்துக்குச் சமனாக மதிக்கப்படுவான்.» என்றான். அந்த வகையில் வாழ்ந்து காட்டி அதன் விளைவாய் மாணவரினதும், ஆசிரியரினதும், சமூகத்தினதும் நன்மதிப்பைப் பெற்றவர் அமரர் செல்லையா குணபாலசிங்கம் அவர்கள். எமது பாடசாலையில் எழுபதுகளில் இருந்து எண்பது வரை பணியாற்றி மாணவர்களின் மனங்களில் நிறைந்தவர்.

மிகவும் எளிமையாக, இனிமையாகப் பழகத் தெரிந்தவர், ஆசிரியப் பண்பும், தாய்மைப் பண்பும் மிக்கவர். பல ஆயிரக்கணக்கான பிள்ளைகளை தன் பிள்ளைகளாக வரித்துக் கொண்டவர். அதிபராக, ஆசிரியராக மட்டுமல்லாது நண்பராகவும், மாணவர்களோடு மாணவர்களாகவும் பழகத் தெரிந்தவர்.

மனம் குழைய வைக்கும் அதேவேளை புளகாங்கிதம் அடைய வைக்கும் நிகழ்வை அவரின் புனிதம் கருதிக் குறிப்பிட விரும்புகிறேன். ஆசிரியர் சொல்ல மாணவர் எழுதியதைப் பார்த்திருக்கிறோம். அதிபர் சொல்ல ஆசிரியர் குறிப்பெழுதியதைப் பார்த்திருக்கிறோம். மாணவன் சொல்ல அதிபர் குறிப்பெழுதியதைப் பார்த்திருக்கிறோமா?. அது என் வாழ்வில் கிடைத்தது. நான் கவிதை சொல்ல அதைத்தானே எழுதுகிறேன் என்று முன்வந்து எழுதியமை அவரின் அப்பழுக்கற்ற தன்மையைக் காட்டியது. இந்த நிலைக்கு இறங்கி வந்து செயலாற்ற இறைத்தன்மை வேண்டும். நல்லதோர் நோக்கு வேண்டும். இதனால்தான் மேன்நிலையில் இருந்து கீழ் இறங்கி வந்து தொண்டாற்றுபவரை இறை அவதாரங்கள் என்று நம் முன்னோர்கள் சொல்லிப்போயினர். மேல் நிலையில் இருந்து ஒருவன் கீழ் நிலைக்கு உள்ளத் தூய்மையோடு செயலாற்றும்போது இறைத்துவத்தை காணலாம்.

அத்தகையோர் நிலையினை அதிபர் குணபாலசிங்கம் அவர்களிடம் கண்டேன்.

அவர் வாயில் அடிக்கடி உதிர்க்கும் வார்த்தை இவைதான் அதை அப்படியே தருகிறேன்.

«மாணவர்களின் கல்வி ஒழுக்கம்
பண்பாடு ஆன்மீகம் ஆகியவற்றை
வளர்ப்பதற்காகத்தான் பாடசாலையும்
ஆசிரியர்களும் கடமையாற்ற வேண்டும்»
என்பதேயது.

பாடசாலை மட்டத்தில் கற்றல், கற்பித்தல், பண்பாடு, ஒழுக்கம் என்பவற்றை மாணவர் மத்தியில் வளர்க்க தன் ஆற்றலையும் சக்தியையும் பிரயோகித்து அதில் வெற்றியும் கண்டவர்.

பெரியவர், சிறியவர் என்ற பாகுபாடு இல்லாது அனைவருடனும் அன்பாகவும் பண்பாகவும் பழகும் சுபாவம் உடைய அவர் எமது பாடசாலையின் வளர்ச்சியில் வீடுதோறும் சென்று நிதி திரட்டுவதிலும் ஈடுபட்ட பெருமைக்குரியவர்.

அதிபர் அவர்களுடைய துணைவியார் திருமதி. குணபாலசிங்கம் அவர்களுடைய ஒத்துழைப்பும், நல்லிணக்கமும் பெரும் பணிக்கு உதவியது என்பதுவும் மறப்பதற்கில்லை.

கடமையே குறியாகக் கொண்ட அதிபர் தன் மெய் வருத்தம் பாராது பசிநோக்காது எமது பாடசாலையின் வளர்ச்சிக்கு அயராது உழைத்தவர்.



படிப்பகம்

www.padippakam.com



எமது பாடசாலையில் ஒன்பது ஆண்டு கால அவரது சேவையின்போது பல இன்னல்களையும், இடர்களையும் சந்தித்தவர். போட்டிக்கும், பொறாமைக்கும், பூசல்களுக்கும் முகம் கொடுத்து தன்னுடைய அதிபர் என்கின்ற புனிதத் தன்மையை நிலை நிறுத்தி மாணவருடைய கல்வி வளர்ச்சியிலே கண்ணும் கருத்துமாய் இருந்தவர். ஆதலினால் மாணவர் மனங்களில் இன்றும் நிறைந்து காணப்படுகிறார். அவரது அந்த ஒப்பற்ற பணி தொடராக எமது பாடசாலைக்குக் கிடைக்காமல் போனதற்கும் காரணம் உண்டு. அது ஒரு சிலரின் சுயநலத்துக்காக ஆடப்பட்ட சூதாட்டம். அந்தச் சூதாட்டத்தில் பலிக்கடாவாக ஆக விரும்பாத அதிபர் மாணவர்களை விட்டுப்போக மனமில்லாமல் மனவேதனையுடன் வெளியேறியதே உண்மை என்று உணரும்போது நெஞ்சம் கனக்கிறது.

நிறைகுடம் தளம்பாது என்று சொல்வார்கள். அதற்கமையவே அவர் பழையவற்றை மறந்து பாடசாலை வளர்ச்சிக்காக அபிப்பிராயம் கேட்டவர்களுக்கும், ஆலோசனை கேட்டவர்களுக்கும் தான் இறக்கும் வரை இறவாத பல திட்டங்களையும், ஆலோசனைகளையும் நல்கி வந்தவர் என்பதைப் பார்க்கும்போது அவரிடம் குடி கொண்டிருந்த அந்த வெள்ளையுள்ளம் கால வெள்ளத்தால் அடித்துச் செல்லப்பட்டது உண்மையாக இருந்தபோதும் அவர் நினைவு மனதில் பதிந்த நினைவாக என்றும் மாணவர் மனங்களில் மரணத்தை வென்று வாழும்.



தமிழ்மணி
**செல்லையா தேவன்**
சரவணை கிழக்கு
வேலணை



# சொல்லவேண்டியிருப்பதால் எழுதுகிறேன்...

**- செ. ஸ்ரீபாஸ்கரன் -**

புலம்பெயர் சூழ்நிலையில் நாம் எம்மையும், எம்மைச் சார்ந்தவர்களையும் கவனித்துக் கொண்டு எமது அகப்புறச் சூழ்நிலைகளுக்கு முகம் கொடுத்துக் கொண்டு வாழ வேண்டியவர்களாக இருக்கிறோம். சுருங்கக் கூறின் இது ஒரு இயந்திரமயமான வாழ்க்கை முறை. இது யாருக்கும் விதி விலக்கானதல்ல. எல்லோருக்கும் ஏற்புடையது.

இத்தகைய ஒரு சூழ்நிலையில் வாழ்ந்து கொண்டு ஒரு சமூகப் பணியில் ஈடுபடுவதென்பது எல்லோராலும் முடியாத காரியம். அதையும் மீறி அந்தப் பணியில் ஈடுபடுகிறார்கள் என்றால் அவர்கள் போற்றுவதற்குரியவர்கள். வரவேற்கப்பட வேண்டியவர்கள். வெளியில் நின்று பார்ப்போரின் ஏளனத்துக்குரியவர்கள் அல்லர்.

அதுமட்டுமல்லாமல் யாருக்காக அவர்கள் சமூகப் பணியில் ஈடுபடுகிறார்களோ அந்த சமூகப்பணியில் ஈடுபடுகின்ற அந்தச் சமூகம் அவர்களுடைய இந்தச் சிரமமான பணியினைப் புரிந்து கொண்டவர்களாகவும், அவருடைய நல்ல நோக்கங்களை உணர்ந்தவர்களாகவும் அதன் வழி செயற்படுபவர்களாகவும் இருத்தல் வேண்டும். ஏனோ தானோ என்ற செயற்பாட்டுக்கு இடமளிக்கக் கூடாது.

இரு பகுதியினரிடையும் ஒருமித்த வகையில் செயல் திறன் அமைகின்றபோதுதான் அதன் நோக்கம் இனிதே நிறைவேறும்.

எமது வேலணை மத்திய மகா வித்தியாலயம் பழைய மாணவர் பிரெஞ்சுக் கிளையானது 92ம் ஆண்டு முதல் இயங்கி வருவது யாவரும் அறிந்ததே. சிற்சில ஆண்டுகள் தலைமை மாற்றம் பெற்றாலும், மாற்றம் பெறும் தலைமைகள் மறு ஆண்டோ அல்லது வரும் ஆண்டிலோ அது சுமை எனக் கருதி மற்றவர்கள் தலையில் மீண்டும் ஏற்றி வைப்பது வழமையான நிகழ்வாகவே இருந்து வருகிறது.

நானும் இரண்டு தடவைகள் தலைவராகத் தெரிவு செய்யப்பட்ட போதும் எனது சூழ்நிலையைக் கருத்தில்



படிப்பகம்

www.padippakam.com



கொண்டு அப்பொறுப்பை ஏற்க மறுத்து சாதாரண நிர்வாக உறுப்பினராக இருந்து கொண்டு என்னாலான உதவியைச் செய்து வருகிறேன். இதனை ஏன் குறிப்பிடுகிறேன் என்றால் எம்மால் பொறுப்பிலிருந்து ஒன்றைச் செய்ய முடியவில்லையானால் எம்மால் இயன்ற உதவியைச் செய்தல் வேண்டும். அதை விடுத்துத் தடைகளாக நாம் இருக்கக் கூடாது என்பதை வலியுறுத்துவதற்காகவே.

சங்க உறுப்பினர்கள் மத்தியில் பல்வேறுபட்ட கருத்துக்கள், சிந்தனைகள் இருக்கலாம். அவை எம்மிடையே பேசித் தீர்க்கப்பட வேண்டியவை. நல்லது கெட்டது அறியப்பட வேண்டியவை. உள் நின்றவாறே உண்மைகள் உணர்த்தப்பட வேண்டியவை வழி வகைகள் காணப்பட வேண்டியவை. அப்போதுதான் சங்கச் செயற்பாடுகள் யாவும் திறன் மிக்கதாய் இருக்கும். அதைவிடுத்து வெளியில் நின்று வாயில் வந்தவாறு சொல்வது ஒரு இயலாத் தன்மையைக் காட்டுவதோடு சங்கத்தினுடைய வளர்ச்சிக்குத் தடையாகவே அமையும். இது எமது பாடசாலைச் சமூகத்தையே ஒட்டு மொத்தமாகப் பாதிக்கும்.


இதற்கும் மேலாய் இந்தப் பணியில் ஒரு நிமிடத்தைத் தானும் செலவழிக்காதவர்கள் வேறு எந்தவிதாமான பங்களிப்புகளையும் செய்யாதவர்கள் கூட அவர் சொன்னார், இவர் சொன்னார் என்று சங்க நிர்வாகத்தைக் குறை கூறுவது என்பது மிகவும் வேதனைக்குரிய விடயமாகும். இதனை நினைக்கும்போது செய் அல்லது செய்யவிடு என்பதுதான் என் மனத்தளவில் எழுகின்றது.

அடுத்து குறிப்பிட்ட ஒரு சிலரே அதுவும் வேலணையைச் சேர்ந்தவர்களே நிர்வாக உறுப்பினர்களாக இருக்கிறார்கள் என்ற குற்றச்சாட்டு பரவலாக பாடசாலை சார்ந்த மட்டத்திலும் புலம் பெயர்ந்து வாழ்வோர் மட்டத்திலும் பேசப்படுகிறது. இதை நினைக்கும்போது ஆச்சரியமாக இருக்கிறது.

பொதுக் கூட்டத்திற்கு எல்லோரும் அறியும் வகையில் அழைப்பு விடுவிக்கப்பட்டபோதும் அங்கு எத்தனை பேர் வருகிறார்கள் என்பதும் நிர்வாக உறுப்பினர் தெரிவின்போது எத்தனை பேர் ஒளிவு மறைவில்லாமல் முன் நின்று உதவுகிறார்கள் என்பதுவும் நேரில் வந்து பார்ப்பவர்களுக்கு மட்டும்தான் புரியும். திரைமறைவில் இருந்து பேச்சுக்காய்க் கதைப்பவர்களுக்கும் அதைக் கேள்விப்படுபவர்களுக்கும் எங்கே புரியப் போகிறது. ஆனாலும் எம்மோடு சேர்ந்து ஒத்துழைப்பவர்களையும் நான் மறக்கவில்லை.

வேலணை மத்திய மகா வித்தியாலயமானது தீவகத்தைச் சார்ந்தவர்களுக்கு மட்டுமல்லாது ஏனையோரையும் அரவணைத்து நற்கல்வி புகட்டிய ஆலயம் என்றால் அதை மறைப்பதற்கோ மறுப்பதற்கோ இல்லை. எனவே குறுகிய வட்டத்துக்குள் நில்லாது இந்தப் பாடசாலையின் வளர்ச்சிக்கு பாடசாலைச் சமூகத்தின் வளர்ச்சிக்கு உதவ விரும்பும் நல்லெண்ணம் கொண்ட அனைவரும் வரவேற்கப்படுவார்கள் என்பதே உண்மை வாருங்கள் எங்கள் கலைத்தாயின் வளர்ச்சிக்கு ஒன்றுபட்டு உதவுவோம்.

எமது பாடசாலையின் பழையமாணவர்சங்க லண்டன் கிளையினரால் மாணவர்களுக்கு மதிய உணவு வழங்கப்பட்டுவருகிறது.





படிப்பகம்

www.padippakam.com





95/22, K.K.S Road,
Thalayali,
Jaffna,
Sri Lanka
16-07-2005

வேலணை மத்திய மகா வித்தியாலயம்
பழைய மாணவர் சங்கம்
கௌரவ காரியதரிசி ஊடாக!

தலைவர் திரு. பொ. அருணகிரிநாதன் அவர்கட்கும்
ஏனைய அங்கத்தவர்கட்கும், அனைத்து பழைய மாணவர் சங்க அங்கத்தவர்கட்கும்!

**அமரரான எனது கணவரின் அன்புக்குரியவர்களும், அவர் மீது எல்லையில்லா அன்பும் மதிப்பும் கொண்டிருக்கும் அன்பு உள்ளங்கள் அனைவருக்கும், அவரை இழந்து தவிக்கும் மனைவியின் மடல்.**

உங்கள் அன்புக் கடிதத்திற்கும், அனுதாபச் செய்திகளுக்கும், ஆறுதல் வார்த்தைகளுக்கும் எவ்வாறு நன்றி கூறுவதெனத் தெரியவல்லை. எனது கணவரின் திடீர் மறைவு எனக்குப் பேரதிர்ச்சியானதுடன், தற்பொழுது என் சிந்தனையையும், புத்தியையும் பேதலித்துள்ளது எனலாம். உங்களுக்கு நன்றி கூறச் சொற்பிரயோகமே கடினமாக இருக்கிறது. எனக்கு நேர்ந்த ஈடு செய்ய முடியாத இழப்பின் மத்தியிலும் வேலணை மத்திய மகா வித்தியாலய மாணவர்கள், ஆசிரியர்கள், பெற்றோர்கள் ஏன் சப்த தீவக சமூகமுமே உலகில் எப்பாகத்தில் இருந்தாலும் தங்கள் மறைந்த அதிபர்பால் கொண்டிருக்கும் அன்பும் மதிப்பும் எனக்கொரு பெரிய ஆறுதலாகவும், அழியாச் சொத்தாகவும், மனக்கவலை தணிக்கும் அருமருந்தாகவும் அமைந்துள்ளது. அமரர் தங்கள் மண்ணை நேசித்தமையால் அங்கு கடமைக்கு வந்தாரில்லை. ஆனால் தங்களது மண்ணின் மகிமையும், அம்மண்ணின் மைந்தர்களாகிய உங்கள் எல்லோரது பண்பும், பாசமும் அவரை வேலணையுடன் பிணைத்துவிட்டது. என்பதை நன்குணர்ந்திருந்தேன். அவர் தேடி வைத்துச் சென்ற உலகளாவிய வேலணை மத்திய மகா வித்தியாலய உறவுகள் அனைத்தும் நான் தனிமையாக்கப்படவில்லை என்னும் மனச்சாந்தியைத் தருகிறது.

அவரது நினைவு மலர் வெளியீட்டில் நான் பங்குகொள்ள முடியாத நிலையில் இருந்தேன். உண்மையில் வெளிநாடுகளில் உள்ள அவரது பாடசாலைச் சமூகத்தின் செய்திகளையும், ஆக்கங்களையும் சேர்ந்திருந்தால் ஆத்ம திருப்தி அடைந்திருப்பார் என்பது நிச்சயம். நான் தனியே கலங்கி நிற்கும் நிலையில் தங்களிடம் இருந்து ஆக்கங்களைப் பெறமுடியவில்லை. மேலும் தங்கள் செய்திகள் கிடைக்கும்போது அச்சிடும் வேலை முடிவுற்றதனால் அவற்றைச் சேர்க்கவும் முடியவில்லை எனக் கவலைப்படுகின்றேன். இந்நிலையில் மன்னித்து விடுவீர்கள் என நம்புகின்றேன். அவர் விட்டுச் சென்ற அன்புச் செல்வத்தையும், மனமார்ந்த உறவுகளையும் அவர் வழியே நானும் பேணி வளர்ப்பேன். ஆயினும் அவரைப்போல் உறவினைத் தொடரும் ஆற்றலும் அதனைப்பேணும் திறமையும் எனக்கில்லை என்றுதான் நினைக்கிறேன்.
உங்கள் அனைவருக்கும் எனது உளமார்ந்த நன்றிகள் உரித்தாகட்டும்.

**திருமதி. நித்தியலட்சுமி குணபாலசிங்கம்**
T.P. N° 077-6621806



படிப்பகம்

உலகத்தமிழ்ப் பண்பாட்டு இயக்கம் - ஐரோப்பிய ஒன்றியம்
*INTERNATIONAL MOVEMENT FOR TAMIL CULTURE - EUROPEAN UNION*
(European Union President of I.M.T.C. - Mr.Thurai.Ganesalingam)

Salzbergener Straße 142, 48431 Rheine, Germany
Tel: (0049)5971-14258 Fax: (0049)5971-804639

# வாழ்த்துச்செய்தி

மனதார வாழ்த்திடுவேன்
வாயாரப் புகழ்ந்திடுவேன்
மாபெரும் சேவைபுரிய
ஆசிதன்னைப் புகன்றிடுவேன்
மாணவர் பணி அரும்பணி
அதற்கே என்னை அர்ப்பணி
என்ற படி என்னை ஈந்தேன்
என் தாயக மண்ணிற்கு!
பற்பல ஆண்டுகள் பலவாய்
குழவியாய் பிறந்து வளர்ந்து
இன்று விழாவதனைக் கொண்டாடுகிறீரே!
உம்தம் நோக்கமோ பெரிது
சேவையோ நின்று நிலைபெறுமே
சிறப்பாக என்றும் உயர்வீரே!

பற்பல சான்றோர் இணைந்தீரே
ஆக்கச்செயல்கள் புரிவீரே
ஆலமரமாய்த் திகழ்வீரே!
அரும்பெரும் பணிகள் செய்வீரே
அகிலம் புகழ வாழ்வீரே
வாழையடி வாழையெனத் தழைப்பீரே!
வாரிசினை உலகம்புகழ உருவாக்குவீரே
தமிழ்மொழி உயரச் செய்வீரே
தாய்த் தரணி செழிக்க உழைப்பீரே!
வாழ்க வாழ்க பல்லாண்டு
பழையமாணவர் சங்கமது
தளராமல் ஆக்கம் புரிந்திடுவீரே!

அன்புடன்
தமிழ்பணிச்செம்மல்
**துரை. கணேசலிங்கம்**
10.10.2005

www.padippakam.com



# சீரிளமைத் தமிழ் ஒரு செம்மொழியே

- விக்னா பாக்கியநாதன். பீ. ஏ. -
ஜேர்மனி

ஒருவரோடு ஒருவர் தொடர்பு கொண்டு தம் மனக்கருத்தை வெளிப்படுத்தவும் அவர்களின் மனக்கருத்தைத் தாம் அறிந்து கொள்ளவும் பயன்படுகின்ற தொடர்புச் சாதனமே மொழி எனப்படும். உள்ளக் கருத்தைச் சொற்கள் மூலம் வாயால் வெளிப்படுத்தும் போது அது பேச்சுமொழி எனப்பெயர் பெறும். இப் பேச்சு மொழியே ஒரு மொழியின் முதல் நிலையாகும். மொழியை உயிருள்ளதாக உலாவிவரச் செய்வதும் இப் பேச்சு மொழியே. பேச்சுக்கு அதாவது ஒலிக்கு வடிவம் கொடுக்கும்போது அது எழுத்து மொழி ஆகின்றது. இது மொழியின் இரண்டாவது நிலையாகும். இந்த எழுத்துமொழி அழியாமல் நிலைநிறுத்தப்படுவதால் நிலைபேறுடைய மொழியாக நிலைத்துவாழும் தன்மையைப் பெற்றுள்ளது.

பொதுவாக, இனங்கள் மொழிகளின் பன்முகத்தன்மை கொண்ட இடங்களாகும். இயற்கையின் பன்முகத் தன்மை கொண்டதாகவும் விளங்கும் தன்மை ஆழமானவை. ஆய்வு செய்து அறியப்படவேண்டியவை. கி.மு 2000 ஆண்டுகளுக்கு முன் வாழ்ந்த தொல்காப்பியர் காலத்திலிருந்து இன்று வரை தமிழ் மொழி செம்மொழி என்றழைக்கப்படுகின்றது. என்றும் அது இனிமையாக இருப்பதால் தேன் தமிழ். தீந் தமிழ் என்றும் எப்போதும் பசுமையாக இளமையாக இருப்பதால் பைந் தமிழ். கன்னித்தமிழ் என்றும் அழைக்கப்படுகின்றது. இயல். இசை. நாடகம் என்ற மூன்று அங்கங்களைக் கொண்டதால் "முத்தமிழ்"என்றும் நமது மொழி பெயர் பெற்றுள்ளது. மேலும் செம்மையாகச் சீர்மையாக அமைந்த மொழிஎன்பதால் செம்மொழி எனவும் எம் தாய் மொழி அழைக்கப்படுகிறது. செம் என்பது செம்மை என்பதன் குறுக்கமாகும். செந்தமிழ் என்னும்போது எந்தமொழிக்கலப்பும் அற்ற தூயதமிழ் எனப் பொருள்படும். தமிழ் மொழியின் தனிப்பண்பும் நியமசக்தியும் தனிப்பெருமையும் உலகமொழிகளுள் உயர்ந்து நிற்பதற்குரிய காரணம் எனலாம்.

கி.மு 1000ம் ஆண்டு முதல் கி.பி 100ம் ஆண்டு வரை இந்தியாவிலே தமிழ், பிராகிருதம் (சமஸ்கிருதத் திரிபு மொழி அல்லது பாகதம்) ஆகிய இரு மொழிகளுமே ஆட்சி மொழியாக இருந்தன. கி.மு முதலாம் நூற்றாண்டில் சாதவாகன மன்னன் சதகர்ணி வெளியிட்ட நாணயத்தின் ஒருபக்கத்தில் "ராஜா வசிஸ்ட் புத்ர" சதகர்ணி என்று பிராகிருதத்திலும் "அரசன் வசிட்டி மகன் திரு. சதகணி" என்று தூயதமிழிலும் அரசனின் பெயர் பொறிக்கப்பட்டுள்ளது. இந்தச் சான்றிலிருந்து தமிழ் 2000 ஆண்டுக்கு முன்பு ஆட்சி மொழியாக இருந்த உண்மை வெளிப்படுகின்றது. ஆனால் அது மறைக்கப்பட்டு அல்லது இருட்டடிப்புச் செய்யப்பட்டமைக்கு யார் காரணம் எனப்புரியாமலுள்ளது. பல்லாயிரம் ஆண்டுகளாக ஆட்சி மொழியாக விளங்கிய தமிழ். தமிழகத்தில். எம்தாய்மண்ணில் ஆட்சிமொழியாவதற்குப் போராட வேண்டியுள்ளது. தமிழன் தன் மொழியைக் காக்க மறந்தால் வரலாறும். பண்பாடும் மறக்கப்படும். மறைக்கப்படும் நிலையேற்படும். இவற்றை நாம் அனுமதிக்கலாமா? இந்தியாவிலே பேசப்படும் திராவிட மொழிகளுள்ளே தமிழ்மொழி தனித்துவமான சிறப்பு வாய்ந்தது என்பதைப் பின்வரும் எடுத்துக்காட்டு மூலம் அறிந்துகொள்ளமுடியும். தெலுங்க மொழியின் ஆதி இலக்கியமாகிய நன்னைய பாரதம் என்ற நூல் கிறிஸ்துவுக்குப்பின் 11ம் நூற்றாண்டில் தோன்றியதாகும். கன்னடமொழியின் ஆதி இலக்கியமாகிய கவிராஜமார்க்கம் என்ற நூல் கிறிஸ்துவுக்குப்பின் ஒன்பதாம் நூற்றாண்டில் தோன்றியதெனலாம். மலையாள மொழியினுடைய ஆதிஇலக்கியமாகிய இராமசரிதம் என்ற நூல் கி.பி. 14ம்



படிப்பகம்

www.padippakam.com



நூற்றாண்டில் உதயமானது. ஆனால், தமிழ் மொழியின் ஆதி இலக்கியங்களோ கிறிஸ்து ஆண்டின் ஆரம்பகாலத்திலோ அல்லது அதற்கு முன்னரோ என்று அறுதியிட்டுக் கூறமுடியாத காலத்தைக் கொண்டது. தமிழிலே இப்போது அகப்படுவனவற்றுள்ளே காலத்தால் முந்தியவையே ஆதிஇலக்கியங்களாகும். தமிழ் இலக்கியங்கள் எந்த மொழி இலக்கியத்தைப்பின்பற்றியோ தழுவியோ எழுதப்படவில்லை என்பதே அதன் தனிச்சிறப்புக்கு காரணமாகும். தமிழ் மொழியிலுள்ள ஆதிஇலக்கியங்களாகிய எட்டுத்தொகை நூல்கள் தமழுக்கே உரிய செய்யுள் வகைகளால் இயன்றுள்ளன. அகவற்பா, வெண்பா, வஞ்சிப்பா, கலிப்பா முதலியன தமிழுக்கே உரிய தனித்துவச் செய்யுள் வகைகளாகும். மேலே கூறப்பட்ட எட்டுத்தொகை நூல்களாவன நற்றிணை, குறுந்தொகை, ஐங்குறுநூறு, பதிற்றுப்பத்து பரிபாடல், கலித்தொகை, அகநாநூறு, புறநாநூறு என்பனவாகும்.

தமிழ் மொழி ஒரு தனிமொழி, தனித்துத்தோன்றி தனித்து இயங்கும் மொழி. அதற்க எந்தஒரு மொழியின் துணையும் அன்றும் தேவைப்பட்டதில்லை. இன்றும் தேவைப்பட்டதில்லை. தேவைப்படுவதில்லை. தமிழ் சொல்வளம் மிகுந்த மொழி. புதிதாகச்சொல்லை உருவாக்குவதற்கும் ஏற்ற மொழியாகும். உதாரணமாக ரயில், சைக்கிள் என்ற ஆங்கிலச்சொற்கள் தமிழ் உச்சரிப்புக்கு ஏற்ப தமிழோடு திசைச்சொல்லாக இணைந்தன. தமிழ் மொழியோ அவ்வாறான சொற்களுக்கு, திசைச்சொல், வடசொல், என இலக்கணம் வகுத்துத் தன்னருகில் இணைந்ததே தவிர, தன்னுடன் கலப்பதற்கு இடம் கொடுக்வில்லை. அதன்பின்னர் காலம் செல்ல அவற்றிற்குரிய நேரடிப்பொருளை உணர்த்தும்வகையில் தூயதமிழ்சொல்லாக மாற்றமுயன்ற வேளையில் இரயில் - புகைவண்டியாகவும், சைக்கிள் மிதிவண்டியாகவும் மாற்றம் பெற்றன. இதே சொற்கள் எம் தாயக மொழிவல்லோரால் மேலும் சீராக்கப்பட்டு, சீர்மைப்படுத்தப்பட்டு இரயில் - தொடரூந்து, சைக்கிள் - மிதியுந்து என்ற பெயர்களுடன் இன்று வழக்கிலுள்ளன. இவ்வாறான அழகு தமிழ்ச்சொற்களாக பரிணாமம் பெற்ற இரண்டுகாலகட்டச் சொல்மாற்றங்களை நாம் இக்காலகட்டத்தில் காணக்கூடியதாய் உள்ளது. எதிர்காலத்தில் மேலும் என்னென்ன? எப்படி? மாற்றம் பெறும் என்பதற்கு காலம்தான் பதில்சொல்லவேண்டும்.

உலகமொழி ஆராச்சியாளர்களுள் சிலர் "தமிழ் மொழியே உலகின் முதன்மொழி" எனக்கூறுவர். இன்னும் சிலர் இலத்தீன், கிரேக்க, சீன, மொழிகளோடு ஒத்த மொழியெனக்கூறுவர். இம்மூன்று கூற்றில் எது உண்மை? எனப்புரியாவிட்டாலும் அவை தமிழின் தொன்மைக்குச் சான்று பகர்கின்றன. முற்காலத்தில் சீன யாத்திரிகர்கள், திரு. யுவாங் சுவாங், பாகியான் முதல் பிற்காலத்து, ஜீ.யூ. போப், கால்ட் வெல், வின்ஸலோ வரையிலுள்ள வேற்றுநாட்டினர், வேற்று மொழியினர், வேற்றுநிறத்தினர், வேற்றுமதத்தினர் பண்பாட்டுத் தன்மைபெற்ற ஒரே மொழி தமிழ் மொழியே எனக்கூறியிருந்தமை எமக்குப் பெருமையே.

கி. மு. 2000 ஆண்டுகளுக்கு முன்னுள்ள நூல்களுள்ளே இன்று எமக்கு கிடைக்கும் நூல் "தொல்காப்பியம்" என்ற இலக்கண நாலாகும். இதற்கு முன்பும் இலக்கணநூல்கள் பல இருந்தன என்பதற்கு ஆதாரமாக என்ப, என்மனார், புலவர், யாப்பறிபுலவர், தேன்மொழிப்புலவர், எனத்தொல்காப்பியம் எழுதிய தொல்காப்பியனாரே தமக்கு முன்வாழ்ந்த இலக்கண ஆசிரியர்களை ஆங்காங்கே குறிப்பிட்டுச்சென்றுள்ளார் என்பது கவனிக்கப்பாலது. அண்மையில் 26.12.2004இல் ஏற்பட்ட சுனாமி என்ற கடற்கோள்போன்று தமிழகத்திலே மூன்று கடற்கோள்கள் ஏற்பட்டன. கடல்நீர் நாட்டுக்குட் புகுந்து நிலப்பரப்புடன் மக்களையும், அவர்தம் உடமைகளையும் விழுங்கிவிட்டது. இக்கடற்கோள்கள் முறையே கி.மு. 3000, கி.மு. 5000, கி.மு.9000 ஆண்டுகளில் ஏற்பட்டன என வரலாறு கூறுகின்றது. இக்காலகட்டத்திலே தமிழ்மொழியனுடைய ஆதி இலக்கியங்கள், ஏட்டுச்சுவடிகள் யாவற்றையும் கடல் விழுங்கியது. கடற்கோள் ஏன்பத என்ன? என்று தெரியாமல் இதுவரை காலமும் கற்பனை என்றும் புனைகதை வரலாறு என்றும் எம்முட்பலர் எண்ணியிருந்தோம். "துறைமுக



படிப்பகம்

www.padippakam.com



அலை” என்பதே யப்பானிய மொழியில் சுனாமி என்ற பெயருடன் உலகையே உலுக்கிய கோரச்சம்பவம். எமது காலத்திலேயே நடந்தேறியுள்ளது. தீராத சுமையாக அவலங்களைச்சுமந்து வந்தது. 2004 மார்கழித்திங்கள் 26ம்நாள் மறக்கவும் முடியுமோ? இந்தத் துயரச்செய்தி முன்னர் நடந்தபோது கற்பனை, கட்டுக்கதை, என்று இருந்தபோது அண்மையில் நிகழ்ந்த சுனாமி, அது உண்மை என நிருபித்துவிட்டது. இதேபோன்று எம்தாய்மொழி பற்றி இதுகாறும்கூறிய விபரங்களும் கற்பனையல்ல உண்மைகளே என ஏற்றுக்கொள்ளமுடியும் அல்லவா? இத்தகைய வரலாற்றுப்பின்னணி வாய்ந்த தமிழ் மொழி இன்று செம்மொழியாக்கப்பட்டமை வியப்பல்ல. என்றோ அங்கீகாரம் பெற்றிருக்கவேண்டிய எமது மொழி இப்போதாவது அதே அங்கீகாரத்தை பெற்றிருக்கின்றதென்றால் எமது மொழியின் சிறப்புக்கு மேலும் ஆதாரங்கள் வேண்டுமோ?

ஒரு மொழியானது செம்மொழியாவதற்கு பதினொரு தகுதிகள் இருக்கவேண்டும் என்பது மொழி ஆராச்சியாளர் கருத்தாகும். அவையாவன.

1. தொன்மை
2. தனித்தன்மை
3. பொதுமைப்பண்பு
4. நடுவுநிலைமை
5. தாய்மைத்தன்மை
6. பண்பாடு
7. பிறமொழித்தாக்கம் இல்லாத்தன்மை
8. இலக்கியவளம்
9. உயர்சிந்தனை
10. கலைஇலக்கியத்தன்மை வெளிப்பாடு
11. மொழிக்கோட்பாடு என்பனவாகும்.

இப்பதினொரு தகைமைகளும் தமிழ் மொழிக்கு மட்டுமே உள்ளது என தெளிவாக ஆய்வாளர்கள் கூறுகின்றனர். சமஸ்கிருதத்திற்கு ஏழு தகைமைகளும், இலத்தீன் கிரேக்கமொழிகளுக்கு எட்டுத்தகைமைகளும் மாத்திரமே பொருந்துகின்றன. ஆனால் பதினொருதகைமைகள் அல்லது பொருத்தப்பாடுகள் நிறைந்த தமிழ்மொழி செம்மொழியாக்கப்படாமைக்குரிய அன்றைய காரணங்கள் என்ன? என்பது ஆராயப்படவேண்டிய சிக்கலான விடயமே. அன்னிய மொழிகளுகளுக்கு தமிழ் இனம் பட்டுக்கம்பளம் விரித்து வரவேற்ற அந்நியமொழிமோகமா? ஆட்சியாளரின் தான்தோன்றித்தனங்களா? எனப் பலவாறாக ஐயப்படவேண்டியுள்ளது.

உயர்தனிச் செம்மொழியாகத் தமிழ் மொழி இன்று அங்கீகாரம் பெறும்போது உலகமொழிகளுள் ஒன்றாக உயர்தகுதிபெறும் உலகப்பல்கலைக்கழகங்கள் தமிழ் மொழியை அங்கீகரித்து தமிழுக்கெனத் தனித்துறைகள் உருவாக்கத்திற்கும் தமிழ் மொழியை ஒரு பாடமாக்கி, உயர்கல்வி பெறவும் ஆய்வுப்பணிகள் மேற்கொள்ளவும், மானியங்களைப்பெறவும் வழிசமைக்கும். தமிழ் மொழி இலக்கியம், கலை, பண்பாட்டு ஆய்வுகளுக்கும் யுனஸ்கோ போன்ற பன்னாட்டு உதவி நிறுவனங்கள் உதவிபுரிய முன்வரலாம். பண்டைத் தமிழ் நூல்கள் உலக மொழிகளில் மொழிமாற்றம் செய்ப்படலாம். தமிழ்-ஆங்கிலம், தமிழ்-டொச், தமிழ்-பிரெஞ், தமிழ்-டெனிஸ், தமிழ்-இத்தாலியமொழி, தமிழ்-நோர்வேஜிய மொழி, தமிழ்- அரபு என ஒவ்வோரு மொழிகளிலும் தமிழகராதிகள் உருவாக்கக்கூடிய தேவை ஏற்படலாம்.

தமிழ்மொழி செம்மொழி ஆக்கப்பட்டால் தாய்மொழிக்ல்விக்கும், அதன் வழி சிந்தனை விருத்திக்கும், அறிவு வளர்ச்சிக்கும் புதிய யுகத்திக்கும் மேலும் உந்து சக்தியாக இருக்கும். தாய் மொழியான தமிழிலே தமிழ்க்கல்வியை கற்பதான சிந்தனைக்கண் திறக்கவும், சுய சிந்தனையைப் பெருக்கிக்கொள்ளவும் ஏதுவாக இருக்கும். தமிழ்மொழியை ஒரு பாடமாகப் படிக்கும் நிலைமாறி தமிழ் மொழியிலேயே கற்கும் நிலை வருமாயின் பல்வகைத்துறைகளிலும் நம்மினம் ஆற்றல் பெற்றுப்பிரகாசிக்கும். உலக அரங்குகளிலே தமிழ்க்கொடி பறக்கும். தேமதுரத் தமிழோசை உலகமெல்லாம் பரவும்.

○



படிப்பகம்

www.padippakam.com



# புலம் பெயர்ந்த நாடுகளில் தமிழ்க்கல்வி

புலம் பெயர்ந்த நாடுகளில் பல சிறுவர்கள் தமிழ் கல்வி நிறுவனங்களையும், சிறு சஞ்சிகைகளையும், ஒலி, ஒளி நாடாக்களையும் வெளியிட்டு தமிழ் கல்வியை நோக்கிய கவனத்தைச் செலுத்துகின்றனர். இந்த முயற்சியில் சிலர் இதை வியாபாரமாகவும், சிலர் தமது குறுகிய நோக்கிலும், பலர் பரந்த நோக்கிலும் செயற்படுகின்றனர்.

இந்த முயற்சியில் ஈடுபடும் 99வீதம் பேர் தமிழ் கல்வி புலம் பெயர்ந்த இந்தக் குழந்தைகளுக்கு, ஏன் தேவை என்பதை புரியாத நிலையில் தமிழைக் கற்பிக்கின்றனர். கற்பிப்போர், பெற்றோர், குழந்தைக்கு ஏன் தமிழைக் கற்பிக்க வேண்டும் என்ற கேள்விக்கு சரியான நிலையில் இருந்து இக்கல்வியைப் புகட்டாமையினால், இந்த முயற்சி எதிர்காலத்தில் பலத்த தோல்வியை ஏற்படுத்தும் விடையமாகவுள்ளது.
அண்மையில் பாரிசில், அவுஸ்ரேலியாவைச் சேர்ந்த பாப்பா பாரதிப் பாடசாலையின் வெளியீடான இரு ஒளிநாடாக்களை ஆய்வு செய்யும் நோக்கில் ஒரு விவாதம் நடைபெற்றது. அந்த ஒளிநாடா தொடர்பான விவாதம். மற்றும் நோர்வேயில் வெளியாகிய சின்னப் பூக்கள் ஒலி நாடா என்பவற்றை எடுத்து நாம் நோக்கும் போது இதன் பின்னுள்ள கடின உழைப்பு, முயற்சி, பரந்த நோக்கம் என்பன எல்லாவற்றையும் விட பாராட்டப்பட வேண்டியதாகும்.

இந்தப் பாராட்டு என்பது அவற்றை சரியானதாக மாற்றிவிடாது. சரியான ஒன்றைத் தேர்வு செய்வது என்பது இவ்வெளியீட்டாளர்கள் முன் உள்ள சவாலாகும்.

இந்தவகையில் குழந்தையின் கவனம்பற்றிய ஒரு கரிசனையூடான கல்வியை குழந்தைக்கு எவ்வாறு புகட்ட வேண்டும் என்பதை கட்டுரை மூலம் ஆராய முற்படுகின்றோம்.

பொதுவாக இன்று குழந்தைக்கான கல்வி புகட்டலில் பெற்றோரும், கற்பிப்போரும் கடைப்பிடிக்கும் அடிப்படை என்ன எனப் பார்ப்போம்.

1) புலம் பெயர்த்த நாடுகளில் உள்ள மொழி தொரியாத பெற்றோருக்கும், குழந்தைக்கும் இடையில் ஒரு தொடர்பு பாலமாக தமிழைப் பயன்படுத்தல்.

2) விடுதலைப்புலி ஆதரவுப் பாடசாலையில் தமிழீழ விடுதலைப் போராட்டத்தை நியாயப்படுத்த, தமிழிற்க்கு பங்காற்றுகிறோம் என்பதைக் கூறிக்கொண்டு புகட்டுகின்றனர்.

3) மொழி தெரிந்த, தெரியாத பெற்றோர்கள் ஊரில் உள்ள தமது பெற்றோருடன், உறவினருடன் தொடர்புகொள்ள.

4) நாட்டுக்கு திரும்பிச் செல்ல, என நினைக்கும் ஒரு கணிசமான பகுதியினர்.

5) நாம் தமிழர் எனவே தமிழ் தெரிய வேண்டும் என்போர்.

இந்த வரையறையைத் தாண்டி அல்லது உள்ளடக்கிய தமிழ் கல்வி சிறு அளவில் புலம் பெயர்ந்த நாடுகளில் புகட்டப்படுகிறது. இது பரந்த அளவில் புகட்டப்படாமையும், அதை புறக்கணிப்பதும், சிறுமைப்படுத்துவதும் பெரும்பான்மையாக உள்ளது.

இது ஏன்? என்ற கேள்வியின் ஊடாக தமிழ் கல்வி கற்பிக்கும் நோக்கை எடுத்துக்கொள்வோமாயின் அது ஒரு குறுகிய எல்லை கொண்டதாக அமைவது ஒரு அடிப்படையாகும்.

உதாரணமாக பெற்றோருக்கும் குழந்தைக்கும் இடையில் ஆங்கிலம் தெரிந்தால், அல்லது வேறு ஒரு பொது மொழி தெரிந்தால், அங்கு தமிழ் கல்வி தேவையற்றது ஆகிவிடுகிறது. இதேபோல்



படிப்பகம்

www.padippakam.com



பெற்றோரின் பெற்றோருக்கம் (பேரர்மாருக்கு) அம்மொழி தெரிந்துவிடின் அங்கு தமிழ் மொழி தேவையற்றது ஆகிவிடுகிறது, அடுத்தது விடுதலைப் போராட்டம் முடிவுக்குவரின் தமிழ் கல்வி தேவையற்றதாகிவிடும். தமிழர் எனவே தமிழ் கற்கவேண்டும் என்ற கருத்து பின்னர் தேவை அற்றதாகிவிடுகின்றது.

அதாவது தமிழ் கற்பிக்கும் நோக்கம் பரந்த அடிப்படையில் ஏன் தேவை என்பதைப் புரிந்து கொள்ளாத வரை இந்த கற்பித்தல் என்பது ஒரு நிலையில் களைத்துப் போன, அவசியமற்ற, நேர விரையோகம் கொண்ட விடயமாக கற்பிப்போருக்கும், பெற்றோருக்கும், குழந்தைக்கும் எற்படும் என்பதை தெளிவாகப் புரிந்து கொள்வது அவசரமான விடயமாகும்.
இன்று உலகில் உள்ள ஆயிரக்கணக்கான மொழிகளில் தமிழும் ஒன்று. தமிழ் உலகில் அதிகமாக பேசும் மொழிக் கூட்டத்தினருள் முதல் 20வது இடத்தினுள் உள்ளது. இருந்த போதும் தமிழ் இன்று சமூகத்தின் வாழ்வை தீர்மானிக்கும் ஒரு தனிமனித பொருளாதார ஏற்றத் தாழ்விற்கு பங்களிக்க முடியாத நிலை உள்ளது. அதேவேளை தமிழ் புறக்கணிப்பும் இன்னும் ஒரு அம்சமாகும்.

புலம் பெயர்ந்த நாங்கள் இங்கு தமிழை எமக்கிடையில் பரிமாறுவது கூட அந்த நாட்டு மொழி எந்தளவிற்கு தெரிகிறது என்பதுடன் தொடர்புடைய விடயமாகியுள்ளது. அப்படி உள்ள போது குழந்தைக்கு தமிழ் கற்பிப்பது என்பது கடினமாக உள்ளது. அதுவும் குழந்தை இந்த மண்ணில் பிறந்து இந்த நாட்டு மொழியைத் தாய் மொழியாகக் கொள்ளும் போது அக்குழந்தை தமிழைக் கற்கும் தேவை அற்றதாகிறது.

மொழி என்பது ஒரு மக்கள் கூட்டத்துடன் தொடர்பு கொள்ள மட்டுமே இருந்து போது, இன்று உலகில் பொருள் தேடும் விடயத்துடன் தொடர்புடையதாகவும், சீரழிந்தும் உள்ளது. குழந்தைக்கு அந்தத் தேவை இங்குள்ள மொழியால் தீர்க்கப்படும் பட்சத்தில் ஏன் தமிழ் மொழி தேவை என்பது குழந்தையின் நிலையாகிவிடும். தமிழ் மொழி என்பது ஏன் தேவை? என்ற கேள்வியை எழுப்பாத, அதை கற்கை நெறிக்குள் உள்ளாக்காத தமிழ் கல்வி என்பது வரையறுக்கப்பட்ட எல்லையுடன் முடிவிற்கு வரும்.

எம்மைப் பொறுத்தவரையிலும் சரி, குழந்தையைப் பொறுத்த வரையிலும் சரி ஏன் தமிழ் கல்வி தேவை என்று கேட்பின் அது ஒரே ஒரு அடிப்படை விடயத்தை மட்டும் சார்ந்துள்ளது. அது நாம் இங்கு இரண்டாந்தரப் பிரஜை என்பதால் மட்டுமேயாகும். நாம் கறுப்பர்களாக இருப்பது, மூன்றாம் உலகத்தவர்களாக இருப்பது, வறிய நாட்டு மக்களாக இருப்பது என்ற ஒரே ஒரு அடிப்படை மட்டுமே தமிழ் கற்கக் கோருகிறது. அதாவது நான் யார்? எனது சொந்த அடிப்படை என்ன? நாம் ஏன் இங்கு வந்தோம்? ஏன் மூன்றாம் உலக நாடுகள் வறுமையில் உள்ளது? நிற வேற்றுமை என்றால் என்ன? என்ற கேள்விகளில் இருந்தே தமிழ் கற்கும் தேவை எழுகிறது.

நாம் இங்கு இரண்டாந் தரப் பிரஜையாக, வேண்டப்படாத பிரஜையாக உள்ளோம். எம்மீதான நிற, இன, அகதி என்ற போர்வையில் ஒரு தாக்குதலை எல்லாத் துறையிலும் சந்திக்கின்றோம். அதை சாதாரண மனித செயற்பாடுகளில் இருந்து விரிவாகப் பார்ப்போம்.

நாம் இந்த மக்கள் கூட்டத்துக்கு ஒரு மனிதனாக அடையாளப் படுத்து முடியாத நிலை மட்டுமே எமது சொந்த அடையாளத்தை தேடவைக்கிறது. அந்த சொந்த அடையாளம் என்பது தமிழை வெறுமனே தெரிந்து கொள்வதனால் மட்டும் தீர்ந்து விடுவதில்லை. தமிழை நான் ஏன் கற்க வேண்டும் என்ற கேள்வியை, குழந்தைக்குப் புகட்டும் போது பெற்றோர் கற்க வேண்டிய நிலையில் உள்ளனர்.

அநேகமாக 99வீதமான பெற்றோர் உலகில் என்ன நடக்கிறது என்பதே தெரியாத ஒரே சூனிய நிலையில் உள்ளனர். சோறு, அதன் கறியைப் பற்றியும், உடுப்பைப் பற்றியும், மலிவு விலைப் பட்டியலைப்பற்றியும்,.. .. என எண்ணற்ற விடயத்தை உப்புச் சப்பின்றி கதைக்கும் பெற்றோர் உலகில் என்ன நடக்கிறது என்பதைப்பற்றி தெரியாது உள்ளனர்.

தமக்கு எதிராக இந்த நாடுகளில் உருவாக்கிவரும் சட்டங்கள், புதிய ஒடுக்கு முறைகளைப் பற்றியும் தெரியாது உள்ளனர். இந்த நிலையில் தான்



படிப்பகம்

www.padippakam.com



குழந்தைகள் ஏன் தமிழ் கற்க வேண்டும் என்ற கேள்வியை அவர்கள் முன் கேட்க வேண்டி உள்ளது. இந்த கேள்விக்கான பதிலை தமிழ் மொழிக் கல்விக் கூடாக சொல்லாத வரை குழந்தையோ, பெற்றோரோ தமிழ் கல்வி மீதான தேவையான ஆர்வத்தைப் பெற முடியாது.

இந்த நிலையில் பாப்பா பாரதி ஒளிநாடாமீதான விவாதத்தை தொட்டு ஆராய முயல்கிறேன். இவ்வொளிநாடா தமிழ் மொழிக் கல்வியின் ஒரு அங்கமாகக் கருதி வெளியிட்டதாக குறிப்பிட்டனர். இது எந்தளவுக்கு அவர்களுக்கு வெற்றி அளித்துள்ளது என ஆராயின்:

1) தமிழ் கல்வி கற்பித்தல் என்பதை வெளிவந்த இரு நாடாக்களும் சாதிக்க வில்லை.
2) தமிழ் கல்வி மூலம் ஏதாவது ஒரு அறிவைக் கொடுத்ததா எனின் இல்லை என்பது முக்கியமானது.

இதை நான் விரிவாக ஆராயின், இந்நாடாக்கள் மூலம் ஒரு குழந்தை சில சொற்களைப் தெரிந்து கொள்கிறது என்பது உண்மையே. அதன் அர்த்தம் தெரிந்தும், தெரியாமல் கூட அதைப் பெறுவது என்பது தமிழ் கல்வியை வளர்க்கும் ஒரு பணியில், முயற்சியில் ஒரு வளர்ச்சியாகி விடாது. ஒரு பாட்டை, கதையை தெரிந்து கொண்டால் மாத்திரம் தமிழ் கற்றதாகிவிடாது. இதற்கு உதாரணமாக லண்டனில் உள்ள தமிழ் தெரியாத சில தமிழ் குழந்தைகள் கர்நாடக சங்கீதத்தை ஆங்கிலத்தில் எழுதி அதைப் படித்து சித்தியடைவது போல் நடந்து விடும். அவர்கள் கர்நாடக சங்கீதத்தை சரியாகப் புரிந்தோ அல்லது அதன் உள் அர்த்தத்தை புரிந்தோ சித்தியடையவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.
இன்னும் ஒரு பக்கத்தில் எமது குழந்தைகள் தமிழ் ஆர்வம் இருக்கிறதோ, இல்லையோ தமிழ் சினிமாப் பாடல்களை பாடுகின்றனர். அந்த சொற்களில் சில அர்த்தங்கள் தெரிந்தும், தெரியாத வகையில் அந்தப் பாடல்களை தெரிந்து கொள்கின்றனர்.

இங்கு ஒரு குழந்தை, ஒரு பாடலை, கதையை ரசிக்கின்றது, விரும்புகின்றது என்பது தமிழை கற்க விரும்புகிறது என்று யாரும் கருதி முயற்சி எடுப்பின் அது ஒரு பொய்ப் படமாகவே அது இருக்கும்.

புலிகளின்பாடல் அவர்களின் ஆதரவாளர்களின் குழந்தைகள் பல மேடைகளில் பாடுகின்றனர், புலி மாமா பற்றி கதை எழுதுகின்றனர். இது அதன் அர்த்தத்தை முழுமையாகப் புரிந்து சொன்னார்களா? என ஆராயின் சினிமாப் பாடல் போல் மாறிவிடுகிறது.

ஆர்வம், விருப்பு என்பது வேவ்வேறு நோக்கத்தைக் கொண்டது என்பதைப் புரிந்து கொள்ள வேண்டும். தமிழ் மீதான ஆர்வம் என்பது அதை ஏன் கற்க வேண்டும் என்ற ஒரே விடையில் மட்டுமே ஏற்பட முடியும். இந்த விவாதத்தில் பாப்பா பாரதி சார்பாக கலந்து கொண்ட மாவை நித்தி குறிப்பிடும் போது தனக்கு ஏன் அந்த ஆர்வம் ஏற்பட்டது என்றால் எனது சுய அடையாளத்தை தேடுவதில் இருந்து. அதாவது நான் யார்? என்ற கேள்வியில் இருந்து என்கின்றார்.

இது மிகச் சரியானதாகும். அவர் இந்தக் கேள்வி மீதான அடிப்படைதான தமிழ் கல்வியை வளர்க்க முன்வந்ததாகும். ஆனால் இது அக் குழந்தைகளுக்கு உண்டா? அல்லது இதில் ஈடுபட முனையும் பெற்றோருக்கும், குழந்தைகளுக்கும் உண்டா? எனின் 99வீதம் இல்லை என்பதே பதிலாகும். இதற்கு ஆய்வு தேவையில்லை.

அடுத்து தமிழ் கல்வி மூலம் அறிவைப் புகட்டுவதாக இந்நாடாவைக் கொண்டு கூற முடியாது. கல்வி புகட்டுவதற்கு இந்த மேற்கு நாட்டுக் கல்விக்கு மேம்பட இந்நாடா பங்காற்றவில்லை.
இந்த விடையத்துக்கு அப்பால் ஒளி நாடா சரி, நோர்வே ஒலிநாடா சரி பெற்றோராகிய எங்கள் நிலையில் நின்று கொண்டு, பிள்ளையின் சூழலைப் புரிந்து கொண்டு பங்காற்றுவதில் தவறிழைத்துள்ளது.
உதாரணமாக கழுதைமீது போகும் கதை, பேய் கதை போன்றன குழந்தைக்கு அன்னியமானது. மாட்டு வண்டியே இல்லாத நாட்டில் மாட்டு வண்டியைப் பற்றி பாடல், கதை அன்னியப்பட்டதாகும். அதைச் சொல்லுவதாயின் அந்தச் சூழலை புரியவைக்க வேண்டும். இது ஏன் தமிழ் கற்பித்தல் என்ற கேள்விக்குள் அடங்கியிருக்கிறது.

தமிழை எப்படிப் புகட்டலாம், அறிவை எப்படிப் புகட்டலாம் என்ற கேள்வி எழுவது இயல்பானது. எப்படி அந்தச் சூழலுடன் எம் சூழலை



படிப்பகம்

www.padippakam.com



இணைக்கலாம் என்ற கேள்வி எழுவது, எம்மை (பேற்றோரை) நோக்கி கேட்பது இயல்பானதே.

இங்குதான் சமுதாயத்தில் அக்கறைக்குரியவர்களது, குழந்தையின் வளர்ச்சியில் அக்கறையாக வழிகாட்ட முயல்பவர்களை தேடிக் கண்டு பிடிக்க வேண்டியது அவசியமாகிறது. உதாரணமாக 2 முதல் 15 வயது குழந்தை ஒன்று, உங்களுடன் வரும் போது வீதியில் காணும் பல விடயங்களை சுட்டிக் காட்டி, உங்களிடம் ஏன் என்ற கேள்வியை முன்வைக்கிறது. உதாரணமாகப் பார்ப்பின் பொலீஸ் ஒரு வெளிநாட்டவரை கைது செய்யும் போது, அக்குழந்தை ஏன் எனக் கேட்கிறது. வெளிநாட்டவர் மணிக்கணக்காக பொலீஸ் நிலையத்தில் தூங்கும் போது அல்லது அலக்கழியும் போது ஏன் எனக் கேட்கிறது. கடைக் கண்ணாடியில் காணும் எல்லாப் பொருட்களையும் வாங்கித் தரக்கோருகின்றது. சிறுவர் உழைப்பைத் தொலைக்காட்சியில் காணும் குழந்தை ஏன் வேலை செய்ய வேண்டும், ஏன் உணவு இல்லை,......... என கேட்கிறது.

நாம் ஏன் இலங்கைக்கு போக முடியாது, ஏன் இலங்கையில் சண்டை, ஏன் சாகிறார்கள் எனக் கேட்கிறது.

பணக்கார நாட்டில் வீட்டுக்கு வீடு கார் உள்ள போது, ஏன் அங்கே மாட்டு வண்டி செல்கிறது, கார் ஏன் அங்கில்லை என்கிறது.

ஏன் நான் கறுப்பு, ஏன் அவர்கள் வெள்ளை, ஏன் அவர்களைப் போல் நான் இல்லை, ஏன் நான் கறுப்பு அவர்களுடன் இணைந்து சுறுசுறுப்பாக விளையாடக் கூடாது, ...... ஏன் நாளாந்த வாழ்கையில் உங்கள் குழந்தையின் கேள்விகள் பலவாகின்றன. நாட்டுக்கு நாடு இது பல கோணத்திலும் சில வேறுபாட்டாலும், இதற்கான விடைகள் பெற்றோருக்கே தெரியாத நிலையிலும் பலர் காணப்படுகின்றனர். ஏன் எனின் பெற்றோருக்கு தமிழ் ஏன் கற்க வேண்டும் என்ற கேள்விக்கு பதில் தெரியாத சமூகக் காரணமாகும்.
என்ன கல்வி கற்பிப்பது என்பதை பிள்ளையின் உளவியல் கேள்வியில் இருந்து ஆராய்வது அவசியமாகும். பிள்ளை எதை முரண்பாடாகக் காண்கின்றதோ, எதைத் தெரிந்து கொள்ள முடியாது சூனியமாக இருக்கின்றதோ அதன் மீதான கதை, பாடல்கள் தான் பிள்ளைகளின் ஆர்வத்தைத் தூண்டும். அறிவைப் புகட்டுவது என்பது எம் சூழலில் புலப்படுவது என்பது இன்னுமொருபுறமான விடயமாகிறது.

உதாரணமாக அண்மைக் காலங்களில் குழந்தை உழைப்புப் பற்றி பல பாடசாலைகளில் கூறப்பட்டது. தொலைக்காட்சி காட்டூண் முதல் பலவழிகளில் புகட்டியது. ஆனால் இந்த வழிகள் ஒரு பக்கமானவை. ஒரு கூர்மையான சமூக ஆய்வின் அதன் முற்பக்கத்தைக் கூறும் பொது குழந்தை அதை நோக்கி ஆர்வத்தைத் தூண்டுகிறது. அப்போது எல்லா சராசரிக் குழந்தையை விட அறிவியல் ரீதியல் முன்னணிக்கு வருகிறது. இது தான் அறிவியல் ரீதியில் குழந்தைக்குப் புகட்டும் கல்வியாகும்.

மனிதன் குரங்கில் இருந்து தோன்றினான் என்ற செய்தியை ஒரு தொலைக்காட்சி செய்தி ஊடாக தமிழில் புகட்டும் போது அது வழக்கமான சலிப்பூட்டுவதற்குப் பதில் அதன் மீதான முரண்பாட்டை இனங்காட்ட வேண்டும். இந்த குழந்தையின் பெற்றோர் தாம் கற்கும் போது நிராகரிக்கப்பட்டதை, மதப்பிரிவுகள் நிராகரித்ததையும், அவர்கள் முன்பு இதற்கு எதிராக செய்த அழிவுகளையும் இனங்காட்ட வேண்டும். இது அக்குழந்தைக்கு புதிய விடயமாக தமிழ் கற்கும் அறிவைத் தூண்டுகிறது.

பூமி உருண்டை என்று சொல்லும் ஒரு கதையைத் தயாரிக்கும் போது அதை மறுத்தவர்கள் செய்த அட்டகாசத்தை ஒரு சிறு கதையாக நடித்த படி கூறலாம். அந்த உண்மை மீதான வன்முறையையும் இனங்காட்டுவது என்பது குழந்தைக்கு புதிய விடயமாகும். இந்த சமூக அமைப்பால் கொடுக்கப்படாத விடயம் இயல்பில் குழந்தை அதன் மீது ஆர்வமாகிறது. அதைத் தேடத் தொடங்குகிறது.

அமெரிக்காவைக் கண்டு பிடித்த கதையைப் பற்றி கூறும் போது அல்லது அவுஸ்ரேலியா உருவான வெள்ளையர் கதையைக் கூறும் போது, இலங்கையைக் கைப்பற்றிய பிரிட்டிஸாரைப் பற்றி கூறும் போது, தமிழ் மக்கள் மீது நிகழ்ந்த



படிப்பகம்

www.padippakam.com



சிங்களபேரினவாத ஆக்கிரமிப்பைப் பற்றி கூறும் போது அங்கு இருந்த எதிர்ப் பக்கம் பற்றிய கூற்று குழந்தைக்கு தெரியாத ஒரு புதிய புதிரான விடயமாகும். அப்போது குழந்தை அதை ஆராய முற்படுகிறது. இதுதான் அறிவியல். இது பெற்றோரையும் அறிவியல் ரீதியில் உயர்த்தும்.

உதாரணமாக நாம் குழந்தையாக இருந்து போது எமது பெற்றோர்கள், எமது ஆசிரியர்களாள் கதைகள் கூறப்பட்டன. அதில் ஒரு சிலவற்றை எடுப்பின் குரு பக்தி பற்றி ஏகலைவன், துரோணர் கதை புகழ் பெற்றது. இந்தக் கதையை எமது குழந்தைக்கு எமது ஊர் கதையாக கூறும் போது அதுபற்றிய பல கேள்விகளை நாம் கேட்பது அவசியமாகும். ஏன் ஏகலைவன் தன் விரலை வெட்டினான், ஏன் துரோணர் வெட்டக் கோரினார். அதன் சமூக முரண்பாடு என்ன? ஏன் ஒரு வேடன் வில்வித்தையை கற்கக் கூடாது? அன்றிருந்த சமூக அவலத்தை நீதிக் கதையாக இணைப்பது இன்று அவசியமா? இவ்வாறான கேள்விகள் அக்குழந்தையின் அறிவை உயர்த்துகின்றதுடன் பெற்றோரின் அறிவையும் உயர்த்துகின்றது.

நந்தனார் கதையை அடிக்கடி கோவில்களில் கேட்டுள்ளோம். நந்தனார் தில்லையில் யோதியில் (நெருப்பில்) கலந்தார் என்கின்றது கதை. யார் நெருப்பு வைத்தார், ஏன் நெருப்பு வைத்தனர்? அந்தச் சமூக ஏற்றத் தாழ்வு தான் என்ன? ஏன் நந்தனார் கோவிலுக்குப் போகக் கூடாது? என்ற கேள்வி அறிவை விழிப்புற வைக்கும் இது எமது சிறுகதை இதை விழிப்புணர்வு மிக்க சிறுகதையாக நாம் மாற்ற வேண்டும்.
இப்படி நிறையவே கூற முடியும் நாம் கேட்டவைகள், கேட்காதவைகளை விட குழந்தை கேட்கப் போவது, கேட்பது அதிகமானது. ஏன்? என்ற கேள்வி அதிகமாக எழுகின்றது. ஏனெனில் எங்களைவிட அடுத்த தலைமுறை முன்னேறியே இருக்கும்.

பிள்ளை இந்த சமூகத்தில் எதைத் தெரிந்து கொள்ள முடியாது உள்ளதோ அதை முன்வைப்பது பெற்றோருக்கும் பிள்ளைகளுக்கும் அதிக ஆர்வத்தை தூண்டும். இது தமிழில் நடக்கும் போது அது மேலும் ஆர்வத்தை தமிழின் பக்கம் தூண்டும்.

நாம் இங்கு இரண்டாந்தரப் பிரஜையாக நடத்தப்படுவதைப் புரிந்து கொள்வதும், அதைப் பிள்ளைக்கு புரிய வைப்பதும், அதைத் தமிழ் மூலம் சாதிக்க முற்படவேண்டும். அது, இயல்பில் தமிழ் என்ற சொந்த அடையாளத்தை நோக்கி தேடுதலாக அமையும்.

இரண்டாந்தர பிரஜை என்பதைச் சொல்லாத நிலையில் குழந்தை அதைத் தெரிந்து கொள்ளாத நிலையில் அக்குழந்தை வளர்ந்து வரும் போது இயல்பில் அதை அடையாளங் காண்கின்றது. இப்படிக் காண்கின்ற போது சொந்த அடையாளாத்தின் மீதான தெளிவு இல்லாது இருப்பதென்பது அக்குழந்தை இயல்பில் சமூக நிலையில் இருந்து விலகிய ஒரு வன்முறைக் கும்பலாக, லும்பன்களாக மாறுவர். ஏன் எனில் ஒடுக்குமுறை என்ற கோரமுகம் இந்த சமூகம் மீது வெறுப்பை கொடுக்கின்றது. அதே நேரம் பெற்றோர் இதை மறுக்கும் பொது அல்லது சொந்த அடையாளத்தை தொலைத்து நிற்கும் போது குழந்தை பெற்றோரிடம் இருந்து விலகிவிடுகிறது.

அக்குழந்தை இச்சமூகத்தில் இருந்து விலகி வன்முறையைத் தீர்வாக முன்வைக்கிறது. சமூகப் பார்வை அற்ற இப்போக்கு மீள முடியாத மக்களுக்கு எதிரான, அரசுக்கு எதிரான ஒரு வடிவமாக மாறுகிறது. இதற்கு பிரான்ஸ், அமெரிக்கா, ஜேர்மன், ......... என பலநாடுகளில் உள்ள வெளிநாட்டுக் குழந்தைகள் எடுத்துக் காட்டாக உள்ளனர். பெற்றோர் அடங்கிப் போன அரசு ஊழியர்களாக இருக்க குழந்தைகள் வன்முறை கொண்டோராக எல்லாவற்றையும் எதிர்க்கும் அடுத்த எல்லையில் உள்ளனார்.
ஒரு குழந்தையின் சமூகப் பற்று என்பது சுய அடையாளத்துடன் கூடிய தேடுதல் என்பதுதான். நான் என் இரண்டாந்தரப் பிரஜையாக நடத்துப்படுகின்றேன் என்ற கேள்விக்கு விடை அளிக்கின்றது அந்த சமூகக் கண்டு பிடிப்பு ஊடாக இரண்டாந்தரப் பிரஜை என்பதை இல்லாது ஒழிக்க ஒரு மாற்று வழியைக் காண்கின்றது. நான் இரண்டாந்தரப் பிரஜை என்பதை இனம் கண்டு கொள்ள தமிழ் தெரிவதன் ஊடாக தமது சுய அடையாளத்தைத் தேடுதல் என்பது இலகுவாகிறது.

இந்நிலையில் சிலர் இதையும் சில வழமையான



படிப்பகம்

www.padippakam.com



சில செய்திகளையும் சேர்த்து கொடுக்கலாம் என்ற கருத்து உண்டு. அப்படிப் பார்த்தால் சினிமாப் பாடலையும் கூட சேர்க்கலாம். ஒரு விடையத்தைச் சேர்க்கும் போது ஏன் எதற்கு என்ற கேள்வி முக்கியமானது. ஒரு செய்தி செல்லும் பொது அது எதைச் சாதிக்கிறது என்பது முக்கியம். ஒரு பாடல் ஒரு கதை வெறும் புலம்பலல்ல. அதைக் கொடுக்கும் போது சமூகத்தில் குழந்தை கற்றுக் கொள்ள, தெரியாத ஒரு புதிய விடையத்தை அறிந்து கொள்ள என பல துறைகளை உள்ளடக்கி இருக்க வேண்டும்.

தமிழ் சினிமாப் பாடல் போல, குப்பை தமிழ் வெளியீடு போல சம்பந்தம் இல்லாத வார்த்தைப் பிரயோகங்களைத் தவிர்ப்பது அவசியம். ஏதோ ஒன்றைச் சொல்லும் போது அது அக்குழந்தைக்கு அறிவையும், தமிழ் கல்வியையும் இணைத்துச் செல்ல வேண்டும்.

எனது சுய கடமை என்ன? நான் யார்? என்ற கேள்வியை உள்ளடக்கிய , ஏன் தமிழைக் கற்க வேண்டும் என்ற தெளிவைப் புகட்டக் கூடிய வகையில் தமிழ் கல்வி புகட்டப்படுவது இன்று அவசரமான எம்முன் உள்ள பணியாகும். அது இல்லாத வரைக்கும், அது வரையறுக்கப்பட்ட எல்லைக்குள் அதன் உயிர்வாழ்வு முடிந்து விடும் என்பதைக் கவனத்தில் எடுப்பது மிக அவசியம். இறுதியாக நாம் உங்கள் முன் விளங்கப் படுத்திய விடயத்தை ஒரு தத்துவமாக அல்லது இது தேவை இல்லை என்று பொதுவாகக் கூறும் தலைமுறைக்கு சிலவற்றைக் கூறுவது அவசியமாகிறது.

இந்த நுற்றாண்டின் ஆரம்பத்தில் அல்லது எமக்கு முந்திய தலைமுறையின் கல்வியை எடுப்பின் அது ஐரோப்பாவாக இருந்தாலும் சரி எம் நாடாக இருந்தாலும் சரி அங்கு கல்வி என்பது மதம் சார்ந்ததாகவே இருந்தது. இதை எதிர்த்து அக்காலத்தில் ஆய்வாளர்கள் போராடிய அதே நேரம் விஞ்ஞானக் கல்வியை புகுத்த முனைந்தனர். அப்போது பலர் அதை எதிர்த்தனர். சிலர் அதையும், இதையும் சேர்க்கக் கோரினர். ஆனால் இறுதியில் முழுக்க முழுக்க கால ஓட்டத்தில் விஞ்ஞானக் கல்வி புகுத்தப்பட்டது. இன்று இந்தக் கல்விக்கு சமூக விஞ்ஞானக் கல்வியைப் புகுத்தும் போது இந்தத் தலைமுறை அதே பாணியில் எதிர்க்கின்றது. ஆனால் அடுத்து தலைமுறைக்கு, சமூக விஞ்ஞானத்தை தமது கல்வியாக புகுத்தாவிட்டால் மனித இனமே வாழ முடியாது அழியும்.

எப்படியும் விஞ்ஞானம் இன்றி இன்று வாழ முடியாது ஆகவே நாம் அதை எம்சிறுவர்களுக்கு இன்றே புகுத்துவது உடனடிப் பணி என்பதை சென்ற தலைமுறை கல்வியுடன் ஒப்பீட்டுப் புரிந்து கொள்வது அவசியம். நாம் சொல்லும் ஒவ்வொரு சொல்லும் மனிதனை சிந்திக்கும் வகையில் சொல்லப்பட வேண்டும் என்பது அடிப்படை. இதைப் புரிந்து கொள்வது பெற்றோரினதும், கற்பிப்பவர்களினது உடனடித் தேவையாக உள்ளது. இக்கட்டுரை தொடர்பான விமர்சனத்தையும் கருத்துக்களையும் நான் வரவேற்கிறேன்.

மேலும் இது போன்ற பல சமூக விடயங்களை உள்ளடக்கிய, அதாவது வர்க்கம், சாதியம், பெண்ணியம், தேசியம், நிறம், மதம், பண்பாடு, கலாச்சாரம், இசை, சுற்றுச்சூழல் .... என பல நூறு தமிழ்க் கட்டுரைகளை கீழ் உள்ள இணையத்தில் பார்க்கமுடியும்.

**இணையம் : WWW.TAMILCIRCLE.NET**

## கண்ணீர் அஞ்சலி



எமது சங்க செயற்திட்டங்களையும், வருடாந்த ஆண்டுவிழா நிகழ்ச்சிகள் மற்றும் மலர் பற்றிய விமர்சனங்களை நேரிடையாக தெரிவித்து எம்மை ஊக்குவித்தவர் கலைச்செல்வன்.

**சமூகஅக்கறையாளனுக்கு எங்கள் அஞ்சலி**



படிப்பகம்

www.padippakam.com



# சிந்தனையை சிறப்பாக்கிய சிற்பி!

***ஜேஆன் — பவுல் சாற்ரார்***
(1905-1980)

**சாற்ராரும் மானுடவிடுதலையும்
கனவுகளுக்கு விடைகொடுத்த
இருப்பின் வலியுணர்ந்த உன்னதம்.**

21.ஜுலை 2005 சாற்ராருக்கு 100 வயது, இது நினைவாகி விட்டது.

ஒரு பிந்திய- மந்தமுடைய சமூககமாக மானுடம் இருப்பதும், உற்பத்தியின் வீச்சில் உறுதிப்படுமெனவெண்ணும் வாழ்வாதாரங்களையும் நம்புவதற்கு மனத்தளவிற்கூட முடியாதிருக்கும் காலம் இன்றைய காலமாகும். எந்தத் தளத்திலும் கால்வைத்திருக்க முடியாத தருணத்தில் மிதக்கும் மௌன மனவோட்டத்திற்கு மதிலொழுப்பிக் கொள்ள முனைவதில் ஆத்மீகம் தோற்றுப்போனது. அவதியோடு சாவை நோக்கும் கரித்துண்டமாக வாழ்வும்,உயிர்ப்பும் சிறுமைப்படும்.

சுதந்திரம்-விடுதலை இன்றைக்கு அதிகமாக உணரப்படும் வார்தைகள்,குறியீடாகிக் கருத்துணர்ந்து அநுபவிக்கும் மானுட தரிசனமாகும்.இவற்றை இதுவரை மானுடம் நேர்த்தியாகப் பெறமுடிந்ததா? அநுபவித்துக் கொள்ளும் வாய்ப்புத்தாம் கிடைத்ததா?

இன்னும் யோசிப்பதே விடையாகும்.

பொருளுண்டு,புவியுண்டு! எனினும் மானுடர் வாழ்வு வெற்றுப் புள்ளியில் வீரியம்பேசி வினையாற்ற வக்கின்றித் தன்னைத்தானே அடிமைத் தளைக்குள் உந்தி தள்ளியபடி.

இங்கு சாற்ராரும் இந்த நெருக்கடிக்கு உந்தப்பட்டுத் தன் வாழ்நாளெல்லாம் மனித விடுதலைக்காகச் சிந்திக்கிறார். தன் முன்னோர்களையும்,பின்னோர்களையும் கோடுகிழித்து சுதந்திரமென்றால் சுயதேர்வு செயற்படுத்தல், என்பதும்,எதையும் மறுதலிக்கையில் தேர்விடுதலே சுதந்திரமென்பதாயும் கூறிச் சென்றவர்.இருபதாம் நூற்றாண்டின் மகத்துவமற்ற முறைமைகளுக்காக மனிதம் பலியாகியதைக் காணும் அறிவுப்பரப்புக்குச் சொந்தக்காரர் சாற்ரார். பிரான்சின் குடிமகனாகவும், உலகக் குழந்தையாகவும் வரித்துக் கொண்ட அரசியல் மனிதனவர்.

«Being and Nothingness», «Huis Clos», «Les Mouches», «Les Mains Sales»,»La Nausee» «Critique of Dialectic Reason»,»Les Mots» என்ற பல நூற்களூடாய் மனிதரின் இருப்புக்கு விடைகாண முற்பட்டவர். தத்துவப் பேராசிரியராகப் பணிபுரிந்தவருக்கு இரண்டாவது உலமகாயுத்தம் தேசிய உணர்வைத் தூண்டிவிட பிரான்சின் இராணுவத்தில் சேர்ந்திருந்தபோது ஏற்பட்ட மனச்சிதைவானது பின்னாளில் யூதஎதிர்ப்பு மனத்தளவிலிருந்ததாக இன்றைய சமூகவியலாளர் கூறுகின்றனர்.என்றபோதும் பொதுவுடைமைப் போராளியாகவே இவரை நான் பார்க்கிறேன்.இவர் இரண்டாவது உலகப் போரில் கிட்லரின் படுகொலைகளை: அவுஸ்விச், செல்மோ,மாஜ்டானேக்,சோபிபோர் ஆகிய யூதஅழிப்புச்சாலைகளைப்பற்றி(இவ்விடங்களில் பல இலட்சம் மக்கள் நச்சுவாயுவுக்குப் பலியானார்கள்)மௌனம் சாதித்ததாகவும்,அதுபற்றி ஒருவார்த்தை எழுதவில்லையென்றும் இந்த நூற்றாண்டின் புதிய தலைமுறை குற்றஞ் சாட்டுகிறது.

சமூகத்தில் அறிவுஜீவியின் பாத்திரமானது இதயத்திற்குச் சமமானதென நாம் பலமாக நம்பலாம்.

1964 இல் நோபல் பரிசையே வேண்டமறுத்துப் போராடிய இந்த மகத்தான மனிதரை,இன்றைய மாணர்வர்கள் புரட்டிப்போடுவதும் கண்கூடாகவே நடக்கிறது. நமது தவறுகள் நாளை நம் மாணவர்களால் புதியபல விளக்கம் பெறுமெனச் சொல்லலாம்.சாற்ரார் பற்றிய நிறைய விமர்சனங்களை பற்பலர் முன் வைக்கின்றனர். தமிழ்ச் சூழலில் பின் நவீனத்துவம் பேசும் நம் நண்பர்கள் இவர்மீதான தமது பார்வைகளை இதுவரை முன்வைக்கவில்லை.

**- ப. வி. ஸ்ரீரங்கன்**



படிப்பகம்

www.padippakam.com



# தீவக மாணவர்களின் இன்றைய கல்விப் போக்குகள் ஓர் ஆய்வு

- ஆசிரியை சுமதி சுரேந்திரன்
யா. சேர். வை. து.ம.ம.வி., வேலணை

இலங்கையின் வடமேற்கே யாழ்குடா நாட்டின் தென்மேற்கே அமைந்துள்ள தீவுத் தொகுதியே தீவகமாகும். எண்சாண் உடம்பிற்கு சென்னி சிறந்திட்டாற்போல் இலங்கையின் சென்னிபோல் திகழ்ந்து சிறப்புப் பெறுவது யாழ்ப்பாணமாகும். பல கல்வியிலாளர்களை, மூளைசாலிகளை உருவாக்கி விட்ட பெருமை யாழ்ப்பாணத்திற்கு உண்டு. வடமராட்சிப் பிரதேசமானது எவ்வாறு கல்விப் பாரம்பரியத்தில் உயர்ந்து விளங்கியதோ அதுபோல் மிகச் சிறந்த கல்விப் பாரம்பரியம் ஒன்றை தன்னகத்தே கொண்டதாக தீவகம் விளங்குகின்றது. இரு பெரும் இடப்பெயர்வுகளுக்கு பின்பு முகம் கொடுத்த வரலாறு தீவகத்திற்கு உண்டு. 1991, 1995 காலப்பகுதிகளில் ஏற்பட்ட இடப்பெயர்வுகளிற்கு பின்பு 1996 இல் மெல்ல மெல்ல குடியேற்றத்திற்கு உள்ளானது. மீளக்குடியேறி கிட்டத்தட்ட 10 வருடங்கள் கழிந்துவிட்ட நிலையில் இன்று தீவகத்துள் கல்விப்போக்கு எந்நிலையில் இருக்கின்றது என்பதனை ஆராய்வதாக இக்கட்டுரை அமைகின்றது.

மாணவர்களுடைய அறிவு மட்டத்தை அளவிடும் கருவியாக தற்பொழுதும் பயன்படுத்தப்படுவது பொதுப்பரீட்சைப் பெறுபேறே ஆகும். அந்தவகையில் தீவக கல்வி வலயப் பாடசாலைகளின் பெறுபேற்று அட்டவணையை அவதானிக்கின்றபோது அது குறைந்த மட்டத்தில் இருப்பதனையே அவதானிக்க முடிகின்றது. எனவே பழம்பெருமை பேசிக் காலத்தை கழித்துக் கொண்டிராமல் தீவகத்தின் கல்வி பின்னடைவான நிலையில் இருப்பதற்கான காரணங்களை இனங்காணுவதும் கல்வித்தரத்தை உயர்த்துவதற்கான ஆக்கபூர்வமான நடவடிக்கைகளை எடுப்பதும் தீவகத்தின் கல்விவளர்ச்சியில் அக்கறை கொண்ட அனைத்து தரப்பினரதும் தார்மீக கடமையாகிறது. அந்த வகையில் தீவக மாணவர்களின் கல்வித்தரம் நலிவுபட்டுக் காணப்படுகின்றமைக்கு பின்வருவனவற்றை காரணங்களாக கூறலாம்.

1. மாணவர்கள்
2. ஆசிரியர்கள்
3. பாடசாலைகள்
4. கல்வி அலுவலர்கள்
5. பெற்றோர்
6. சமுதாயம்

இன்று தீவகப் பாடசாலைகளில் கற்றுக் கொண்டிருக்கின்ற மாணவர்களை உற்று நோக்குகின்றபோது, கல்வியின் தாற்பரியத்தை அதன் முக்கியத்துவத்தை பெற்றோர், ஆசிரியர்களின் வற்புறுத்தலிற்காக படிப்பவர் போன்று காணப்படுகின்றனர். மாணவர்களுக்கேயுரிய ஒழுக்கங்களான மற்றவர்களுக்கு மதிப்பளிக்கும் பண்பு, பணிவு, குருபக்தி, பாரம்பரிய பண்பாட்டு விழுமியங்களை மதித்தல் போன்ற பண்புகள் மிகக்குறைந்த அளவிலேயே காணப்படுகின்றன. தமக்கு தேவையான விடயங்களை நூல்களை வாசிப்பதினூடாக தேடிப் பெறுகின்ற வழக்கம் மாணவர்கள் மத்தியில் குறைந்து விடுகின்றது. பாடப்பரப்பு சம்பந்தமான அனைத்து வியடங்களும் ஆசிரியரது வாயிலிருந்து வரவேண்டும் என்று எதிர்பார்க்கின்றார்கள். அதுமட்டுமல்லாமல் தீவகப் பாடசாலை மாணவர்களிடையே வரவு ஒழுங்கீனம் மிக அதிகமாக அவதானிக்கப்பட்டுள்ளது.

அடுத்தது தீவகப் பாடசாலைகளை அவதானிக்கும்பொழுது பொருத்தமான ஆசிரியர்களை வகுப்புகளிற்கு ஒதுக்காத பண்பே காணப்படுகின்றது. மாணவர்களது கல்வி வளர்ச்சியில் ஆரம்பக்கல்வி ஆசியர்கள் மிக



படிப்பகம்

www.padippakam.com



முக்கியமானவர்கள். பல பாடசாலைகளில் உரிய பயிற்சி பெறாத பல ஆசிரியர்கள் ஆரம்ப வகுப்புகளிற்கு அமர்த்தப்பட்டுள்ளமையையும் அவதானிக்க முடிகின்றது. மற்றும் தீவகப் பாடசாலைகளில் கடமையாற்றுகின்ற பல ஆசிரியர்கள் பல மைல் தூரத்திற்கு அப்பாலிருந்து வருபவர்களாக காணப்படுகின்றனர். ஒரு சிலர் இரண்டு, மூன்று மணித்தியாலயங்களை தமது பிரயாணத்திற்கெனவே செலவிடுகின்றனர். இதனால் உடல், உள ரீதியில் அவர்கள் பாதிப்புறுகின்றனர். இவர்களால் முழுமையாக கற்பித்தல் செயற்பாட்டில் ஈடுபட முடியாமல் போய்விடுகின்றது.

அடுத்ததாக இப்பொழுது ஏற்கனவே மூடப்பட்டு இருந்த பல பாடசாலைகள் இயங்க ஆரம்பித்து உள்ளன. பல பாடசாலைகளில் மாணவர் தொகை மிகக் குறைந்த மட்டத்தில் காணப்படுகின்றது. பாடசாலைகளுக்கு இடையிலான வளப்பங்கீட்டிலும் ஏற்றத்தாழ்வுகள் காணப்படுகின்றன.

இராணுவ முள்வேலிகள், இராணுவச் சோதனைச் சாவடிகள், அரண்களிற்கு மத்தியிலே இயங்குகின்ற பாடசாலைகளும் தீவகத்திலே காணப்படுகின்றன.

மற்றும் கல்வியதிகாரிகளை நோக்கும்பொழுது அவர்கள் வெறுமனே அதிகாரம் செலுத்துபவர்களாகவே காணப்படுகின்றனர். வெறுமனே மேற்பார்வை செய்வதுடன் தமது கடமை முடிந்துவிட்டதாக இவர்கள் கருதுகின்றார்கள். பாடத்திட்டம் பூர்த்தி செய்யப்பட்டிருக்கின்றதா? புள்ளிகள் பதியப்பட்டிருக்கின்றதா? தேவைகள் பேணப்பட்டிருக்கின்றதா? என்பதிலேயே கூடிய அக்கறை காட்டுப்பவர்களாக காணப்படுகின்றனர். மாணவர்களது மெல்லக் கற்கும் இயல்பையும் ஆசிரியர்களின் நிலையையும் கவனத்திற் கொள்ள மறந்து விடுகின்றனர்.

அடுத்து ஒரு மாணவனின் கல்வியிலே மிக முக்கிய பங்கு வகிப்பவர்கள் அப்பிள்ளையின் பெற்றோர்களே ஆவர். குழந்தைகளுக்கு கருவறையில் வைத்தே கல்வி ஞானம் ஊட்டப்படல் வேண்டும். அக்கல்வி ஞானமே அக்குழந்தைகளில் எதிர்கால வாழ்விற்கு ஒளி ஊட்டுவதாக அமையும். இந்நிலைமையை பல தாய்மார்கள் உணர்ந்து கொள்வதில்லை. குழந்தை பாடசாலைக் கல்விக்கு புகுவதற்கு முன்புள்ள முன்பள்ளிப் பருவத்திலும் கூடிய கவனம் செலுத்தப்படல் வேண்டும். தாயானவள் முன்பள்ளியின் செயற்பாட்டை உணர்ந்து அதற்கேற்ற விதத்தில் குழந்தையின் வீட்டுச் சூழலை இசைவாக்கம் செய்ய வேண்டும். வீட்டுச் சூழல் முன் பள்ளியில் கற்ற கல்வியை வசதிப்படுத்துவதாய் தொடர்ந்து ஈடேற்றம் செய்வதாய் அமைதல் வேண்டும். இவ்வறிவு தீவகம் போன்ற கிராமப்புறத்திலே வாழ்கின்ற பெற்றோர் மத்தியில் மிகக்குறைவானதாகவே காணப்படுகின்றது. பிள்ளைகளை பாடசாலைக்கு அனுப்பி விட்டாலே தமது கடமை முடிந்து விட்டதாக பலர் கருதுகின்றனர். தமது பிள்ளைகளின் உணர்ச்சிகளுக்கு மதிப்பளித்தல், அவர்களோடு மனம் விட்டு அளவளாவுதல் போன்ற பண்புகள் எமது பெற்றோர்கள் மத்தியில் இல்லை என்றே கூறலாம். இதனாலே பல மாணவர்கள் வழிதவறிப் போகின்றமையும், தீய வேண்டத்தகாத பழக்கங்களிற்கு அடிமையாகி எதிர்காலமே சிதைந்து போகின்ற அவலமும் ஏற்படுகின்றது.

அடுத்தது சமூகம் பற்றி எடுத்து நோக்குவோம். தற்பொழுது தீவக மண்ணிலே வாழ்பவர்கள் பொருளாதாரத்திலே மிகவும் பின் தங்கியவர்கள். கல்வியறிவு குறைந்தவர்கள் பொருளாதார வசதியிலும், கல்வியறிவிலும் மேம்பட்ட பல குடும்பங்கள் நகரை அண்டிய பிரதேசங்களில் குடியேறி உள்ளனர். அதிக குடும்பங்கள் விவசாயம், கடற்றொழிலை, கூலித்தொழிலை தமது சீவனோபாய தொழிலாக கொண்டு வாழ்க்கை நடத்துபவையாக காணப்படுகின்றன. கோயில் இல்லா ஊரில் குடியிருக்க வேண்டாம் என்பதற்கிணங்க தீவகத்தின் மூலை முடுக்கெங்கும் பரந்து



படிப்பகம்

www.padippakam.com



காணப்படுகின்றன. எமது பிரதேசத்தை விட்டு புலம்பெயர்ந்து வெளிநாடுகளில் வசிக்கும் எம்மவர்களின் கைங்கரியத்தாலும் சில வியாபாரப் புள்ளிகளின் தாராள மனப்பான்மையாலும் கோவில்கள் நாளுக்கு நாள் புதுப்பொலிவு பெற்றுத் திகழுகின்றன. தமது பிரதேச கோவில்களுக்கு வாரிவழங்குவதில் இருக்கின்ற மனோநிலை தமது பிரதேச மாணவர்களின் கல்வியை மேம்படுத்த வேண்டும் என்பதில் இல்லாமிலிருப்பது வேதனைக்குரிய ஒரு விடயமாகும். இவ்வாறாக தீவக மாணவர்களின் கல்வி வீழ்ச்சிக்கு பல்வேறு காரணங்கள் கூறலாம்.

இனி தீவக மாணவர்களின் கல்விநிலைமை மேம்பட வேண்டுமாயின் எத்தகைய நடவடிக்கைகள் எடுக்கப்படல் வேண்டும் என்பது பற்றி நோக்கலாம். தீவகத்திலே கற்றுக் கொண்டிருக்கின்ற மாணவர்கள் "கல்வியே வாழ்க்கை வாழ்க்கையே கல்வி" என்ற யதார்த்தத்தை புரிந்து கொள்ளல் வேண்டும். கல்வியானது அறிவை, ஆற்றலை வளர்ப்பது மட்டுமல்ல மனிதனை மனிதனாக வாழவைப்பதும் கல்விதான் என்பதை மாணவ உலகம் உணர வேண்டும். கல்வியின் முக்கியத்துவம் பாடசாலையின் அவசியத்தன்மை வாசிப்புப் பழக்கம் போன்றவை பற்றிய விழிப்புணர்வை மாணவர் மத்தியில் ஏற்படுத்துதல் வேண்டும். நேரந்தாழ்த்தி பாடசாலைக்கு வருதல் ஒழுங்கற்ற வரவு போன்றவற்றில் வெறுமனே பாடசாலைச் சமூகம் மட்டும் ஈடுபடாமல் பெற்றோர், கிராமசேவகர் போன்றோரும் இதில் தலையிட்டு உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும்.

அடுத்தது ஆசிரியர்கள் அர்ப்பணிப்புடன் செயலாற்றுபவர்களாக காணப்படல் வேண்டும். ஒரு உயிருடன் விளையாடுகின்றோம் என்பதனை அவர்கள் உணர்ந்து கொள்ளல் வேண்டும். இந்த நாட்டின் எதிர்கால சந்ததியினர் தன் கைகளில் ஒப்படைக்கப்பட்டிருக்கின்றனர். நாட்டின் தலைவிதியை தீர்மானிக்கப்போகிறவர்கள் அவர்கள்தான் என்பதை ஆசிரியர்கள் உணர்ந்து கொள்ளல் வேண்டும். மாணவர்களது தரத்திற்கு இறங்கி வந்து அவர்களது அடைவு மட்டத்திற்கேற்ற வகையில் கற்பித்தல் வேண்டும். போக்குவரத்து, பாதுகாப்பு காரணங்கள் போன்ற இன்னோரன்ன காரணங்களினால் தீவகப்பாடசாலைகளுக்கு கடமையாற்ற வர பலர் தயங்குகின்றனர். இந்நிலைமைகள் மாற்றியமைக்கப்படல் வேண்டும். ஆசிரியர் இடமாற்றமானது ஒழுங்கான முறையில் நடைமுறைப்படுத்தப்படல் வேண்டும்.

அடுத்தது தீவகத்தின் பல பாடசாலைகளில் மிகக் குறைந்த மாணவர்களே உள்ளனர். பல பாடசாலைகள் எதுவித அடிப்படை வசதிகளோ பௌதீக வளங்களோ இல்லாத நிலையில் இயங்கி வருகின்றன. அதேவேளை போதிய வசதிகளுடனும் அனைத்து பௌதீக வளங்களுடனும் ஆசிரிய வளங்களுடனும் சில பாடசாலைகள் இயங்கி வர அங்கே மாணவ வளம் மிகக் குறைந்த அளவிலேயே காணப்படுகின்றது. இத்தகைய பாடசாலைகள் ஒன்றிணைக்கப்படல் வேண்டும். தமது பிரதேசத்தில் காணப்படுகின்ற அனைத்து வளங்களையும் அனைத்து மாணவர்களும் அனுபவிக்கின்ற நிலைமை கைகூடிவரல் வேண்டும். மேலும் பாடசாலைகள் சுதந்திரமாக இயங்குவதாக இருக்கவேண்டும். பாடசாலைகள் சுயமாக இயங்குவதில் எந்தத் தரப்பினரதும் நெருக்கடிகள் இருத்தலாகாது.

மேலும் கல்வியின் முக்கியத்துவத்தை முதலிலே பெற்றோர்கள் உணர வேண்டும். கற்றலுக்குரிய சூழலை வீட்டிலே பிள்ளைகளிற்கு அமைத்துக் கொடுத்தல் வேண்டும். கற்றலிற்கு தேவையான உபகரணங்களுடன் பாடசாலைக்கு அனுப்பிவிட்டால் தமது பிள்ளை கற்றுத் தேறிவிடும் என நம்புகின்றனர். ஒரு மாணவனுடைய கல்வி விருத்தி அடைய வேண்டுமாயின் உடல் உறுதியடைய வேண்டும். உடல் உறுதியைப் பேணுவதற்கு வேண்டிய ஊட்டச்சத்துள்ள உணவு, சுகாதார பழக்கவழக்கங்கள், ஒழுங்கான முறையில் வழங்கப்படல் வேண்டும். உடல் உறுதியைப் பேணக்கூடிய விளையாட்டு உடற்பயிற்சி போன்றவற்றில் மாணவர்கள் ஊக்குவிக்க வேண்டும். இதனை மகாகவி பாரதியார்



படிப்பகம்

www.padippakam.com



"காலை எழுந்தவுடன் படிப்பு - பின்பு
கனிவு கொடுக்கும் நல்ல பாட்டு
மாலை முழுதும் விளையாட்டு - என்று
வழக்கப்படுத்திக் கொள்ளு பாப்பா"

எனப் பாடுகிறார். மொத்தத்தில் பெற்றோர் பிள்ளைகளுடன் அன்புடன் கூடிய அந்நியோன்னியமாக உறவு பூண்டு தமது பிள்ளைகளின் கல்வியை மேம்படுத்தும் நடவடிக்கையில் ஈடுபடல் வேண்டும்.

அடுத்தது தீவகத்தை சேர்ந்த பலர் ஐரோப்பிய நாடுகளில் வாழுகின்றனர். அவர்கள் ஓரளவு செழிப்பான வாழ்க்கை வாழ்பவர்களாக காணப்படுகின்றனர். முற்போக்கான சிந்தனை கொண்ட ஒரு சில மனிதர்கள் தமது பிரதேசத்து மாணவர்களின் கல்வி மேம்படுத்தப்படல் வேண்டும் என்ற உயரிய நோக்கத்துடன் தாம் படித்த பாடசாலைகளுக்கு பல்வேறு உதவிகளை வழங்குவதன் ஊடாக தமது பிரதேச கல்வி வளர்ச்சியை உயர்த்த அரும்பாடுபட்டு வருகின்றனர். அவர்களுடைய இத்தகைய மனப்பாங்கு உண்மையிலேயே போற்றுவதற்குரியது. இன்னொரு பகுதியினர் தமது பிரதேசத்து ஆலயங்கள் மேம்படல் வேண்டும் என அயராது உழைப்பவர்களாக காணப்படுகின்றனர். அவர்கள் மாணவர்களின் கல்வி வளர்ச்சிக்கு தம்மாலான உதவியை செய்ய வேண்டும்.

தொகுத்துப் பார்க்கின்றபோது பல்வேறு காரணிகளால் தீவகத்தின் கல்வியானது மிகப்பின்னடைவை நோக்கிச் சென்று கொண்டிருப்பதனை அவதானிக்க முடிகிறது. எனவே ஒரு பகுதியினரை மற்றைய பகுதியினர் குற்றம் சாட்டிக்கொண்டிராமல் அனைவரும் ஒன்றிணைந்து தம்மாலான அனைத்து முயற்சிகளையும் எடுத்து தீவுகத்தின் கல்வியை மேம்படுத்த வேண்டும்.

**மாணவர் ஆக்கம்**

## விஞ்ஞானமே
## நீ விட்ட வழி எதுவோ

விடிவுக்கு வழி நீ யென்று வசனங்கள்
அழிவுக்கு பழிநீ யென்று விசனங்கள்
தலைப்பை அவிழ்க்க தலை பூதான் நின் வழியோ
மலைப்பை மறந்து நிலைப்பை நீ தெரிந்திடய்யா
துல்லியமாய் ஓசோனில் துவாரமும் இட்டுவிட்டாய்
விஞ்ஞானமே உந்தன் விந்தையின் எதிரொலியாய்
இயற்கை அன்னையும் கிளர்ந்தெழுந்து
மனித குலத்திற்கு சாவு மணியும் அடித்துவிட்டாள்
ஏற்றம் மட்டும்தான் நீ எழுதிப்போன சொத்து
இறக்கம் எல்லாம் நீ விட்டுபோனவனின் தத்து
சீற்றம் கொண்டு அவன் சிதைத்து கொண்ட முத்து
அன்று நீ ஹிரோஷிமாவில் விதைத்த அணு வித்து
தழைக்கவில்லையே இன்றும் முத்து

நாகசாகியில் நாபேச நாணல்கள்
பேசாமல் பேசும் உன் நாசத்தை
ஓசொனில் ஒளிக்காத ஓட்டைகள் ஓலமிட்டு
- கூறுமுந்தன் ஒழுக்கக் கேட்டை
விஞ்ஞானமே உந்தன் விந்தை கண்டு
பொறாமை கொண்டு
கடல் அன்னை ஆர்ப்பரித்து அடியோடு
அழித்து விட்டானே - எம் இனத்தை
புற்றுநோய் என்றும் சார்ஸ் என்றும்
பல விதமாய் கூற்றுவரை
உலகிற்கு அறிமுகம் செய்த பெருமையும்
உன்னையே சாரும்
காட்டோடு கவிந்திருந்த நச்சரவை (எயிட்ஸ்)
வீட்டோடு விலை பேசி வீரஞ்சொல்லி இன்று
நாட்டோடு நின்ற சச்சரவை கூட்டோடு அழியென்று
- கூவிக் கொள்ளும் நிலை
விஞ்ஞானமே நீ விட்ட வழியினால்
மனிதன் விண்வெளியில்
தடம் பதித்து வெற்றியோடு திரும்பிவிட்டான்.
இனி என்ன சாகசம் இருக்கிறது நீ - புரிய
அழிவுப்பாதை தனை விட்டு விலகி
ஆக்கப்பாதைதனில் தொடரட்டும் உன் விந்தை
தவறு இவன் செய்திருந்தால் திருத்தி கொள்ளட்டும்
தப்புத்தான் செய்வதென்றால் வருந்தியே கொள்ளட்டும்

**- மகிஷி தியாகராசா**
A/L 2006 கலைப்பிரிவு



படிப்பகம்

மாணவர் ஆக்கம்

# உலகையே உலுக்கிய சுனாமியே

துறைமுக அலையா? துயரத்தின் அலையா?
ஆழிப் பேரலையா? அழிவின் பேரலையா?
கொடூர அலையா? இல்லை கொலையலையா?
இல்லை இல்லை
உலகையே உலுக்கிய உயிர்களைப் பறித்துச் சென்ற
எமதர்மனின் கையாளா? உன் பெயர் சுனாமியா?

அனுமதி இன்றி! அறிவுப்பேதுமின்றி!
இந்தோனேசியாவின் சுமத்திராதீவில் ஊற்றெடுத்ததென்ன?
இலங்கை! இந்தியா! மாலதீவு! போன்றபல நாட்டில்!
ஊடுருவி உயிர்பறித்ததென்ன?

பாலைவனத்தில் அக்கினிக்குஞ்சு! எம்நாட்டில் சுனாமியாச்சு!
அந்த நேரம் நீ நூற்றாய் அயல்நாடுகள் உதவிற்று!
முடிந்தவரை எழுந்து விட்டோம்! இறந்தது மீட்க முடியவில்லை!
அழிவானோர் ஏராளமானோர் உருவானோர் கவிஞரும் சிலர்!

விண்வெளியில் அரண் அமைத்தான் மனிதன்!
மண்ணின் கீழும் குகை அமைத்தான் மனிதன்!
இயற்கையை இலகுவாய் ஆழ நினைத்தான் மனிதன்!
ஆதலால்தான் வந்ததுவோ சுனாமி! - இல்லை
இயற்கை மனிதனுக்கு விடுத்த சவால் வடிவம் தானோ!

கடற்கரையில் கால்பதித்து முத்தெடுத்தான் பிடிக்கலையோ?
கடலலயில் கப்பலோட்டி மூழ்கியெழுந்தான் பிடிக்கவில்லையோ
கடலலையில் பிறந்து கடலலையில் தவழ்ந்து
கடலையே நம்பி வாழ்ந்த மனித வாழ்வு
பிடிக்காமலோ பழிவாங்கிச் சென்றாய் சுனாமியலையே

குழந்தை வாழ தீய உலகென்றோ?
தாய்தந்தையர் வாழ தர்மமில்லா தராதரமற்ற உலகென்றோ?
இளைஞர் வயோதிபர் வாழ இரக்கமற்ற வன்மையான உலகென்றோ?
பாவ பூமியில் வாழ விடாது பேதமின்றிக் கொண்டு
சென்றாயோ சுனாமியலையே

கடலலையின் சீற்றத்திற்கு கவிவடிக்க முடியாதென்றோ?
கவிச்சக்கரவர்த்தி கம்பன் இந்தயுகம் தோன்றவில்லையோ? - இல்லை
சுனாமியின் அநியாயத்தை தட்டிக்கேட்க தயங்கித்தானோ?
புரட்சிக் கவிஞன் பாரதி குறைந்த ஆயுளுடன் மறைந்து விட்டான்


சுனாமி அலை வந்தவரத்தென்ன வார்த்தைக்குள் அடக்க முடியலையே!
உலகமே வர்ணிக்கத் தயங்கையிலே - என்னெண்ணத்தில்
வார்த்தைகள் தோன்றலையே!
சுனாமி தந்த அவலத்தினை அளவிடத்தான் முடியலையே
முடிந்தவரை கூறுகின்றேன் அடங்கிவிடு ஆவேசம்
வேண்டாம் இனி முடித்துக் கொள் உன் ஆயுள்தனை

பா. ரஜிந்தன்
கலைப்பிரிவு 2006
உயர்தரம்

www.padippakam.com



# எதுவரை?



கவிதை ஒரு கடல்!
சிந்தனைகளால் நீத்தப்படும்வரை!
புன்னகை ஒரு வானவில்!
தூக்கம் வரும்வரை!
வாழ்க்கை இன்பத்தின் உறைவிடம்!
மகிழ்ச்சி உள்ளவரை!
வாழ்க்கை துன்பத்தை ஒழிக்கும் சக்தி!
தன்னம்பிக்கை உள்ளவரை
காலத்தை வென்றுவிடலாம்!
நேரத்தைமிகுதப்படுத்தும் வரை
காவியத்தை படைத்துவிடலாம்!
சாதனையை நிலைநாட்டும்வரை
சிந்தனை சக்தியின் பிறப்பிடம்!
ஓய்வு உள்ளவரை!
கல்வி அறிவின் நீருற்று!
திறமை உள்ளவரை!
வானத்தைப் பறந்து தொட்டுவிடலாம்!
கற்பனை சிறகடிக்கும் வரை!
மேன்மை மிக்கக் கல்வியைக் கற்றுவிடலாம்!
ஒழுக்கமிக்க மாணவராக உள்ளவரை!
இதயம் ஒரு அமைதியான ஆலயம்!
நினைவுகள் சேமிக்கப்படும்வரை!
காலை மலர்கள் அழகானவை!
மாலை மலராகி வாடும்வரை!
வெற்றியே வாழ்க்கை வழிகாட்டி!
உணர்ச்சி வசப்படாதவரை!
மகிழ்வான வாழ்க்கை சுகமானது!
இன்பமான தேடல் உள்ளவரை!
நட்பு ஒரு இனிய உறவு!
பிரிவு எனும் கசப்பு வரும் வரை!
கண்கள் பாலைவனம் போல் வரட்சியானவை
கண்ணீர் எனும் ஆறு பெருக்கெடுக்கும் வரை!
ஒவ்வொரு மனிதனையும் வெற்றி தேடிவரும்!
அவசர கோபங்களை தவிர்த்து வாழும்வரை!
ஒவ்வொரு மனிதனது வாழ்க்கையும் இன்பமாக
அமையும்!
பேராசை கொள்வதை நிறுத்தி வாழும்வரை!
நேரம் என்றுமே பொன்னானது!
மனித வாழ்வு நிலை பெற்றுள்ளவரை!
எந்த தோல்வியும் ஒவ்வொரு வெற்றியின்
ஆரம்பம்!
திடகாத்திரமான விடாமுயற்சி உள்ளவரை!
தமிழ் அழிவற்ற அரும் செல்வம்!
இவ்வுலகில் தமிழினம் வாழ்கின்றவரை!
கவிதைக்குக் குறைவில்லை! - ஜென்மம்
தோறும் கவிஞர்கள் தோன்றுகின்றவரை!
உலகம் ஒரு வாடகைவீடு!
மரணம் வரும்வரை!
நியாயங்கள் தண்டிக்கப்படும்!
உன்மைகள் தூங்கும்வரை!
ஏமாற்றாளர் வாழ்வார்கள்!
ஏமாளிகள் உள்ளவரை!
அடக்குபவர்கள் காணப்படுவார்கள்!
அடிமைகள் காணப்படும்வரை!

**- பா. ரஜிந்தன்**
கலைப்பிரிவு 2006 - உயர்தரம்



படிப்பகம்

www.padippakam.com



மாணவர் ஆக்கம்

# அகிலம் போற்றும் என் பாடசாலை

ஏழுகடல் சூழ்ந்த அழகிய தீவிலே!
பனை கூடாரம் நிறைந்த தீவினிலே!
நான்கு பக்கமும் தென்னம் தோப்பு அடிகரிக்கும் தீவினிலே!
தித்திக்கும் காற்று நாலாபுறமும் வீசுகின்ற தீவினிலே!
ஓங்கி வளர்ந்து இருக்கும் என் பாடசாலை!

ஆயிரத்தில் ஒருவராம் ஆனந்தமாய் பார் போற்றிட வாழ்த்தும் அதிபர்!
அகிலத்திலே தலைநிமிர்ந்து ஆனந்தமாய் வாழும் ஆசான்களே!
சிட்டு குருவிகளாய் பறந்து வந்து கல்வி கற்றிடவே
வேலணையாம் என் ஊரில் வேதகுருவாய் அமைந்த என் பாடசாலை

மணி மணியாய் கோர்த்த மாணிக்கம் போன்ற ஓடுகளும்
சீனப் பெருஞ்சுவர் போன்ற கட்டடங்கள்
நாலாபக்கமும் தென்றல் சில்லென வீசும் காற்றும்
மாடுகள் கூட்டம் கூட்டமாய் மேயும் என் ஊரிலே
கூடிக்கொன்டு விளங்குகின்றது என் பாடசாலை!

கோடி கோடி உதவிகள் பல புரிந்திடுவர்! எம் பழையமாணவர் கூட்டம்
அதற்கு கோளாகார கர்ப்பமாய் இருந்திடுவர் எம் அதிபர், ஆசான்கள் மாணவர்கள்

நாடு கடந்து சென்றாலும் தம் பாடசாலைப் பற்றை விடாத எம் பழைய மாணவர்கள்
பாரினிலே போற்றி வாழும் எம் பழைய மாணவர்!

அன்னை அருள் இருக்க அதனோடு அம்மன் அருளிருக்க
பாடசாலை என்னும் கழகத்திலே விளையாடும் சிறார்களே!
சற்று சிந்தியுங்கள் கல்வி கற்ற சாலையை
சற்று சிந்தியுங்கள் கல்வி கற்ற சாலையை

எங்கேயோ பிறந்தோம் எங்கேயோ வளர்ந்தோம்
எம்மை ஒன்றாக்கிய பாடசாலையே உமக்கு நன்றிகள்
ஆயிரம் ஆண்டுகள் சென்றாலும் உம் நினைவு மாறுமா?
ஆயிரம் வருடங்கள் சென்றாலும் எம் பாடசாலை நட்பு முடியுமா?

ஆல மரங்கள் ஆடிடவே அதில் குருவிகள் வாழ்ந்திடவே!
தென்னை மரங்கள் வரவேற்கவே அதில் தென்னவன் ஏறிடவே!
பனை மரங்கள் சிரித்திடவே, அதில் பண்புடையவன் கதைத்திடவே!
பாடசாலை வரவேற்கவே அதில் கல்விதனை கற்றிடுவோம்!

கல்வி தனை புகட்டிய ஆசானையும் - ஒரு கனமும்
கல்வி புகட்ட புகலிடமாய் இருந்த பாடசாலையையும்
நெஞ்சினிலே நிறுத்தி கொள்ளும் மாணாக்கர்களே!
நீர் எங்கு சென்றாலும் வாழ்த்திடுவீர்! வாழ்த்திடுவீர்!

பழைய மாணவர் உதவியோடும், பண்பான மாணாக்கர்களே
அறிவான அதிபரோடும், அழகான ஆசான்களோடும்
பார்போற்ற வாழ்க! எம் பாடசாலை வளர்க என வாழ்த்துகிறேன்!
பார்போற்ற வாழ்க! எம் பாடசாலை வளர்க என வாழ்த்துகிறேன்!


ர. ரேகா 11 அ



படிப்பகம்

www.padippakam.com





# இன்னுமா தலைக்குனிவு?

அறிவியல வளர்ந்தபின்பும் அதிசயம் வந்தபின்பும் - இந்த
அவனியோ புதுமைத்தோற்றம் பெற்றபின்பும்
பொறியாகச் சிந்தனைப்புரட்சி எழுந்த போதும் - இனி
பதுமையாக இன்னும் ஒதுங்குவதா பெண்ணே ?

மூடக்கொள்கைக்கு மூச்சுநிற்கும் வேளைதனிலே -அந்த
மூதாதையர் தொடர்ந்த பழைமைக்கு
வேடங்கொடுத்து முடிமறைத்து வாழ்ந்த வாழ்க்கை - இனி
வெட்டுண்ட தலைகளுடன் உந்தன் காலடியிலே

உருட்டிவிட்ட பம்பரமாக உயிர்ப் பதுமையாக - நீ
உள்ளுணர்வை உனக்குட் பொசுக்கிய புகை
கருக்கொண்டு வெடித்தே எழுச்சி தீயெனவே - உன்
காலில் நின்றிடு ! கலங்கிய காலம் கருக்கலிலே

பெண்ணே ! நீ நினைத்த இலக்குச் சற்றுத்தவறின் - அது
புரிந்துணர்ந்திட உன் தலை குனிந்து யோசி
மண்ணையாளும் மன்னனெ யானாலும் தயங்காது - உன்
மனக்கருத்தை வெளியிடு! மௌனம் ஏன்?

புகழ்மாலைகள் மேடையிலே உனைநாடி வருகையிலே - நீ
புளகாங்கிதத்துடன் தலைகுனிந்து ஏற்றிடுவாய்
அகம்நிறை மணவாழ்வின் இல்லற அத்தியாயத்தில்
உன் அன்பன் அணிவிக்கும் மங்கலநாணுக்கு மதிப்பளி!

தாய்மைப் பொறுப்பேற்கும் இயற்கைச் சக்திக்கு - நீ
தலைகுனிந்து கருவயிறு பார்க்கும் பூரிப்பாலே
சேய்களைப்பெற்று சீர்பெற்று உயர்ந்து வாழ்வதற்கே - என்றும்
சொந்தக்காலே உந்தன் பிறப்புரிமைச்சொத்து

**விக்னா பாக்கியநாதன்**
ஜேர்மனி



படிப்பகம்

www.padippakam.com



# புனைவுகளும், இறையியற்றன்மைகளும்!

ப. வி. ஸ்ரீரங்கன்

நமது மொழிக்குள் வந்து சேர்ந்த புனைவுகளுக்கு இறையின் வாயிலான மதிப்பீடுகளை கற்பித்து, அவற்றைக் கேள்விக்கிடமற்ற அமரத்துவப் படைப்புகளாக்க முனைந்த அரசியல் நோக்கங்கள்- இன்றும் புதிய வகை மாதிரியான ஏமாற்று வித்தைகளை சூழலின்பால் தள்ளி விட்டுப் படைப்பாளியை வெறும் ஊடகமாக்கும் கண்ணிகளைக் கொண்டியங்குகின்றன.படைப்பாளி செத்து,படைப்புப் பற்றிய புரிதலைவேண்டிக்கொள்வது ஒரு வகையான அரசியலில் மையங்கொண்ட மேற்குலகச் சிந்தனைதாம்.வடிவம் செத்து உள்ளடக்கமே உந்தித் தள்ளும் இயங்கியல் விதியைக் கொச்சைப் படுத்தும் கருத்துமுதல் வாதியான நீச்சேயின் கால மதிப்பீட்டின் பிறிதொரு வகையான புனைவுதாம், இந்தப் படைப்பாளியைக் காப்பாற்றும் ஒற்றைத் துரவ இலக்கியக் கொள்கை.நமது காலத்தின் அவசியமானது வெறும் மதிப்பீடுகளில் காலத்தைக் கண்டு கொள்வதில் மையங்கொள்ள முடியாது. காலத்தில் வாழாத மானுடத் தேவைகள் மக்களின் நலனினது விழுமியமாக இருக்க முடியாது.எனவே இந்தப் பெரும் கதையாடல்கள்-மனிதக் கதையாடல்களாக இனிமேலும் விருத்தியுற முடியாது.இந்நோக்கில் பழமையான நமது புனைவுகளைக் கட்டுடைத்தல் அவசியமான பணிதாம்.மாற்றத்தை வேண்டியவொரு மனித வாழ்வு அனைத்தையும் மாற்றியே தீரும்.

மறுத்தலின் வரட்டுத்தனமான விருப்புறுதி கணித்துக்கொள்ளத்தக்க எந்தப் புறநிலை மாற்றத்தையும் மௌனமாக உதாசீனப் படுத்துவதில் முன்நிலை வகிப்பதிலும்,அதன் தொன்மைமிக்க கருத்தறிலைத் தர்க்கத்தாலும் புதியவகைப் புரிதற்பாட்டினது கட்டுடைப்பின் மீதான மறுதலிப்பையும்-அதன் தன்னுணர்வுமிக்க ஒற்றைத்துருவ வியாக்கிமான கருத்துநிலை தாண்டா திடசங்கற்பத்தாலும் தனதிருப்பின் மூலத்தையுறுதிப்படுத்தும் மனநிலையைத் தோற்றுவிக்கும் மாதிரி மனித்தேவைகளை - பெரும் பரபரப்பின் வாயிலாக் கொட்டி வைத்திருப்பதில் இதுகாறும் நிலை நாட்டும், அறிவின்மீது. இந்தத் தளத்தின் மீது எவரொருவர் அறிவார்ந்த தேடலையிட்டுக் கொள்ள முனைந்தாலும் அந்தத் தேடல்மீதான எதிர்போக்கான மறுதலிப்பின் வினையாற்று குறிப்பிட்வொரு தளத்தில் தன் தர்க்கத்துக்குமாற்றான கருதுகோளை - அதன் உச்சபச்ச நிராகரித்தலூடாய் இருப்பிழக்கத்தக்க பனுவல்களாக மாற்றுவதிலும்,குறுகிய மனத்தளவான மதிப்பீடுகளின் மாதிரிகளைக் கொண்டு வெற்றிடத்தை நிரப்புதலில் இதுகால வரை காலத்தைக் கடத்திவருகிறது.

எந்தவொரு துறைக்கும் பொத்தாம் பொதுவான,முடிந்த முடிவான திட்ட மாதிரி வடிவமுமில்லை.காலத்தால் யாவும் மாற்றமுறும். நியூட்டனின் அரிய கண்டுபிடிப்புகளாலும் சரி,அன்றி வியக்கத்தக சமூக விஞ்ஞானக் கட்டங்களும் சரி மாற்றமுற்றே தீரும். இன்று மெய்யாகியிருக்கும் தளம் நாளை பொய்யாகிப் போவதொன்றும் இந்த மனித வாழ்வுக்குப் புதியதல்ல. இந்த விஞ்ஞான விளையாட்டுகளுக்கே இந்தக் கோலமென்றால் நமது புராண இதிகாச மௌன வாசிப்புகளுக்கு மட்டும் பொருந்தாத் தன்மையான திடவுறுதி நிலைத்திருப்பது தர்க்கத்தின் நியாயப்பாட்டிற்கு பொருந்தாத அதி மத்திமமான சமூக உளவியலாகும்.இந்தத் தளத்தின் மீதான மறு வாசிப்பென்பது அதன் உள்ளாந்த படிமங்களில் நிலவும் சமூகத்தன்மைகளின் அறை கூவல்களை புதிய வீரியமான சமுதாயத்தின் தேவைகளோடு ஒப்பிட்டுக் கொள்வதும்-மாதிரி வகைப்படுத்தலுக்குமான சமூகத்தேவையின் அவசியத்தின் அதீதநோக்கமாகும்.இந்த மானுடத்தேவை மனித வாழ்வினது சகல தளங்களிலும் சாத்தியமானவொரு புதிய நிலையை எடுத்துவிடுவது தவிர்க்கமுடியாது. காலகாலமாக கேள்விக்கிடமற்ற படிமங்களை,பனுவல்களை கடைந்தேற்றும் காரியமொன்று புதிய மாதிரிக் கூறுகளாக மாற்றமுறுவது நமது இதுகாலவரையான அறிவார்ந்த இலக்கியப் பரப்புக்கு பசளையாக இருக்கும்.இதன் பாலான கட்டுடைப்பு அவசியத்தை மறுதலிக்க முனைதலானது இலக்கியத்தை வெறும் உணர்வுத் தளத்துக்குள் உந்தித் தள்ளுவதாகும்.உயிர்ப்புமிக்க கலை மரபுகளாக வளரவேண்டிய



படிப்பகம்

www.padippakam.com



இந்தத் தமிழ் இலக்கியத் தளமானது வெறும் உணர்ச்சிகளினது கோர்வைகளாகவும்-மொழி விளையாட்டாகவும் குறுகியுள்ளது.இந்தக் காலத்தின் புதிய தேவைகள் இலக்கியத் தளத்தின் மீது பண்புரீதியான மாற்றத்தைக் கோரிநிற்கின்றன. இவற்றின் தேவைகளை மறுதலிக்கும் எந்த எழுத்து வடிவமானாலும் சரி அது மானுடவிரோதமான தளத்தைத் தாம் உறுதி செய்யும்.

கலையிலக்கியத்தின் அவசியமான புரிதற் பாடு நமக்கான-நமது மக்கள் சார்ந்த மதிப்பீடுகளை உருவாக்கி,அதன் வாயிலான புதிய மாதிரி கருத்தமைவுகளை,சமூக மதிப்பீடுகளை-வாழ்வின் பெறுமானங்களை மீளுருவாக்கஞ் செய்தல் கடந்த கால அடிமைத்தனங்களை களைவதற்கான முன்னெடுப்பின் முகிழ்ப்புத்தாம். எனவே இது தவிர்க்க முடியாத காலத்தின் அவசியமான பணி.பண்டுதொட்டு வாசிப்புக்குள்ளாகிய மரபுசார்ந்த மதிப்பீடுகளையுருவாக்கிய நமது இதிகாச-புராணப் புனைவுகளால் நாம் மனவளர்ச்சியற்றவொரு கூட்டமாகவே இருக்கிறோம்.இன்றும் நமது பழமைவாய்ந்த மதிப்பீடுகளால் மனிதத்தைக் குற்றுயிரோடு மரணப்போராட்டத்துக்குள் தள்ளியுள்ளோம். இந்த இலக்கிய மரபு வெறும் மொழிவிளையாட்டின் பிரிக்க முடியாத கற்பனைக் களஞ்சியமாக இருப்பது நவீன இலக்கிய விஞ்ஞானத்துக்கு புறம்பானது.சமூகத்தின் விருப்புறுதியானது அதன் உயிராதாரமான மனித விழுமியத்தைக் கொண்டியங்கக்கூடிய மறுவார்ப்பைக்கோரி நிற்கின்றது. இதைத் திடகாத்திரமான முறையிற் வளர்த்தெடுப்பதும்,வீரயிமிக்கதான-அறிவார்ந்த,மக்கள்சார்ந்த தேவைகளுக்கு வித்திடக்கூடிய படைப்புகளைக் கொண்ருக்கக்கூடிய தளத்தை நிறுவுதலே இலக்கியத்தின் பணியாக உள்ளது.

எந்தவொரு சமுதாயமும் தனது மதிப்பீடுகளை இன்றைய நோக்கு நிலையிலிருந்து மீளுருவாகஞ் செய்யாதுபோனால் அதன் இருப்பானது மிக மிகப் பலவீனமான நிலையை யெய்துவிடும்.இன்றைய காலமானது மிகவும் கெடுதியான பொருளியல் நலனே முக்கியம் பெற்ற அதிர்வான சமூக சீவியத்தைக் கொண்டிருக்கும் காலமாகும்.இது மனித வாழ்வைச் சிறைப்படுத்தி-சிண்டெரேல்லா பாணியிலான சமூக அடிமைத்தனத்தைத் தந்துள்ளது.இதைத் தகர்ப்பதற்கு சிண்டேரேலாவுக்கு உதவிய புறாப்போன்று நமது இலக்கிய முன்னெடுப்புகள் அமைவது சாலச் சிறந்தது.இதன்பொருட்டு பழமையான நமது மதிப்பீடுகள் தகர்வதும்-மீளுருவாக்கங்கொள்வதும் தவிர்க்க முடியாதவொரு சமூகக் கடமையைக் கொண்டிருக்கிறது.எனவே கூட்டுணர்வுமிக்கவொரு மனிதப் பண்பையும்,கௌரவமான நேசிப்பை வலியுறுத்தும் அழகியல் மதிப்பீடுகள் நமது இலக்கிய வடிவங்களுக்குள் வந்தாகவேண்டும்.இந்த ஒழுங்கமைந்த படைப்புச் சூழலை உருவாக்கி பழமையான புனைவுகளை களைந்து விடுவது தமிழ்மொழியை அதிகாரத்துவ எல்லையிலிருந்து விடுவித்து மக்களோடு பிணைந்த,அவர் நலன்களை மையப்படுத்தியவொரு புதிய வீரியமுடைய மொழியாக வளரவிடுவது நமக்கான இருப்பினது குறைந்தபட்சத் தேவைதாம்.இவ்வகை நோக்கத்தை அறிவினது பரப்பின் மத்தியிலிருந்து உணர்வுத்தளத்துக்கு மாற்றிவிடும் கேடுகெட்ட மயக்கம், தூய்மைவாதப் புனைவுகளாக கொட்டிவைத்த புராண இதிகாசங்களுக்கு இறையிற்தன்மையைக் கொடுத்தது, இருப்பை நிறுவிக்கொள்வதற்கே.இருப்பை உறுதி செய்த அன்றைய பொருளியல் நலனானது இன்றைய கணனிமயப்பட்ட புதிய வாழ்வியல் மதிப்பீடுகளுக்கேற்றதல்ல.நமது கால பொருளியல் வாழ்வானது மிகவும் முன்னேறிய உற்பத்திச் சக்திகளோடு உறவாடும் மனித்தேவைகளை வலியுறுத்தும்போது பழமையான இலக்கிய-கலை மாதிரிகளால் இன்றைய மனிதர்களின் ஆத்மீகத் தேவைகளை திருப்திப் படுத்த முடியாது.எனவே கட்டுடைப்பும் அதன் வாயிலாக புதிய முன்னெடுப்புகளும் மானுடநோக்கில் அவசியமாகும்.இதைப் புறந்தள்ளும் எந்த முன்னெடுப்புகளும்,விமர்சனங்களும் இன்றைய சூழலை மிகக் கேவலமான முறையிற் புரிந்த அரைவேக்காட்டு உளப் பாங்கின் வெளிப்பாடுகளே!

ப.வி.ஸ்ரீரங்கன்
07.05.2005




படிப்பகம்

www.padippakam.com



# ● ஒரு நல்ல பிராமணனின் கதை

*(Histoire d'un bon Bsamin)*
(Octof 1759 - VOLTAIRE
**வோல்த்தயர்**



**தமிழில் : க. வாசுதேவன்**

எனது பிரயாணங்களின் போது ஒரு வயதில் முதிர்ந்த பிராமணரைச் சந்தித்தேன். நிறைந்த மனம் படைத்த இம் மனிதர் சிறந்த அறிவாளியாகவும், ஞானமுள்ளவராகவும் காணப்பட்டார். இவர் யாதொரு குறைவுமின்றிச் செல்வச் செழிப்புடன் வாழ்ந்த காரணத்தால் யாரையும் ஏமாற்ற வேண்டிய அவசியம் இருக்கவில்லை. ஞானம் முதிர்ந்திருந்தது. இவருக்கு தங்கள் மீது பிடித்தம் உண்டாக வேண்டுமென்பதையே கவனத்தில் கொண்டொழுகிய மூன்று பெண்களினால் குடும்பம் ஒழுங்காக பராமரிக்கப்பட்டது. தனது மனைவிமாருடன் சல்லாபமிடாத நேரங்களிலெல்லாம், இம்மனிதர் தத்துவம் பேசுவதில் ஈடுபட்டார்.

அலங்கரிக்கப்பட்டுக் கவர்ச்சியாக, அழகாகக் காணப்பட்ட பூந்தோட்டங்களுடன் கூடிய இவரது வீட்டுக்கு அண்மையில், பக்தி நிறைந்த, அசட்டுத்தனமான ஏழை வயோதிபப் பெண்ணொருத்தி வாழ்ந்து வந்தாள்.

நான் பிறந்தேயிருக்கக் கூடாது என்று இப்பிராமணர் ஒருநாள் என்னிடம் கூறியதைத் தொடர்ந்து காரணம் என்னவென்று கேட்டேன்.

நாற்பது வருடங்களாகக் கற்றுக் கொண்டிருக்கிறேன். இந்நாற்பது வருடங்களும் எனக்கு இழந்து போனவையே. நான் மற்றையவர்களுக்கும் கற்பிக்கிறேன். ஆனால் எனக்கோ எதுவும் தெரியாது. இந்நிலை என் ஆன்மாவின் மீது நிறைந்த அவமானங்களைச் சுமக்க வேண்டியதாக்குகிறது. வாழ்க்கை சகிக்க முடியாதது என்ற வெறுப்பை உருவாக்குகின்றது. நான் பிறந்தேன் வாழ்ந்தேன். காலத்தோடு வாழ்கின்றேன். ஆனால் நேரம் என்றால் என்னவென்று எனக்கு தெரியாது. எமது ஞானிகள் கூறுவது போல், இரண்டு முடிவிலிகளின் இடையில் எங்கோவோர் புள்ளியில் என்னை நிலைப்படுத்துகின்றேன் ஆனால் இந்த முடிவிலியை, ஆதியந்தமற்ற தன்மையைப்பற்றி எனக்கு எதுவும் தெரியாது. அதைப்பற்றி என்னிடம் எந்தவிதக் கருத்தும் இல்லை. சடலங்களால் ஆக்கப்பட்டிருக்கும் நான் எனது சிந்தனை எதனால் உருவாக்கப்படுகிறது என்பதையானறியேன். எனது இவ்வுலகைப் பற்றிய விளக்கங்கள் நான் நடப்பதைப்போன்ற, அல்லது உண்ணும் உணவு செமிபாடடைவதைப்போன்ற சாதாரண தன்மை கொண்டவையா, எனது மூளையினால்த்தான் நான் சிந்திக்கிறேனா என்பதையெல்லாம் நானறியேன். எனது சிந்தனையின் அடித்தளம் என்னால் அறியப்படவில்லை என்பது மட்டுமல்ல, எனது இயக்கங்களின் அர்த்தங்களும், ஏன் நான் வாழ்கின்றேன் என்பதும் எனக்குப் புரியவில்லை. இருப்பினும் என்னிடம் பல விதமான கேள்விகளைக் கேட்கிறார்கள். பதிலளித்தாக வேண்டும் என்னிடமோ சொல்வதற்கு நல்லதாக ஏதும் இல்லை. நான் நிறையப் பேசுகிறேன். பேசிய பின் குழம்பி என் மீதே நான் வெட்கமடைகின்றேன். பிரம்மா, விஷ்னுவினால் படைக்கப்பட்டாரா அல்லது இருவரும் ஆதியப்தம் அற்றவர்களா? என்று மற்றவர்கள் கேள்வி கேட்கும்போது நிலமை மோசமாகவுள்ளது. இதைப்பற்றி நான் ஏதும் அறியேன் என்பதைக் கடவுள் தான் சாட்சியாக வந்து கூற வேண்டும் என்பதை எனது பதில்களுக்குள் கூறி விடுவேன்.

ஐயா! வணக்கத்துக்குரியவரே, இவ்வுலகை எவ்வாறு தீமைகள் மூழ்கடிக்கின்றன என்பதை அறியத் தாருங்கள் என்று வேதனையாக என்னிடம் கேட்பவர்களைப் போலவே நானும் வேதனை அடைகிறேன். இவ்வுலகில் எல்லாமே சிறந்ததுதான் என்று நான் சில நேரங்களில் கூறுவதை, யுத்தத்தில்



படிப்பகம்

www.padippakam.com



அங்கம் சிதைந்து அனைத்தையும் இழந்த நிலையில் இருப்பவர்கள் நம்புவதில்லை. நான் கூடத்தான் நம்புவதில்லை. அறியாமையாலும், அறிய வேண்டும் என்ற ஆவலிலும் உடைந்துபோய் வீடு திரும்பி எனது மூதாதையரின் நூல்களைப் படித்தால் அவை மேலும் என்னை இருட்டடிக்கின்றன. எனது சக பிராமணர்களுடன் இதைப்பற்றிக் கதைத்தால் அவர்களில் சிலர், மற்றவர்கள் எப்படிப்போனால் என்ன சந்தோஷமாகவா வாழ்கிறார்கள். வேறு சிலர் தாங்கள் ஏதோ அறிந்தவர்கள் போன்று அர்த்தமற்ற சிந்தனைக்குள் ஆழ்ந்து போகிறார்கள். எனது உள்ளுணர்வின் வேதனையை இவையெல்லாம் அதிகரிக்கின்றன. நானென்ன? எங்கிருந்து வருகின்றேன்? எங்கு போகிறேன்? என்ன ஆகப் போகிறேன்? என்றெல்லாம் ஆராய்ந்து பார்த்து இறுதியில் ஏமாற்றத்தைத் தழுவத் தயாராகின்றேன்.

இவ்வாறு கூறிய இந்த நல்ல மனிதனின் நிலை என்னை வேதனைக்குள்ளாக்கியது. யாரும் இம்மனிதரைப் போன்ற நியாயம் உள்ளவர்களாகவும், விசுவாசம் உள்ளவர்களாகவும் காணப்படவில்லை. இம்மனிதரிடம் எவ்வளவுக்கெவ்வளவு உள்ளுணர்வு வெளிச்சமும், இதயத்தில் உணரும் சக்தியும் இருந்ததோ, அவ்வளவு இவர் துன்பப்பட்டுக் கொண்டிருந்தார் என்பதை நான் உணர்ந்தேன்.

இதே வேளை இவரின் வீட்டிற்கு அண்மையில் வசித்த கிழவியையும் சந்தித்தேன். உங்களது ஆத்மா எவ்வாறு படைக்கப்பட்டது என்பதை அறியாது இருப்பது உங்களுக்குக் கவலையை ஊட்டவில்லையா என்று கேட்டுப் பார்த்தேன்.

கிளவிக்குக் கேள்வி கூடப் புரியவில்லை. பிராமணரைச் சித்திரவதை செய்யும் விடயத்தைப் பற்றி இக்கிழவி வாழ்வில் ஒரு கணமேனும் சிந்தித்துப் பார்க்கவில்லை. விஷ்ணுவின் அவதாரங்களை அவர் இதயபூர்வமாக நம்பினார். எப்போதாவது கங்கையில் நீராடக் கிடைத்ததை எண்ணி தானே பெண்களில் எல்லாம் அதிஷ்டமானவள் என்று எண்ணினாள். இந்த அப்பாவி ஜீவனின் ஆனந்த நிலையை எண்ணிப் பிரமித்துப் போய், மீண்டும் பிராமணரிடம் திரும்பி வந்து, உங்களின் படலையின் முன்னாலேயே ஒரு கிழவி இயந்திரத்தைப போன்று எதைப் பற்றியும் சிந்திக்காது ஆனந்தமாக வாழும்போது நீங்கள் சிந்தித்து வேதனைப்படும் நிலையை எண்ணி வெட்கமடையவில்லையா? என்று கேட்டேன்.

நீங்கள் கூறுவது சரிதான். அயல் வீட்டுக் கிழவியைப்போல் அறியாமைக்குள் மூழ்கியிருந்தால் ஆனந்தமாக இருக்கலாமே என்று பல தடவை எண்ணியிருக்கிறேன். இருந்தபோதும் அப்படியான ஒரு ஆனந்தத்தை நான் விரும்பவில்லை.

பிராமணரின் இப்பதிலர் மற்றைய எல்லாவற்றையும்விட என்னுள் உறைந்தது. என்னையே நான் ஆராய்ந்து பார்த்தேன். உண்மையில் நான்கூட அறியாமையில் ஆனந்தம்கொள்வதை ஏற்றுக் கொண்டிருக்கமாட்டேன். பின்னர் இவ்விடயத்தைப் பல தத்துவஞானிகளிடம் கூறியபோது அவர்களும் என்னுடைய கருத்தை ஆமோதித்தார்கள். இவ்வாறு சிந்திப்பதிலும் எங்கோவோர் பலமான எதிர்வாதம் இருப்பதை உணர்ந்தேன். ஆனந்தமாக இருப்பதென்றால்தான் என்ன? அறியாமை, அறிவு என்பவற்றைவிட ஆனந்தமானவர்கள் தங்கள் ஆனந்த நிலையில் உறுதியாக இருக்கிறார்கள். நியாயமானதா இல்லையா என்று ஆய்பவர்கள் தங்களின் நியாய அடிப்படையிலேயே நம்பிக்கையற்றவர்களாக இருக்கிறார்கள். ஆகவே வாழ்வைத் துன்பநிலைக்குத் தள்ளும் ஆய்வுணர்வுற்ற நிலையே சிறந்தது என்று என்னுள் எண்ணினேன். எல்லோரும் என் கருத்தை ஆமோதித்த இருப்பதற்கு முட்டாள் தனத்திற்குள் மூழ்க விரும்பவில்லை. நன்றாகச் சிந்தித்த பின்னர் ஆனந்த நிலையைத் தவிர்த்து ஆய்வுணர்வில் அமிழ்ந்து அவலப்படுவது முட்டாள்தனமாகத் தோன்றுகிறது. வேறு பல விடயங்களிலும் தோன்றுவது போன்ற இவ்வெதிர்வாதத்தை எவ்வாறு புரிய வைக்க முடியும்? இங்கு தான் நிறையக் கதைக்க வேண்டி உள்ளது.

நன்றி : நகர்வு



படிப்பகம்

www.padippakam.com



# கண்ணி

அ. தேவதாஸன்

## 1.

பன்னிரண்டு வருடங்களுக்கு முன்பு உடுத்த துணியோடு வீட்டை விட்டுப் புறப்பட்டு திரும்பவும் உடுத்த துணியோடு வீட்டுக்கு புறப்பட்ட சிந்தாமணி வன்னிக் காட்டிலும் வவுனியாச் சிறையிலும் படுத்து எழும்பி நெருப்புக் காய்ச்சலும் வாந்திபேதியும் உடம்பின் சொத்தாகி எலும்பும் தோலுமாய் யாழ்ப்பாணத்துக்குள் வந்து விட்டாள்.

பன்னிரண்டு வருடங்களுக்குப் பிறகு யாழ்ப்பாணத்தைப் பார்க்கையில் உண்மையில் பெரிதாக எந்த மாற்றமும் தெரியவில்லை. சண்டை முடிந்து கோடு, கச்சேரி எல்லாம் சீராக நடப்பதுபோல் ஒரு தோற்றம், யாழ்ப்பாணத்தை ஒருமுறை சுற்றிப்பார்க்க வேண்டும் என்கிற ஆசை சிந்தாமணிக்கு அறவே எழவேயில்லை.

எழுபத்தாறாம் இலக்க பஸ்ஸைத் தேடிப்பிடித்து ஒரு ஓரமாக அமர்ந்து கொண்டாள். 'டிக்கட் எடுக்காத ஆக்கள் டிக்கற்றை எடுத்துக் கொள்ளுங்கோ' என்றவாறு கொண்டக்டர் மணியைப் பிடித்து இழுக்க அருண்ட சிந்தாமணி 'வேலணைத் துறைக்கு ஒண்டு தாருங்கோ' என்று கேட்டு வாங்கி டிக்கட்டை நெஞ்சுச் சட்டைக்குள் செருகிக் கொண்டாள். பஸ் குறிகட்டுவானை நோக்கிப் புறப்பட்டது.

இடிக்கப்பட்ட கட்டடங்கள், அழிக்கப்பட்ட கோட்டை இவைகளைக் கடந்து பஸ் சென்று கொண்டிருந்தது. கடற்காற்று முகத்தில் பட சிந்தாமணி சற்றுக் கண்ணயர்ந்து விட்டாள். திடுக்குற்றவளாய் விழித்துப் பார்க்கும்போது அராலிச் சந்தியைக் கடந்து பஸ் ஓடிக் கொண்டிருந்தது. பல வீடுகள் கூரையின்றியும் பல வீடுகள் முற்றாக அழிந்தும் கிடந்தன. வங்களாவடிச் சந்தி கழிந்த பின்புதான் சன நடமாட்டம் தென்பட்டது. சில கடைகள் திறந்திருந்தன. பள்ளிச் சிறுவர்கள் அங்கும் இங்குமாகச் சென்று கொண்டிருந்தனர். நடந்து செல்பவர்களும் அதிகமாகவவே காணப்பட்டனர். பஸ் கொம்பனியடி கழிய சிந்தாமணி தன்னை பஸ்ஸை விட்டு இறங்குவதற்கு தயார்படுத்திக் கொண்டாள். பஸ் பழைய சர்வோதயத்திற்கு முன்னால் நிற்கையில் சிந்தாமணி இறங்கிக் கொண்டாள். பஸ்ஸை விட்டு இறங்கிய சிந்தாமணி தான் இறங்கிய இடம் சரிதானா என நாலு பக்கமும் பார்வையை எறிந்தாள்.

சர்வோதயக் கட்டடம் பாறி விழுந்து கிடந்தது. அங்கிருந்து அவள் வீட்டுக்குப் போகும் ஒழுங்கையைப் பிடித்து நடந்தாள். ஒழுங்கை முன்னர் தார் பூசி கல்லொழுங்கையாய்க் கிடந்தது. இப்போது குண்டும் குழியுமாய்த் தூர்ந்து போய்க் கிடக்கிறது.

கதிரன் கடை இன்னமும் இருக்கிறது. ஆனால் கதிரன்தான் இல்லை. கடைக்குள் புதியவன் ஒருவன் இருந்தான். 'தம்பி ஒரு உப்புச் சோடா தாருங்கோ' என்று கேட்டவள் பின் 'கதிரன் இல்லையோ?' எனக் கேட்டாள். 'அவர் இந்தியா போய் பத்து வரியத்துக்குமேல, இப்ப நான்தான்



படிப்பகம்

www.padippakam.com



கடை நடத்திறன்.' என்று பதில் வந்தது. சோடாவை வாங்கி இரண்டு மிடறுகள் குடித்தவள் மீதியைத் தனது சிறிய பையுக்குள் வைத்துக் கொண்டு நடந்தாள். அவளுக்கு முன்னாள் ஒரு சைக்கிள் வந்து 'கால் பிரேக்' அடித்து நின்றது.

'சிந்தாமணி அக்கா, எப்ப வந்தது?'

'தம்பியை எனக்கெண்டா விளங்கயில்ல...'

'நான்தானக்கா சூசை'

'அட தம்பி, நானெண்டா மட்டுக்கட்டுக்கட்டயில்ல...'

முன்னர் கருகருவென்று தலைமுடி, மீசையோடு இருந்த சூசை எல்லாமே வெள்ளையாகி வெளிறிப்போய் இருந்தான்.

'நீயும் தானக்கா சரியா உடைஞ்சு போனாய், இவ்வளவு காலமும் எங்க போய்க் கிடந்தனி?'

'என்ர பரிசு கேட்டை உனக்கேன், இப்பவும் கள்ளுத்தான் சீவிறியோ?'

'ஓம்... ஓம்...'

'சங்கத்துக்குப் போற உன்னை மினக்கெடுத்திறன் போல...'

'சீவல் எல்லாம் வெள்ளன முடிஞ்சுது. இப்ப சாட்டிக்கு தண்ணியள்ளப் போறன்'.

'பேந்து ஏன் மினக்கடுகிற.. நான் ஆறுதலாய் வீட்டுப் பக்கம் வாறன்.

இப்பொழுது ஒழுங்கை தானாகவே சிந்தாமணியின் கால்களை வீட்டுக்குக் கூட்டிப் போனது. வீட்டைச் சுற்றிப் போட்டிருந்த சீமைக் கிளுவைகள் மரங்களாகிப் பட்டுக் கிடந்தன. வேலிகளை மூடி பற்றைகள் பற்றிக் கிடந்தன. முற்றமே தெரியாத அளவுக்கு அது பனை, தென்னை ஓலைகளாலும் மட்டைகளாலும் மூடிக் கிடந்தது. வீட்டு வாசலில் ஒரு நாய் செத்து மக்கிக் கிடந்தது. வீட்டுக்குள் போனால் பாம்பு, பூச்சிகளிடம் கடிபட நேருமென நினைத்த சிந்தாமணி ஒழுங்கையிலேயே குந்திக் கொண்டு வீட்டை வெறித்துப் பார்த்தவாறே இருந்தாள்.

இருந்த கொஞ்ச நஞ்சச் சொந்தக்காரரும் யுத்த சூறாவளியால் அள்ளி வீசப்பட்டு செத்தவர் சாக மிகுதிப்பேர் ஓடிப்போன, போன இடங்களிலேயே 'செட்டில்' ஆகி விட்டனர். சிந்தாமணியின் மூத்த சகோதரி இந்தியாவுக்குக் குடும்பத்தோடு ஓடி விட்டாள். இயக்கத்தில் இருந்த தம்பி இன்னொரு இயக்கத்தால் புதைக்கப்பட, மற்ற சகோதரி கொழும்புக்கு ஓடி விட்டாள்.

சிந்தாமணி கொழும்புத் தங்கையிடம் தான் தனித்து விட்டதாகவும் தன்னோடு அவளை வேலணைக்கு வருமாறும் கேட்டாள். தங்கை வரமாட்டேன் என்பதற்கு பல காரணங்களை அடுக்கினாள். 'வேலணைக்கு வந்து மைல் கணக்கில் நடந்து தண்ணி சுமக்க என்னால ஏலாது என்பது அதிலொரு முக்கிய காரணம்' என்றாள்.

இந்தியாவில் இருந்த தங்கையோ 'இப்ப பிள்ளைகள் நல்லா இங்கிலிஷ் படிக்குதுகள். ஒரு சோலி சுறட்டு இல்ல. என்ன, காசிருந்தால்தான் வாழ்க்கை! ஆத்தில தண்ணி வருது அந்த உப்புத் தண்ணிக் காட்டுக்குள்ள வந்து நான் என்னத்தைச் செய்ய' என்று கடிதம் போட்டாள்.

சூசை இன்னமும் தண்ணிக்கு சைக்கிள் மிதித்துக் கொண்டு சாட்டிக்குத்தானே போய்க் கொண்டிருக்கிறான். 'தங்கைச்சிமார் சொன்னதும் சரிதான்' என்று சிந்தாமணி நினைத்துக் கொண்டாள். ஆனால் தான் தனித்து விட்டோமென்ற உண்மை அவளைச் சுட்டுக் கொண்டேயிருந்தது.

இந்த வீட்டையும் காணியையும் என்னால் திருத்த இயலாது. யாரையும் கூலிக்கு பிடித்துத்தான் திருத்த வேண்டும். இனி நல்ல தண்ணிக்கும் அலைய வேண்டும். ஆனாலும் என் அப்பனும், ஆத்தையும் வாழ்ந்து செத்த வீடு இது. இதைவிட்டு எங்கே போக? நானும் இங்கேயே சாக வேண்டியதுதான் என்ற எண்ணத்தோடு இடுப்பைத் தடவினாள். இடுப்பில் கொழும்புத் தங்கை கைச் செலவுக்கு அனுப்பிய கொஞ்சக் காசு பவுத்திரமாக முடிந்து வைக்கப்பட்டிருந்தது.

சிந்தாமணி ஊருக்குள் வந்த செய்தி சூசை மூலமாக ஊருக்குள் பரவிவிட ஒரு அரை மணித்தியாலயத்துக்குள்ளாகவே சிந்தாமணியைத் தேடி ஆட்கள் வந்து சுகம் விசாரிக்கத் தொடங்கினர். சிந்தாமணியை வாட்டசாட்டமான, ஒரு கம்பீரமான



படிப்பகம்

www.padippakam.com



பெண்ணாய்ப் பார்த்திருந்த சனங்கள் இப்பொழுது அவளின் உருக்குலைவைப் பார்த்து வருத்தமாகப் பேசினார்கள்.

இந்த வேலணை ஆறாம் வட்டாரத்தில் வெள்ளாளர், கோவியர், முக்கியர், பள்ளர், நளவர் என்று சனங்களைப் பிரித்து நிலங்களையும் பிரித்தும், ஒதுக்கியும், எட்டவும் வைச்சிருந்தாலும் நளவர், பள்ளர் குடியிருப்புக்களை தண்ணீர் இல்லாத உப்பு நிலங்களுக்குள்ளே ஒதுக்கி விட்டிருந்தார்கள். அநேகமாக எல்லா நல்ல தண்ணீர்க் காணிகளும் வெள்ளாளர்களிடமே இருந்தன. ஒன்று பாதி கோவியர்களிடமும் விவசாயக் காணிகளும் நல்லா தண்ணீர்க் கிணறுகளும் இருக்கின்றன. மற்றவர்கள் குளிப்பதற்குக் கூட இரண்டு மைல் தூரம் நடக்க வேண்டும். வீட்டுக் கிணறுகள் குண்டி கழுவ மட்டுமே உதவும். மாரிக் காலங்களில் மட்டும் கிணற்றுக்குள் நிறைந்திருக்கும் மழைநீா் வற்றும்வரை குளிக்கலாம்.

சிந்தாமணி இளம் வயதாய் இருக்கையில் ஓடி ஓடி நல்ல தண்ணீா் அள்ளி வருவதிலேயே அவள் காலத்தின் பெரும்பகுதி போனது. அப்பொழுதெல்லாம் சிந்தாமணி பம்பரம்தான். அச்சம், மடம், நாணம், பயிர்ப்பு இவற்றில் எதுவும் அறியாதவள். ஆண்களுக்குக் கூட அவளிடம் வாய் கொடுக்கப் பயம். இன சனத்துக்குள் ஏதாவது சண்டை சச்சரவு தொடங்கினால் நியாயம் கேட்க முன்னுக்கு நிற்பவள் சிந்தாமணிதான். அவள் கழுத்து நரம்புகள் புடைக்க கத்திப் பேசும்போது ஆண்களின் குரல்கூட அந்தப் "பேரோசை"யில் அமிழ்ந்து விடும். சற்றேனும் ஏறுமாறாக எவரும் அவளின் அபிப்பிராயங்களோடு முண்டினால் அவள் வலு சரளமாக வீசும் தூசன வார்த்தைகளால் எதிராளியைத் தோல்வியடையச் செய்வாள். அறமிஞ்சினால் அடிக்கவும் தயங்க மாட்டாள்.

## 2.

**ம**தியம் இரண்டு மணியாகி விட்டது. காலை ஒன்பது மணிக்கு வந்து மாப்பிள்ளைக்கு, மாப்பிள்ளைத் தோழன் பால் ஊற்றி, முழுக்காட்டி பெண் வீட்டுக்கு அழைத்துச் சென்றிருக்க வேண்டும். பெண் வீட்டில் இருந்து இதுவரை யாரும் வரவில்லை. மாப்பிள்ளை அதிகாலையில் இருந்து தயாராகிப் பெண் வீட்டார் வருகைக்காகக் காத்திருந்து களைத்து விட்டான். அவனின் முகத்தில் ஏமாற்றமும் கோபமும் கவலையும் மண்டிக் கிடந்தது.
உறவினர்கள் மூலைக்கு மூலை நின்று என்னசெய்வதென்று அறியாமல் குழம்பிக் கொண்டிருந்தனர். மாப்பிள்ளையின் தகப்பனோ 'எங்கள மரியாதை கெடுத்திப் போட்டாங்கள். இனிச் சும்மாவிட ஏலாது. ஒரு காரைப் பிடிச்சுக் கொண்டு இணுவிலுக்குப் போய் அவங்கள நாலு கேள்வி கேட்டு விழுத்திப் போட்டு மிதிக்காட்டி என்ர மனமும் கேளாது, நான் கணவதியின்ர மேனும் இல்ல...' என்று வீர முழக்கமிட்டுத் துள்ளினார். கொஞ்சப் பேர் 'அதுதான் சரியான வழி, நாங்களும் வாறம்' என்று உசார் கூட்ட 'அது சரியல்ல அங்க என்ன பிரச்சினையோ தெரியா, போய்க கதைப்பம்...' என்று கொஞ்சப்பேர் சொல்ல, பெண்கள் கூட்டம் மூலைக்கு மூலை சிணுங்கி கதைத்து நிற்க இவைகளையெல்லாம் அந்தச் சிந்தாமணி சற்றுத் தூரத்தில் இருந்து அமைதியாகப் பார்த்துக் கொண்டிருந்து விட்டு இப்பொழுது எழுந்தாள்.

'என்ன ஆம்பிளயள் நீங்க, புள்ள குடுக்கிறதத் தவிர வேற ஒரு பூளலும் உங்களுக்கு விளங்காதா?' என்ற கேள்வியுடன் தொடங்கி மாப்பிள்ளையைப் பார்த்து 'டேய் தம்பி நீ வெளிக்கிடு, பொம்புளைக்கு குடுக்கிற சீலையும் கொண்டு வா, வாற ஆக்கள் வாங்கோ' என்று முடித்து மாப்பிள்ளையையும் காரில் ஏற்றிக் கொண்டு புறப்பட்டாள். அந்த இரண்டு வாடகைக் கார்களும் இணுவிலுக்குப் போயின.

அங்கும் சிறு தறப்பாள் பந்தல் போடப்பட்டிருந்தது. எல்லாமாக சிறுவர்களையும் பெரியவர்களையும் கூட்டிப் பார்த்தால் அங்கு பத்துப்பேர் கூட இருக்க மாட்டார்கள். வந்த இனசனங்களைக் கல்யாணம் நடக்காது எனச் சொல்லி திருப்பி அனுப்பி விட்டனராம். அந்த வீடு கல்யாணக் களை இழந்து செத்த வீட்டுக் கோலம் கொண்டு கிடந்தது.



படிப்பகம்

www.padippakam.com



மாப்பிள்ளை வீட்டார் கார்களை விட்டு இறங்கினர். சிந்தாமணி உறுதியாகச் சொன்னாள். 'ஒருத்தரும் தேவையில்லாமலுக்குக் கதைக்கக் கூடாது.' விறுவிறுவென வீட்டுக்குள் உள்ளிட்டாள். தலை குனிந்தே செல்ல வேண்டிய வாசல் கொண்ட அந்தச் சிறிய வீட்டின் மூலையில் கல்யாணப் பெண் சுருண்டு படுத்துக் கிடந்தாள். உள்ளே வந்த சிந்தாமணி 'எடி பொட்ட, உனக்கு இந்தக் கலியாணத்தில விருப்பம்தானே?' என்று நேரடியாக விசயத்துக்கு வந்தாள். அவள் 'ஓமெ'னத் தலையசைத்தாள். 'எங்கயடி ஆத்த உன்ர கொப்பன்?' என்று சிந்தாமணி அடுத்த கேள்வியைக் கேட்டாள். பெண்ணின் தகப்பன் தலையைக் குனிந்தபடிக்கு பதுங்கிப் பதுங்கி வந்தார்.

'நீயெல்லாம் ஒரு மனிசனாடா? உனக்கொரு மீசை, ஒரு வேட்டி, த்தூ நாயே...' என்று ஆரம்பித்து அய்ந்து நிமிடங்கள் சிந்தாமணி பேசி ஓய கல்யாணப் பெண்ணின் சிறிய தகப்பன் 'சிந்தாமணி ஒரு பிழை நடந்து போச்சு, கல்யாணத்துக்கு தாற காசு அய்யாயிரத்தையும் ஒராள் கடனாகத் தாறன் எண்டு சொன்னது. நாங்களும் காசு வரும் வருமெண்டு மத்தியாணம் வரைக்கும் பார்த்துக் கொண்டிருந்தம். கடைசியில் ஆள் கையை விரிச்சுப் போட்டுது.' என்று தலையைச் சொறிந்தார்.

'அப்படியெண்டால் மாப்பிள்ளை வீட்டை வந்து உண்மையைச் சொல்ல வேண்டியதுதானே...'

'நாங்களும் அப்படித்தான் யோசிச்சனாங்கள். ஆனால் புறோக்கர் காசில்லாட்டால் தான் வரமாட்டன் எண்டு கோவிச்சுக் கொண்டு போயிட்டார் நாங்களும் பயத்தில...'

சிந்தாமணி கையால் முகத்தைத் தேய்த்தாள். பின் மாப்பிள்ளையைப் பார்த்து 'டேய் தம்பி, பொம்பிளையிட்ட கொண்டு வந்த சீலையைக் குடு. எடி பிள்ள நீ 'டக்'கெண்டு சீலையைக் கட்டிக் கொண்டு வா' என்றாள்.

மாப்பிள்ளையின் தகப்பன் நைசாக சிந்ததமணியை ஒரு மூலைக்குள் தள்ளிக் கொண்டு போனார். 'சிந்தாமணி உனக்கென்ன விசரே? இந்தக் காசை நம்பித்தான் கலியாண அலுவலுக்கு கடன் வாங்கி செலவழிச்சனான். கடைக்காரனுக்கு விடிஞ்சால் காசு எண்ணி வைக்கவேணும்.' என்று இரகசியம் பேசினார்.

'அண்ண கலியாணத்தை முடிப்பம். வாற பிரச்சினையை அதுக்குப் பிறகு யோசிப்பம்.'

எல்லாக் காரியங்களும் முடிந்து கல்யாணப் பெண்ணை வேலணைக்கும் அழைத்து வந்தாகி விட்டது. எண்ணி ஆறே மாதத்தில் வெள்ளாளரின் தோட்டக் கிணற்றில் புதுப்பெண் திருட்டுத் தனமாய் தண்ணீர் அள்ளினாள் என்று சொல்லி பொலிஸில் விதானையால் பிடித்துக் கொடுக்கப்பட்டாள். சிந்தாமணிதான் பொலிஸ் நிலையத்துக்குப் போய் லஞ்சம் கொடுத்துப் புதுப் பெண்ணை விடுவித்தாள். அத்தோடு உடனடியாகக் 'கள்ள அருணாசல'னைக் கொண்டு விதானைக்குச் செய்வினை செய்வித்து இரவோடு இரவாய்ப் போய் விதானையின் முற்றத்தில் செய்வினைத் தகட்டைப் புதைத்தாள்.

## 3.

அந்தத் துணிந்தகட்டையும், கையாடி வாயாடியுமான சிந்தாமணி இப்போது எலும்பும் தோலுமாய், ஒரு போக்காய் பேசுவதைக் கண்டு சனங்களுக்கு கவலை. சிந்தாமணியின் தகப்பனுக்கு முதுசொமாக பறையன் தோட்டம் என்ற பெயரில் எட்டரைப் பரப்புக் காணியும், அம்பட்டன் கூடல் என்ற பெயரில் பதினொரு பரப்பு காணியும் இருந்தது. அவரின் இனசனங்களுக்குள் இவ்வளவு பெரிய சொத்தை வைத்திருந்தது இவர் மட்டும்தான். சிந்தாமணிக்கு நல்ல மாப்பிள்ளையாக, அதுவும் கள்ளுச் சீவாத மாப்பிள்ளையாக தேட வேண்டும் என்று ஆசைப்பட்ட சிந்தாமணியின் தகப்பன் சபாபதி ஆனைக் கோட்டையில் "டக்ஸி" ஓடும் ஒரு மாப்பிள்ளையை பிடித்து பறையன் தோட்டக்காணி எட்டரைப் பரப்பையும் சீதனமாகக் கொடுத்து கல்யாணம் செய்து வைத்தார். அம்பட்டன் கூடல் காணி



படிப்பகம்

www.padippakam.com



இரண்டாகப் பிரிக்கப்பட்டு மற்றயை இரு பெண்களுக்கும் கொடுக்கப்பட்டது.

சிந்தாமணியின் புருஷன் முதலில் கொஞ்ச நாட்கள் நல்ல மாதிரி இருந்தான். பின் "தண்ணியில்லா இந்த வேலணைக் காட்டுக்குள் மனுசன் இருப்பானா? நீயும் யாழ்ப்பாணம் வா" என்றான். அவனுக்கு சீதனமாகக் கொடுத்த காணியை விற்று ஆனைக் கோட்டையில் காணி வாங்க சிந்தாமணி சம்மதித்தாள். அவனோ காணி வாங்குகிறேன் ..... காணி வாங்குகிறேன் என்று சொல்லிச் சொல்லியே காணி விற்ற காசு எல்லாவற்றையும் செலவழித்துத் தொலைத்து விட்டு "நீ கொண்டு வந்த சீதணம் போதாதடி" என்று நாளும் பொழுதும் நச்சரிக்க ஆரம்பித்தான். ஒரு நாள் "தண்ணியில்லாக் காட்டுக்குள்ள என்னைக் கொண்டு வந்து அமத்திற்றாய்" என்று சிந்தாமணியின் தகப்பனின் கழுத்தை பிடித்தான். அன்று கையில் விளக்குமாறை சிந்தாமணி எடுத்தாள். அதோடு அவளின் கலயாண வாழ்க்கை முடிந்தது. புருஷன்காரனுக்கு விழுந்த அடியின் வேகத்தை பார்த்து ஊரே திகைத்து நின்றது.

அந்தச் சிந்தாமணிக்கு இப்போதெல்லாம் தளும்பாமல் நடக்கவே முடியவில்லை. மூளை இயங்க மாட்டேன் என்று மறுக்குமாப் போல் அவள் தடுமாறினாள். மெல்ல மெல்ல சூசையையும் உதவிக்கு வைத்துக்கொண்டு கூட்டிக் குவித்து வீட்டை ஒருவாறு துப்புரவு செய்து முடித்தாள். அதற்கே ஒரு கிழமையானது. அயலட்டம் இந்த ஒரு வாரமாய் அவளுக்கு சாப்பாடு போட்டது. அரிசி, உப்பு, தண்ணி உடனடித் தேவைகள்.

தங்கச்சிமாருக்கு கொடுத்த சீதனக் காணியை இவளையே பராமரிக்கச் சொல்லிச் சொல்லியிருந்தார்கள். காணியில் உள்ள நூற்றுமுப்பது பனைகளில் ஓலைகளை வெட்டினால் நான்காயிரம் ஓலைகள் வரும். பதினொரு கள்ளுப் பனைகள் நிற்கின்றன. அவைகளைச் சீவலுக்கு விடலாம். பனங்காய், பனாட்டு, ஒடியல், ஊமல் இவைகளையும் விற்களாம். எப்படியும் தன்னுடைய சீவியத்தை கொண்டோடி விடலாம் எனச் சிந்தாமணி நினைத்துக் கொண்டாள்.

அனல் தகித்தது. தண்ணீர் எடுக்க சிந்தாமணி புறப்பட்டாள். ஒழுங்கையின் முடிவில் ஆரம்பமாகும் வெள்ளாளர் குடியிருப்பில், விசாலம் வீட்டில் தண்ணீர் கிணறு உண்டு. மெல்ல மெல்ல பானையோடு ஒழுங்கையில் சிந்தாமணி நடக்க அவளை உரசுவது போல ஒரு வாகனம் ஒழுங்கையில் விரைந்தது. இயக்கப் பொடியள் என்று சிந்தாமணி அனுமானித்துக் கொண்டாள்.

விசாலத்தின் மகள் வெகு அன்பாக சிந்தாமணியை வரவேற்றாள். விசாலாட்சியின் புருஷன் வவுனியாவில் ஒரு சாப்பாட்டுக் கடையில் வேலை செய்தான். விசாலாட்சி மிளகாய் ஆய புல்லு செதுக்க என்று கூலி வேலைக்கு போவாள். வீட்டில் காசு தட்டுப்பாடு வரும்போது, அப்போதெல்லாம் விசாலம் சிந்தாமணியிடம் ஓடி வந்து தான் காசு மாறுவாள்.

"எங்க அம்மா இல்லையா ? " எனச் சிந்தாமணி கேட்க விசாலாட்சியின் மகளின் கண்கள் கலங்கின. "நாங்கள் இடம்பெயர்ந்து போய் வன்னியில இருக்கயுக்க காய்ச்சல் வந்து அம்மா மோசம் போயிட்டா?" என்றாள். இப்போது அவளும் அவள் புருஷனும் மட்டும்தான் இங்கேயிருக்கிறார்களாம்.

சிந்தாமணி அவ்விடத்திலேயே ஒரு ஒப்புச் சொல்லி மெதுவாய்ப் பாடினாள். பின் எழுந்து "பிள்ள ஒரு குடம் தண்ணி அள்ளிக் கொள்ளுறன்" என்றவாறு கிணற்றை நெருங்கினாள். விசாலத்தின் மகள் இன்னும் அழுது முடியவில்லை. கண்ணைக் கசக்கிக் கொண்டே வேகமாக ஓடி வந்து "பொறு சிந்தாமணி" என்று சொல்லிவிட்டு தண்ணீர் அள்ளி சிந்தாமணியின் பானையிலோ, சிந்தாமணியிலோ தண்ணி வாளி படாதவாறு கவனமாக, நுட்பமாக, தட்டாமல் முட்டாமல் ஊற்றினாள்.

நன்றி : கறுப்பு




படிப்பகம்

www.padippakam.com



# கிராமத்து ஓவியங்கள்

எங்கள் கிராமம் எழிலோடு தெரிகிறது!
தெங்கும் பனையும் வாழைபலா தேமாவும்
நுங்கும் இளநீரும் முக்கனியும் தீந்தமிழும்
தந்தே எமை வளர்த்த தாய்மண் தெரிகிறது
பத்தாயிரம் கற்கள் தூரத்தே நானிருந்து
முத்தாய்க் கடல்நடுவண் விளங்கும் எமதூரை
நெஞ்சில் நிறுத்தி நினைவெடுத்துப் பார்க்கின்றேன்.
பிஞ்சு வயதிலிருந்து பிறப்போடு வளர்ப்புண்ட
எங்கள் கிராமம் எழிலோடு தெரிகிறது !
அல்லிக் குளமும் அதனருகே ஆலயமும்
முல்லை மலர்க்காடும் முற்றித் தலைகவிழ்ந்த
செந்நெல் வயல்வெளியும் செம்மாலைப் போதுகளும்
அம்மம்ம ! நெஞ்சத்து வீணை நரம்புகளை
மீட்டி இசை பொழிய நினைவு தொடர்கிறது!
காலைக் கதிர்விரியக் கமலம் முகைநெகிழ
ஆலயத்துப்பூசை மணி குலுங்கி ஆர்ப்பரிக்க
காற்றசையாய மெல்லச் சலசலத்து நெல்லசைய
நாற்று நடும் பெண்கள் நடவுப்பா பாடிவர
உச்சிப் பொழுதுவரும் உழைப்பாளர் எல்லோரும்
பச்சை மரநிழல்கள் தேடிக் குளக்கரைக்கு
வந்து பசியாறி வம்பளக்கும் சிலநேரம்
சிந்தை எழுந்து சிறப்பாய்த்தெரிகிறது.
மாலைப் பொழுதுவரும் மகிழ்வோடு மனம்ஓடும்
மேலைக் கடற்கரையில் விந்தை பலதெரியும்
கொட்டிக் குழைத்த குங்குமத்திற் தோய்த்தாற்போல்
வட்ட நிலவு கீழ்வானிற் காட்சிதரும்.



செங்குரிதி ஆறாய்ச் செருக்களத்தில் ஓடுதல்போல்
எங்கும் சிவப்புநிறம் அங்கே பொலிந்திருக்கும்
கன்னங் கருந்திட்டுச் சிலகூடி அருகருகே
சின்னமலைகள்போல் ஒருதோற்றம் அலையூடே
பொன்னிறத்தில் ஓராறு பாய்ந்து பொலிவுசெய்யும்
நித்தம் பயிர்விளைக்க நினைத்த உழவர்கள்
கொத்திப் பதமிட்டாற் போன்று வான்தெரியும்
நீலமணி எனத் திகழும் கடல்நீரில்
கோலப்பிரிதிக் கதிர்தெறித்து மேற்சிந்தும்
அன்னப் பறவை அசைந்துநடை போட்டதென
பொன்னிறத்து நீரூடு சிறுபடகு முன்செல்லும்
நெஞ்சத்திற் றாய்மை நினைவுவரை வாயினிலே
குஞ்சுகளுக் கிரைகொண்டு புட்குலங்கள் பறந்தோடும்
கீக்கீ எனக்கிளிகள் கூவிப் பனம்பொந்தை
நோக்கப் பறந்துசெலும் நீலக் கருங்குயில்கள்
மாமரத்துக் கிளைதோறும் மனம்திறந்து வாய்திறந்து
தேமதுரத் தீம்பாடல் இனிதாய் இசைத்திருக்கும்
மடியிற்சுரந்த பால்நிறைந்து நோவு செய்ய
கடிதில் மனைகொண்டு கன்றுகளுக் காவூட்டும்
கள்ளி ஒருபுறமும் சிறுகாட்டிற் படர்ந்திருக்கும்
வெள்ளை இளநீலம் கத்தரிப்பூ வண்ணத்தில்
கொன்றை மரமெங்கும் குலைகுலையாய் மஞ்சட்பூ
அற்றை விழாவுக்காய் அலங்கரித்தாற் போற்றோன்றும்
சுற்றி நறும்வாசம் சுகம்செற்றக் கான்முல்லை
பூஆடை கொண்டு புதுமேனி மூடிநிற்கும்
காரைச் செடிபழுத்துக் கண்ணசைத்து வரவேற்கும்
சூரைக் கொடிஆடை பற்றிப் பிடித்திழுக்கும் !
பொங்கும் நினைவெல்லாம் நெஞ்சில் நிறைகிறது
எங்கள் கிராமம் எழிலோடு தெரிகிறது !

அனலை ஆறு இராசேந்திரம்
இவரும் எமது பழைய மாணவர்
கனடாவில் வதியும் கவிஞர் 30
வருடங்களாக மரபுக்கவிதைகள்
எருதிவருபவர். மூன்று நூல்களை
வெளியிட்டவர். அண்மையில்
இவரது மரபுக்கவிதைத்
தொகுப்பான **பூமழை**
பிரான்ஸிலும் தீவக மறுமலர்ச்சி
மையத்தினால் வெளியிட்டு
வைக்கப்பட்டது. மண்மணம் வீசும்
கவிதைகள் தந்துகொண்டிருப்பவர்.
இவரது தொகுப்பிலுருந்து.
கிராமத்து ஓவியங்கள்



படிப்பகம்

www.padippakam.com





# ஊரின் நுழைவாயிலில் என்னை ஒரு ராணுவவீரன் ஆயுதங்களால் ஆராத்திஎடுத்து என் தாய்நிலத்திற்கு என்னை அறிமுகம் செய்து வைத்தான்

**சு. கருணாநிதி**

எனக்குள் இனம்புரியாத ஒரு பயம். வேலைக்குப்போகும்போதும், வண்டியில் ஏறும்போதும் பயமாக இருக்கிறது. மனிதர்களைப்பார்க்கூட பயமாக இருக்கிறது. மாடிப்படிகளில் ஏறும்போது ஒரு படியிலிருந்து மறுபடிக்கு கால்வைக்கப் பயப்படுகிறேன். படிமாறும் அந்தக்கணத்தில் மானுட அழிவிற்கான காரியங்கள் நடந்துவிடுகிறது. அது எனக்காகவும் அதற்குள் நானாகவும் இருப்தாய் நினைவுகள் நீண்டு வந்துகொண்டே இருக்கின்றன. ஆகவே நான் பயந்துகொண்டே இருக்கிறேன். சிறியசிறிய காரியங்களெல்லாம் எனக்குப் பெரிதாகத்தெரிகிறது. வேலைக்குப்போய் வீடுவந்துசேர்வது கூட ஒரு சாதனையாகத்தெரிகிறது. தொலைபேசி மணிஅடித்தாற்கூட றிசீவரை எடுக்க கை நடுங்குகிறது.

எல்லாவற்றின்மீதும் வெறுப்படைகிறேன். பயம் இயலாமையைத் தருகிறது. இயலாமை வெறுப்பைத்தருகிறது. மனம் வெறுப்பு விரக்தியில் வீழ்ந்து துடிக்கிறது. வீழ்ந்த மனதை தூக்கி நிமிர்த்தி நடப்பிக்க என்னால் மட்டுமே முடியும். ஆனாலும் "முடியாது" என்ற ஓர் முடிவிற்குள் வந்துவிடுகிறேன். இயலாமைக்குள் மூழ்கியிருப்பதால் எல்லாவற்றிலுமான நம்பிக்கை கைவிட்டுப்போயின.

வாழ்வு எவ்வளவு பயங்கரமாகிவிட்டது. இல்லை நாம் பயங்கரமானதாக்கி விட்டோம்.

உன் தொலைபேசிஅழைப்பு என்னைத் தென்பூட்டியிருக்கிறது. இருந்தும் உன்னோடு பேசிக்கொண்டிருக்கும் இக்கணத்தின் யதார்த்தத்தை நினைக்கையில் தடுமாறுகிறேன். அண்டாவுக்குள் அண்டவெளியையும் அண்டவெளிக்குள் அண்டாவையும் கொணர்ந்து சேர்க்கும் யதார்த்தத்திற்கு முகம்கொடுக்க பயப்படுகிறேன். யதார்த்தத்திற்குள் இறங்க பயந்துகொண்டிருந்தால் வாழ்வு வசமாகது. இதற்குள் தானே வாழ்வு நிச்சயிக்கப்பட்டிருக்கிறது.

ஊர் நிலைமைகள் எப்படி இருக்கு என்று நீ கேட்டபோது நான் சொல்லத் தெரியாதவனாய் இருந்தேன். தாய்நிலம் கண்ட அதிர்ச்சியின் தாக்கம் எனக்குள் வியாபித்து வார்த்தைகளை தடுப்புக்காவலில் வைத்திருந்தது. அல்லது சொல்ல இயலாதவனாய் இருந்தேன்.
ஊருக்குப்போய் என் சந்தோசத்தை இழந்ததாக உணர்கிறேன்.
வாழ்தல் என்பது ஒரு விசித்திரமானதாகத் தெரிகிறது. அது எனக்கு வெளியே அந்நியப்பட்டு தூரத்தே இருக்கும் ஏதோ ஒன்றாய் புலப்படுகிறது. விசத்திரமானவைகளெல்லாம் மனிதருக்குப் பயம் தந்துகொண்டிருக்கின்றன. அதன் பரிணாமத்தை, அதன் பண்பை, அதன் உருவாக்கத்தன்மையை ஆய்ந்தறிய முடியாதவரை அவை விசித்திரமாவையே. மனதில் பயமிருந்தால் கனவுகள் வளர்ந்துகொண்டே இருக்கும். கனவில் தங்கியிருத்தல் மகிழ்ச்சியாயிருக்கும். ஆனால் கனவுகளுடனிருத்தல் மட்டுமே வாழ்வாகிவிடாது.

நானும் எல்லோரையும் போலவே முதன்முதலாக ஊர்விட்டுவரும்போது கனவுகளுடன் வந்திருந்தேன். அகவியல் நிறைவை முன்னிறுத்திப்பார்க்கையில் நமக்குள் கனவுகள் விரிந்து சுமைகூடிக்கொண்டு இருக்கின்றது. இன்று நான் ஊர் சென்று திரும்புகையில் பழைய கனவுகளுடன்



படிப்பகம்

www.padippakam.com



புதிய கனவுகளையும் சுமந்துகொண்டு வந்திருக்கிறேன். எண்ணாயிரத்து ஐநூற்று இருபது கிலோமீற்றர் தூரத்திலிருக்கும் தலைநகர், கரைநகர், கலைநகர், சிறைநகர், சிதைநகர், பெருநகர் பறந்துபோய்... ஊர்ந்தும் நடந்தும் சோதனைகள் - வேதனைகள் தாண்டி என் தாய்நிலம் கண்டேன். அங்கே வாழ்தலைக் கண்டேன். கனவுகளைக்கண்டேன். வாழ்வதற்காக முயன்றுகொண்டிருக்கும் மனிதர்களின் தன்னம்பிக்கையைக் கண்டேன். இவற்றிற்கிடையேயான யதார்த்த சூழலைக்கண்டேன். இவற்றுடன் என்னால் சினேகம் கொள்ள முடியாதிருந்தது.

அந்த யதார்த்தம் என்னை பயப்படுத்திக்கொண்டிருக்கிறது. மனநிறைய உணர்கையில் நான் மிகத் தொலைவில் இருப்பதாய் உணர்கிறேன்,தாய்நிலத்திற்கும் எனக்குமான உறவு மிகத் தொலைவில் அந்நியமாய்த் தெரிகிறது. நான் பிறப்பதற்கு 10 வருடங்களை முன் தள்ளிருக்கும் நிஜமாய்த் தெரிகிறது. எந்தையும் தாயும் இளமைக் காலத்திலிருந்த காலம் எப்படி வந்தது ? சாத்தியமா ? அசாத்தியங்களையெல்லாம் நாம் சாத்தியப்படுத்திக்கொண்டிருக்கிறோம்.காலம் பின்நோக்கி நகர்வதில்லை நமதுதாய் நிலத்தில் அதைச் செய்திருக்கிறோம்.

கைத்தொலைபேசிகளையும், மோட்டார்சைக்கிள்களையும் துப்பாக்கிகளையும் மட்டுமே இந்த இருாத்தொராம் நூற்றாண்டு நமக்கு தந்திருக்கின்றது. இந்த நவீன விஞ்ஞானயுகத்திலிருந்து இவற்றைத்தான் பெற்றிருக்கின்றோம். இந்த நூற்றாண்டின் முதல் சதாப்தம் நமது வாழ்வை, சுதந்திரத்தை, விடுதலையை பறித்து வைத்திருக்கிறது. நாம் பெற முயன்றுகொண்டிருக்கின்றோம். கைவசம் நம்பிக்கையை வைத்துக்கொண்டு கனவுகளை நோக்கி ஓடிக்கொண்டிருக்கிறார்கள். அவர்களது ஓட்டத்தை பார்த்து என்னால் ஓட முடியாது என்ற இயலாமைக்கு வருகிறேன். யதார்த்த சூழ்நிலை என்னை விரட்டுகிறது. "எப்படி வாழ்கிறார்கள்" என்று வியப்புறுகிறேன். நிம்மதியற்ற நிகழ்காலத்தோடும், நிச்சயமற்ற எதிர்காலத்தோடும் இயங்கிக்கொண:டிருக்கிறார்கள். வாழ்தல கேள்வியாயிருக்கின்றது.

நாம் எல்லோரும் கடமையைச் செய்யத் தவறிவிட்டோம். கடமைகளைச் சரியாகச் செய்திருந்தால் உரிமைகளைப் பெற்றிருக்கலாம். நான் வருத்தப்படுகிறேன், நாம் அதிகம் செய்ய வேண்டிய பெரிய பெரிய விடயங்கள் இருந்திருக்கின்றன. செய்யாமல் விட்டுவிட்டோம், நாம் வாழ்வதற்காக வழங்கப்பட்ட காலம் காலாவதியாகிவிட்டதோ என நினைக்கிறேன். வாழ்வின் தாற்பரியங்களை பிரக்ஞைபூர்வமாக பார்க்காமல் விட்டுவிட்டோம். நாம் சும்மா கிளித்தட்டு விளையாடிக்கொண்டிருக்கிறோம். கனவுகளின் உயிர்ப்பைக் கண்டுவந்திருக்கிறேன். ஆனால் என்னையிட்டு நான் கவலைப்படுகிறேன், அவர்களின் கனவுகளின் கால்களுக்கு நாம் எம்மாத்திரம். காலம் தாழ்த்திவிட்டு வருத்தப்படுகிறேன்.

வீடுகளைத் தின்று வீதிகளைத் தின்று
இயற்கையையும் தின்றுவிட்டார்கள்.
ஆளுக்கு ஆள்
தின்றதுபோக மீதமாயிருந்தது நமதூர் பெயருடன்

இருபது வருடங்கள்
கனவிற்குள் மறைந்திருந்து
நகரத்தின் இடர்ப்பட்டு
நரகத்தின் துயர்பட்டு
உடல் கரைத்து
உயிர் கரைத்து
அஞ்ஞாத வாசம் செய்து
வாழ்வதாய் பாசாங்குபண்ணி
தாய்நிலம் கண்டேன்
தரிசனம் கொண்டேன்

பார்க்கையில் பயமூட்டிய
பரவசமூட்டிய
ஆழ, நீலக்கடல்
நிறம்மாறி மெலிந்திருந்தது
எங்கள் கடலையும்
கடனடைக்க
விற்றுவிட்டார்களோ
கையாலாதவர்கள்

பூமியின் மேனியெங்கும்
ஆறிப்போன காயங்கள்



படிப்பகம்

www.padippakam.com



வெய்யில் எரிந்துகொண்டிருந்தது
வெம்மை தணிய கருணையுடன்
காற்றின் விசையில்
மேலெழும் புழுதி
பூமியின் கொட்டாவியாக
அழகியல் அர்த்தத்தை
தந்து கொண்டிருக்கிறது.
பச்சைத் தாவரங்கள்
பசியாலும் தாகத்தாலும்
நிறம்மாறியிருந்தன.

எம்முந்தைய தலைமுறையை
பெற்றோராயிருந்து
வளர்த்தெடுத்த
அப்பாவிகளான
பனை தென்னைகள்
கழுத்து வெட்டப்பட்டு
கொலையுண்டிருந்தன.


ஆங்காங்கு சில வீடுகள்
உருப்படியாயிருந்தன
வயதானவர்கள் மட்டும்
நடமாடிக்கொண்டிருந்தனர்.
சந்தியில் ஆயுதங்கள் நின்றன
என் ஊரின் நுழைவாயிலில்
ஒரு இராணுவ வீரன்
என்னை
ஆயுதங்களால் ஆராத்தி எடுத்து
என் தாய் நிலத்திற்கு
என்னை அறிமுகம் செய்து வைத்தான்.

வீதிகள் சுருங்கி
பற்றைகள் மூடி
ஒற்றையடிப்பாதையாய்
திகிலடைய வைத்தது.
பக்கத்து நகரின் குடியேற்றவாதி
என் அம்மா
நான் பிறந்து வளர்ந்த என் வீட்டை
எனக்கு அடையாளம் காட்டினார்.

கூரை இல்லாதிருந்து
"கிணறு" என
சாட்சிதந்துகொண்டிருந்தன
தண்ணீர் அள்ளும் வாளி
துருப்பிடித்துக்கிடந்தது
பூர்வீகம் விட்டகலேனென
மாமரம் பாதி எரிந்திருந்தது
எம்மவர் நம்பிக்கையாய்
பாதி தழைத்திருந்தது,

பிள்ளைகளை வெளிநாடுகளுக்கு
அனுப்பிவிட்டு
ஏக்கமுற்றிருக்கும்
பெற்றோராய்
வேப்பமரம்
தானும் தன்பாடாய்
துக்கித்து நின்றது

தேங்காய் உரிக்குமிடத்தில்
அலவாங்கும் கத்தியும்
துருப்பிடித்து
பாதி மண்மறைந்து கிடந்தன.





படிப்பகம்

www.padippakam.com



# அவ்வாறுரைத்தான் ஸரத்துாஸ்த்ரா...

வாசுதேவன்.

பதினேழு வயதாகியிருந்த வேளை
ஸரத்துாஸ்த்ரா தனது வீட்டையும்
அருகிருந்த வண்ணான் குளத்தையும்
வாற்பேத்தைகளையும் துறந்து துாரத்துத்
தலைநகரமொன்றிற்குப் புறப்பட்டான்.

"தாகம் கொண்ட நேரத்தில் தடாகத்தை
விட்டகலாதேயென" வேப்பமரத்தில் கூடு
கட்டிய பறவையொன்று வழிமறித்துக் கூறியது.

"கூடுகட்டத்தெரிந்த பறவையே, வழியற்றவர்கள்
பயணிப்பதன் கதையறியாயோ நீ.
வழியின்றித்தானே யான் கூடகல்கிறேன்."
எனப் பதிலிறுத்தான் ஸரத்துாஸ்த்ரா.

குளக்கரையில் குந்தியிருந்து வாற்பேத்தைகளுடன்
உரையாடியே அனுபவம் கொண்ட
ஸரத்துாஸ்த்ரா அப்போது சமுத்திரத்தைக்கண்டான்.

"ஆழமிகுதி கொண்ட அற்புத நீர்ப்பரப்பே
உன்னுடன் ஆழங்களைப்பற்றி அளவளாவ
விரும்புகிறேன்" எனச் ஸரத்துாஸ்த்ரா
அறைகூவினான்.

கரைதிரண்ட பேரலை தன்
முகத்தில் மோதத் தன் சிறுமையுணர்ந்த
ஸரத்துாஸ்த்ரா சமுத்திரத்துடன்உரையாடக்
கரைகளில் நீண்ட நாட்கள் அலைகளுடன்
அலையவேண்டுமென உணர்ந்தான்.
கூட்டிலிருந்து புறப்பட்டபோது கேட்ட
ஒரு பாடல் அவனுக்குத் துணையிருந்தது.

நுரைதிரளக் கரைவந்த அலைகள்
ஆழங்கள்பற்றிய செய்தியை இடைவிடாது
சொல்லிக்கொண்டேயிருந்தன.
செவி நுழைந்த செய்திகளால் நிரம்பியபின்
ஸரத்துாஸ்த்ரா கரையிலிருந்து விலகித்
தன் இருபத்தியிரண்டு வயதில்
பரதேசம்போனான்.

குறுக்காய் நதியோடும் ஒரு குளிர் நகரம் வரையும்
நீடித்தது ஸரத்துாஸ்த்ராவின் நீள்பயணம்.
கழுதையொன்றினைப்போல்அவன் முதுகிலிருந்தன
பலகாலம் பலர் சுமந்த பொதிகள்.

"இடைவிடாது ஓடிக்கொண்டேயிருக்கும் பேர்நதியே,
நீள் பயணம் செய்து நின் வரையும் வந்தேன்.
தாண்டிச்செல்ல தயைபண்ணி எனை அனுமதி"
எனச் ஸரத்துாஸ்த்ரா மன்றாடினான்.

நதி சிரித்தது.

"பொதிகளுடன் நதிகடக்கவெண்ணும் உன்
மதியளந்து நகைத்தேன்" என உரைத்தது நதி.
சினமுற்ற ஸரத்துாஸ்த்ரா தன் பொதிகளைத்
துாரத்தே விட்டெறிந்து நதிமுன் நின்றான்.

"பேராறே, அலைகளுடன் உரையாடிச் சமுத்திரத்தின்
ஆழங்கள் பற்றி அறிந்து வந்திருக்கிறேன்.
பொதிகளைக் கட்டவிழ்த்து எறிந்து விட்டேன்.
இன்னுமென்ன தடையுண்டெனக்கு உன்னைத்தாண்ட"
என ஸரத்துாஸ்த்ரா ஓடிக்கொண்டிருக்கும்
நதியிடம் வினாவினான்.

நதி மீண்டும் நகைத்தது.
"சுமைகொண்ட மனதுனக்கின்னமும் உளதே குழந்தாய்,
விட்டுவிடுபட்டுக்கட்டெலாம் அவிழ்ந்ததாய் உரைப்பினும்
பட்டதையெல்லாம் மறவாதுன்மனம் உள்ளவயையும்
நீந்திக்கடப்பதொன்றும் இலகுவல்ல என உணர்வாய்"
எனக் கூறியது குதுாகலித்துப் பாய்ந்த நதி.

ஸரத்துாஸ்த்ரா நதியின் கரைகளில் நீண்ட
நேரமாக இருளில் நின்று கொண்டிருந்தான்.
தனிமைக் குளிர் அவனை கொடுமைப்படுத்திய போது
தெற்கே நோக்கி நடந்தான்.

நடக்கும்போதும், நடந்து நடந்தே கடக்கும்போதும்
தன்னிலிருந்து ஏதோ கரைந்து போவதாக அவனுக்குப்
பட்டது. அவன் உள்மையைச் சுற்றி உறைந்து படிந்து
சுமைகொண்டிருந்த காலத்தின் சுவடுகள் கரைந்து
போவதை அவன் கடந்த பாதைகள் பார்த்துப்
பரிகசித்துக்கொண்டன.



படிப்பகம்

www.padippakam.com



"வெகு தூரம் வந்துவிட்டவனே, ஸரத்துஸ்த்ரா,
கடந்த காலத்தின் சுவடுகள் எனும் கவசம் இழந்து
எங்கே பயணிக்கிறாய்" எனப் பாதையொன்று
அவனிடம் வினாவியது.

"பகையற்ற பாதையே, புறப்பட்டபோது என்மேனியைப்
போர்த்தியிருந்த கந்தல் துணி கழன்று வீழ்ந்தபோது,
அது எனக்குக் கழன்று வீழும் ரகசியத்தைக்
கற்பித்துச்சென்றது. நீண்டகாலம் அதன் நிறங்களை
நான் ஞாபங்களில் தேக்கிவைத்திருந்தேன்.
பின் ஞாபங்கள் தம் நிறங்களை
இழந்தபோது எனக்குக் குளிரவாரம்பித்ததும்
நான் நடக்க ஆரம்பித்தேன்" எனச் ஸரத்துஸ்த்ரா
பதிலுரைத்தான்.

பாதைகள் மௌனம் பூண்டன.

அப்போதும் அவன் கரோன் நதிக்கரையின்
ஒரு மலைக்குகையில் வழிமறித்த
ஒரு இளம்தேவதையுடன்
உரையாட வேண்டியதாயிருந்தது.
திராட்சைச் செடிகளுடன் மர்மச்சந்திப்புகளை
ஏற்படுத்திக்கொண்டு நதியைக்கடக்கும்
சூட்சுமங்களை அறியும்படி அவள் வழிகாட்டினாள்.

கரோன் நதிக்கரையின் இளம் தேவதையைக்
கடந்தபோது
நதியைக் கடக்கும் சூட்சுமத்தின் முதற்பாகம்
இருளிலிருந்து புலப்பட்டது.

பின் ஸரத்துஸ்த்ரா கிழக்கே சென்று
மொசல் நதிக்கரையின்
பள்ளத்தாக்குகளில் பல காலம் அலைந்தான்.
அப்போது நதிகளைச் சிறைப்பிடிக்கும் ஏரிகளைப்பற்றிய
பாடங்களைக் கற்றுக்கொள்ள வேண்டியிருந்தது.

ஹேர்மன் ஹெஸ்ஸவின் சிந்தனை
ஆழங்களின் தியானவெளிகளில் திரிந்த சித்தார்த்தனின்
சந்திப்பின் பின் ஸரத்துஸ்த்தரா நதியைக் கடக்கும்
சூட்சுமத்தின் இரண்டாவது பாகத்தையும்
புரிந்துகொண்டதாக எண்ணினான்.

அப்போது அவன் றையின் நதிக்கரையில்
மீண்டும் ஒரு தேவதையுடன் உரையாட நேர்ந்தது
கருங்காட்டின் தனிமைக்குள் கொடும்போகம்
செய்து வானத்தைத் தொடப் போராடிக்கொண்டிருந்த
பைன் மரங்களுடான உரையாடல்களைப்
புரிந்து கொள்ளும் வலிமையை பெற்றுக்கொண்டான்
ஸரத்துஸ்த்தரா.

தனக்கு நாற்பது வயதாகியிருந்தபோது
ஸரத்துஸ்த்தரா வனவாசம் போனான்.

கருமை படர்ந்த கடதாசிக்காடுகளுள் எழுந்த
சூறாவழிகளின் போக்குகளில் சிக்குண்டு தவித்தான்.
காலம் காலமாகச் சூனியங்களிலிருந்து உயிர்த்தெழுந்து
கடதாசிக்காடுகளில் பதுங்கிக் கிடந்த புயல்களைமீறித்
தனிமைபேணி காட்டுத்தீயின் கொடூரங்களுக்குள்
தப்பிவாழும்
சிந்தனைத் துண்டங்களால் மலை உச்சி அடர்காட்டின்
இருளில் ஒரு குடிசை அமைத்து
ஸரத்துஸ்த்ரா தன்னில் அமிழ்ந்திருந்தான்.

அவனுக்குக் கொடுங்குளிரில் வாழும்
மலைஉச்சிப் பறவைகளுடன் உரையாட நேர்ந்தது.
புயல் தணிந்த பருவங்களில் அங்கு
புராதனச் செவ்விசைகள் கேட்டவண்ணமாகவேஇருந்தன.

இசைமாந்திப் போதையுற்ற வேளையில் அவனுக்கு
ஒரு ஏரியிடமிருந்து அழைப்பு வந்தது.
"ஓடும் நதியாய்ப் பயணிப்பவனே, ஓ ஸரத்துஸ்த்ரா,
ஒற்றனைப்போல் திரிபவனே, விருந்துணக்கு
வழங்குகிறேன் என்னிட்தில் தரித்துப்போ" என
விளித்தது அவ்வழைப்பு.

துயரற்ற தூய்மையின் முன் ஸரத்துஸ்த்ரா
சுயமிழந்தான். சுயமிழப்பின் சுகமுணர்ந்தபோதே
நதியாயோடியவன் மாயவிதிகளால் மரமாய் மாறினான்.
வேரிலிருந்து வேறோர் மரம் தோன்ற வெளிச்சம் புறப்பட்டது.

தன் மலை உச்சிக்குகைவரையும் வருகை
தந்த ஆதவனின் வன்னொளியால் உருக ஆரம்பித்தது
அவனது பனிக்கட்டியிருப்பு.

தொன்மையிலிருந்தும் தொலைவிலிருந்தும்
இடைவிடாது தன்னைத் தொடர்ந்துகொண்டிருக்கும்
ஒரு ஒலியில் அனைத்து இசைகளும் அடங்கியிருந்ததை
அவனது செவிகள் கேட்கவாரம்பித்தன.

காது கேளாதிருந்த தன் பாட்டனின் செவிகளும்
கேட்டுக்கொண்டிருந்த தொன்மையின் ரீங்காரம்
இப்போது அவன் செவிகளுக்குத் துல்லியமாகக் கேட்டது.
"செவிடனின் பேரனே, இப்போது மீண்டும் நீ பயணிக்கும்
நேரம் வந்து விட்டது" எனும் எதிரொலி அவன்
மண்டையோடுகளுள் மாறி மாறி மோதிக்கொண்டன.

ஸரத்துஸ்த்தரா அப்போது மீண்டும் புறப்படத்தயாரானான்.
கொடுங்குளிர் மூடும்பனிமுகடுகளை விட்டு மலையினின்றும்
இறங்கி இப்போது மீண்டும் அவன் பேர் நகரின் புராதன



படிப்பகம்

www.padippakam.com



-----54ம் பக்கத்தொடர்ச்சி

நதியை நோக்கி நடக்க ஆரம்பித்தான்.

சுமையிழுந்த உள்ளம் சருகானதாய் உணர்ந்த ஸரத்துாஸ்த்தரா,
பொதிசுமந்து வந்ததன் முதுகின் வெறுமையை உணர்ந்தான்.

வாழ்வெளியில் பொதிசுமந்த கழுதை,
ஆழ்வெளியில் இரைதேடும் சிங்கமென மாறி
மீளவும் தான் குழந்தையாகிப் போனதனைக் கண்டு,
நதியிடம் இம்முறை நட்புடன் நாடினான்.

முன்னர் ஓடிக்கொண்டேயிருந்த நதி
இப்போ உறங்கிக் கிடந்தது.

"பேராறே, முன்னொருநாள் நின்முன்நின்று நீந்த விழைந்தேன்.
இன்றோ நீ உறங்கிக்கிடக்கிறாய். உன்பரப்பில் அன்று வீழ்ந்த
என்முகத்தைக் காண வந்தேன்." என உரைத்தான் ஸரத்துாஸ்த்ரா.

"உறங்கிக் கிடந்தாலும் நான் ஓடிக்கொண்டேயிருக்கிறேன்.
நீந்திக்கடக்கும் விருப்பிழந்து மீளவும் முன்னைய முகம்
காணும் ஆவலுடன் வந்தனை நீ. ஓ ஒற்றனைப்போல்
திரிந்தவனே, ஸரத்துாஸ்த்ரா, என்னிடமில்லாதவை ஞாபகங்கள்.
ஓடுதலில் ஞாபகள்கள் இல்லை."

இவ்வாறு கூறிய நதி பின்னர் மௌனித்துப்போனது.

வழியின்றிப் பயணம் புறப்பட்ட ஸரத்துாஸ்த்ரா
இப்போ வழியெலாம் இருந்தும் பயணங்களில்
விருப்பிழந்து நின்றான்.

"ஓடுதலில் இல்லை ஞாபகங்கள்" எனும் நதியின்
கூற்று அவனுக்கு கசப்பாக இருந்தது.

பலநாட்கள் பசிகொண்டலைந்தவன் போலவும்
உணவிற்கு வேப்பங்காய்களன்றி வேறெதுவம்
இல்லாதிருப்பது போலவும் பட்டது அவனுக்குப்
பயணங்களின் முடிவு.

"கூடகன்று புறம்போன பறவைகளே, வீடகன்று
வேறிடம் செல்ல எண்ணும் பயணிகளே,
போன இடமிருந்து மீள வரும் சாத்தியங்கள்
பொய் காண்க. ஓடுதலில் இல்லை ஞாபகங்கள்.
ஏரிகளாய் வாழுங்கள் வரண்டாலும் மழை பொழியும்"

இறுதியல் அவ்வாறு கூறினான் ஸரத்துாஸ்த்ரா.

04.05.2005.

போகப்போகிறாராம் என்று தொந்தரவு செய்கிறாராம், அதுதான்.... கொஞ்ச நாட்கள் பொறுத்து உங்களுக்குத் தருவார் என்று, சொல்லி, அதற்கப் பொறுப்பு நிற்க வந்தனான். நான் அவரிடம் வேண்டித் தருவன் நீயும் நண்பன் நல்லதாகப் போய் விட்டது என்று கூறிக்கொண்டிருக்கும் போதே....

ரஞ்சித் யார் சொன்னது? வட்டிக்கு நாங்கள் கொடுத்ததா? என்ன விளையாட்டு?..... என்ன பிரசாந்! உங்கள் அப்பாவிடம் தான் குலசேகரம் வட்டிக்குப் பணம் வாங்கி, குணபால் மாமாவிற்க்கு கொடுத்தவராம் வட்டிப் பணமாகவே முதல் பணத்திதுக்கு முக்காற் பங்குக்கு மேல் கொடுத்து விட்டாராம்!

என்ன கதை ரஞ்சித்! எனக் கொதித்து எழுந்த பிரசாந், ஆத்திரம் தெரித்து எழ நாங்களா? வட்டியா? என்ன புதுக்கதை, ஊரில் சுத்து மாத்து..... இங்கு எப்படி வந்திருக்கு? நாங்களாவது வட்டியாவது? வெளிக்கிடு! குலசேகரம் வீட்டிற்க்கு, என்று உடல் பதற, வெறிபிடித்தவன் போல் நின்றான் பிரசாந்.... தந்தையும் சத்தமிட, பிரசாந், வேலாயுதமாமாவையும் என்னையும் சுமந்து கொண்டு கார் குலசேகரம் வீட்டைநோக்கி விரைந்தது... இல்லை பறந்தது.

குணபாலன் மாமாவுக்கு, வேலாயுதத்திடம் 10,000€ வை வட்டிக்கு வாங்கித்தந்ததாக, தமது பணத்தையே கொடுத்து வட்டி வாங்கிய குலசேகரச் சத்சியவானைப் பார்க்க வேண்டும் என்ற ஆவலில் என் மனம் காரைவிட விரைந்தது...

ஔவை பாங்கி
ஜேர்மனி



படிப்பகம்

www.padippakam.com



# ◆ இருமொழிப்பாவனையுள்ள குழந்தைகளும் ◆ பிரெஞ்சு அரசும்

- சுபாங்கி -

2004ம்ஆண்டு ஒக்டோபர் மாதம் பிரெஞ்சு அரசின் உள்நாட்டமைச்சுக்கு சமர்ப்பிக்கப்பட்ட BENISTI அறிக்கையானது ஏராளமான எதிர்ப்புகளைக் கிளப்பியது. (Benisti இந்த அறிக்கையைத் தயாரித்தவர். உள்நாட்டுப் பாதுகாப்புத்துறையில் தடுப்பு விசாரணைக் குழுவின் தலைவர்)

இங்குள்ள குற்றச்செயல்களைத் தடுப்பதற்கான சில ஆலோசனைகளை முறைப்படுத்தும்பொழுது மிகக் குறைந்த வயதுகளின் ஆரம்பத்திலேயே இவை தோன்றுகின்றன என்றும் இதில் வெளிநாட்டவரின் குழந்தைகளைத்தான் இவர்கள் கோடிட்டுக்காட்டுகிறார்கள். இங்குதான் இருமொழிப்பாவனைக்கான இவர்களது அரசியல் விளக்கம் ஆரம்பிக்கின்றது.

இவர்களுடைய அறிக்கையில் சொல்லப்படுகின்ற முக்கியமான விடயம் என்னவென்றால், ஒரு வயது தொடக்கம் மூன்று வயது வரையுள்ள குழந்தைகளுடைய தாய்மார்கள் தங்கள் குழந்தைகளை வீட்டில் பிரெஞ்சு மொழியில் பேசும்படி கட்டாயப்படுத்துகிறார்கள். ஆனால் அவர்களுடைய தந்தைமார்கள் தங்களுடைய தாய்மொழியையே வீட்டில் பேசும்படி வற்புறுத்துகிறார்கள் எனவும் கணிப்பீடுகள் தெரிவிப்பதாக குறிப்பிட்டுக் காட்டப்படுகின்றது. இதனால்தான் அநேக பாடசாலைகளில் குழந்தைகளுடன் பெற்றோரைத் தங்களுடைய தாய்மொழியில் பேசுவதைத் தவிர்க்கும்படி ஆலோசனை கூறப்படுகின்றது.

இந்த அறிக்கையின் இன்னொரு பிரேரணையின்படி நான்கு வயதுக்கும் ஆறு வயதுக்கும் இடைப்பட்ட குழந்தைகள் பிரெஞ்சு மொழியில் கஷ்டங்களை எதிர்நோக்கினால், «பிள்ளையானது அதனுடைய வளர்ச்சிக்கு (பாடசாலையிலும் அதற்கு வெளியேயும்) மிகவும் அத்தியாவசியமான மொழி நடையையும் பேச்சு வழக்கையும் உடனடியாகக் கிரகித்துக் கொள்வதற்கு வசதியாக» அவர்களை பேச்சு மொழி நிவாரண நிபுணரிடம் கட்டாயமாக அனுப்பவேண்டும் என்று கூறுகின்றது.

2005ம் ஆண்டு பெப்ரவரி மாதத்தில் பிரெஞ்சுப் பல்லைக்கழகமொன்றினைச் சேர்ந்த பன்மொழியறிஞர்கள் குழு உள்நாட்டமைச்சுக்கு எழுதிய கடிதமொன்றில், ஒரு உத்தியோக பூர்வ விஞ்ஞாபனமொன்றில் இப்படியான 'மதியீனங்கள்' இடம் பெறுவது குறித்துச் சினம் கொண்டுள்ளார்கள். அவர்கள் கூறுவது என்னவெனில், «இருமொழிப் பாவனைக்கும் குற்றம் புரிதலுக்கும் இடையில் ஒரு காரணரீதியான தொடர்பு இருப்பதற்கு எந்தவிதமான ஆதாரங்களும் இல்லை. மேலும் இருமொழி வழக்கானது ஒரு பேச்சு நிவாரண மருத்துவத்தைக் கோருமளவுக்கான வியாதியுமல்ல.»

அத்துடன், குழந்தைகளுடன் தங்களுடைய சொந்த மொழியில் - பரிச்சயமான மொழியில் - பெற்றோர்கள் பேசுவதைத் தடுப்பதென்பது ஒரு அத்துமீறிய பிரவேசம் என்பது மட்டுமல்ல, இன்னும் அவர்களுடைய மனித உரிமைகள் மீதும் கை வைப்பதென்பதுமாகும். அத்துடன் சந்ததிகளுக்கிடையிலான தொடர்புகளின் தன்மையையும் பரிணாமத்தையும் மட்டுப்படுத்தும் ஒரு செயற்பாடாகும். குற்றச்செயல்களிற்கு இவர்களின் இந்த நடவடிக்கையே ஒரு வேளை காரணியாகவும் கூடுமோ என்றும் சிந்திக்கத் தோன்றுகிறது.

இந்த இருமொழிப் பாவனைத் தடையானது சமூகத்தில் 'வசதிகளற்ற நிலையில் உள்ள' குடும்பங்களிற்குத் தானேயன்றி ஏனையவர்களிற்கல்ல. இன்னொரு புறத்தில் இது ஒருவிதமான பாரபட்சத்தை உண்டுபண்ணும்.

அண்மைக்கால ஆராய்ச்சிகளின் படி, இருமொழிப்பாவனை என்பது நிறைய அனுகூலங்களைக் கொண்டிருக்கின்றது என்று இந்த பன்மொழியியலாளர்கள் கூறுகின்றார்கள். உதாரணமாக, உணர்வுரீதியாக இன்னொருவரை அடையாளம் கண்டு கொள்ளும் தன்மை பெருகுதல் என்பதனை இந்த அனுகூலங்களில் ஒன்றாகச் சொல்லலாம்.

சுருக்கமாகச் சொன்னால் இந்த மொழியியலாளர்களின் கருத்துப்படி « இருமொழிப்பாவனையுள்ள குழந்தைக்கு அதற்குப் பொருத்தமான கல்வி முறை தேவை. அலட்சியப்படுத்தல், அடக்குமுறை என்பவற்றின்மீது கட்டியமைக்கும் ஒரு மொழியியல் அரசியலை விடுத்த சட்டங்கள் இயற்றப்படுதல் வேண்டும். »

---

குறிப்பு: BENISTI அறிக்கையினை www.jabenisti.com என்னும் இணையத்தளத்தில் பார்வையிடலாம்.



படிப்பகம்

www.padippakam.com



சிறுகதை

# நாங்கள் நாங்கள்தான்

ஔவை பாங்கி
ஜேர்மனி

அப்போது நான் சிறிய பையன் அல்ல உலகைத் தெரிந்து கொள்ளக் கூடிய வயது. சாதாரண குடும்பத்தில் பிறந்தவன் நான். ஆனால் கஸ்டம் என்பதை அவ்வளவுக்கு அறியாதவன் ஏதோ என் பெற்றோர்கள் என்னுடன் சேர்த்து ஐந்து சகோதரர்களும் ஒழுங்காகவே பாசத்துடன் வாழ்ந்தார்கள். பாசத்துக்கு பஞ்சம் இல்லை, பணத்திற்க்கும் பெரிய போராட்டம் இருக்கவில்லை. ஏதோ எங்கள் குடும்ப வண்டியை மிக இலாவகமாக ஓட்டிச் சென்றார் அப்பா.

அம்மாவும் சாடிக்கேற்ற மூடியாக இருந்து, அன்பு பொங்கியெழுந்த காலத்தை இப்போது வெளிநாட்டில் வாழும் போது இரைமீட்டு பார்க்கிறேன். அவ்வாறு இரைமீட்டிப் பார்க்க வைப்பது இங்கு நேரடியாகக் கண்ட காட்ச்சிகளும் சம்பவங்களுமே, பணம் பற்றாக்குறை இருந்தாலும் மகிழ்ச்சியில் பற்றாக்குறை அப்போது இருக்கவில்லை, கடன்படும் நிலையும் இல்லை. அவ்வாறு கடன் பெற்று முதலீடு செய்யும் அளவுக்கு எனது தந்தை வசதி படைத்தவரல்லர், இதனால் என்னவோ, எங்கள் வீட்டில் சீட்டு, வட்டி என்ற கதைகளை கேட்டதேயில்லை, சிலவேலை அவற்றுக்கும் முதற்பணம் கையிருப்பு தேவையல்வா? அது இல்லாத காரணமாகவும் இருக்கலாம், அவ்வளவாக விளக்கம் இல்லை. ஆனால் அடுத்த வீட்டு உறவினரும், கூப்பன் கடை முதலாளி, புகையிலை வியாபாரியார், ஆகியோர் உரையாடலின் போது சீட்டு வட்டி என்று கேள்விப்பட்டிருக்கிறேன் அது மட்டுஅல்ல எண்கணித பாடத்தில் ஒன்பதாம் வகுப்பிலே வட்டி வீத வாய்ப்பாட்டைப் பயன் படுத்தி, வட்டிக்கணக்குகள் செய்திருக்கிறேன். அப்போது அது வெறும் ஏட்டுக்கல்வியாகவே எனக்கிருந்தது.

எல்லோருக்கும் பொதுவான காரணங்கள் எனக்கும் காரணியாக மாறிவிட, தாயகத்தை விட்டுப் புறப்பட்டு ஜேர்மனிக்கு வந்தேன், வறுமையுடன் தோழமை கொண்ட நான் ஜேர்மனியிலுள்ள வசதிப் பெருக்கங்களையும், வளமான வாழ்க்கை முறைமைகளையும் கண்டு மலைத்தேன், ஆனால் எனது உறவுகளைப் பிரிந்த சோகம் என்னை இவற்றில் இலயிக்கச் செய்யவில்லை. புலத்தில் எம்மவா் படும் பாட்டினையும், அவலங்களையும், தம்மை இங்கு இசைவாக்கிக் கொள்ள எடுக்கும் முயறிச்சிகளையும் பல கோணங்களில் பார்த்து, இவற்றுக்கிடையில் என்னையும் தற்காத்துக் கொள்ளும் இளைஞனாக வளர்ந்து உங்கள் முன்னே நிற்கின்றேன். தாயகத்தில் அறியாத, தெரியாத பழக்கங்களில் சிலா், ஆடம்பர மோகத்திற் சிலா், உறவைப்பிரிந்த வேதனையிற் சிலா், இந்த வாழ்வைப் சொர்க்கம் என்ற கணிப்பில் பலா், நோயின் கையில் அகப்பட்டு இன்னும் சிலா் எனப்பல நிறத்தினராக உள்ள எம்மவர் வாழ்வைப்பார்த்து பரிதாபப்படத்தான் முடிந்தது ஏதோ வந்துவிட்டோம், வாழ்க்கையை நகர்த்தவேண்டும், என்று என்னால் முடிந்த வரை ஒரு வேலையைச் செய்து, என் வாழ் நாளைக்கடத்தி வருகிறேன், நிச்சயம் நாளை என் தாயகம் செல்வேன், என்ற சுவாலை என் மனதில் எரிந்த வண்ணமிருக்கும். என் வாழ்க்கையில் குறிப்பிட்டு சொல்ல எதுவும் இல்லை. ஆனால் எம்மவரைப் பார்க்கும் போது, பணக்கார நாட்டில், வளமான நாட்டில் ஏழைகளாக வாழ்வதையே காணக்கூடியதாயிருக்கின்றது. பாசத்திலும் ஏழை, பணமற்ற ஏழையாகவும் எம்மவரை இங்கு காண்கிறேன். இரவு பகலாக ஓடியாடி உழைக்கிறார்கள், உண்ணுவதற்க்கு உறங்குவதற்க்கு நேரமில்லை, அதே நேரம் காசும் இல்லை என்று அலைகிறார்கள், இந்த அலைச்சல் பேயாகப் பிடித்து விட சீட்டு, வட்டி, அடைவு என்று இங்கு நாற்று நாட்டப்பட்டு விட்டன. ஊரில் இல்லாத, கேள்விப்படாத, இவையாவும் ஒவ்வோரு வீட்டிலும் சாதாரண வார்த்தைகளாகப் போய்விட்டன. உழைத்தால் இங்கு காசு, உழைக்காமல் இருந்தால் சமூக உதவிக் காசு, இவ்வளவு வசதிகள் இருந்தும்,



படிப்பகம்

www.padippakam.com



உலகலுள்ள வட்டியும் சீட்டும் எம் தமிழரிடம்தான் சேர்ந்துவிட்டனவோ? என்று எனக்கு ஐயம்.

சரி என்னவோ இப்படி வாழ்க்கை வேதனையாகவும், வேடிக்கையாகவும் இருக்கிறது. இதைத்தான் ஒருவாறு ஜீரணிக்கலாம் ஆனால்........ அன்று.......?

நான் வேலைக்குச் செல்வதற்காக பஸ் தரிப்பு நிலையத்தில் நின்றிருந்தேன். எனக்குத் தெரிந்த ஒருவர், அதுவும் மனம் சோர்ந்த நிலையில், ஏதோ பறிகொடுத்தவரைப்போல், விரக்தியுடன் காணப்பட்டார் எனது இரக்க குணத்தால் அவருக்கு ஏதாவது உதவி செய்யலாம், என்று அவரை அனுகி.....

என்ன கவலையுடன் காணப்படுகிறீர்கள்? என்ன பிரச்சினை?

அதை ஏன் தம்பி சொல்வான்? பெரிய சிக்கலுக்குள் மாட்டுப்பட்டு இருக்கிறன். அதை எவ்வாறு நீக்குவது என்று எனக்கு புரியவில்லை.....

என்ன சிக்கல்? என்ன நடந்தது? சொன்னாற்தானே புரியும்..... நீங்கள் எங்கள் ஊரவர் என்பதால் உங்கள் மீது இனம் புரியாத பாசம் ஏற்படுகிறது.

தம்பி நான் தெரியாத தொழில்களை மாற்றி மாற்றிச் செய்து, காசுகளைக் கடன் வாங்கி, சீட்டுப்போட்டு, நட்டப்பட்டு போனன்... சீட்டுக்காரன் ஒரு பக்கம், வட்டிக்காரன் மறுபக்கம் துரத்துகிறார்கள் என்றார் குணபாலன் மாமா.

எனக்கு தூக்கிவாரிப்போட்டது. சீட்டு, வட்டி என்பன என்னை நேருக்கு நேர் சந்தித்துக்கொண்டன என உணர்ந்தேன். வட்டி சீட்டுகளால் அவதியுற்று அழுக்கான உடைகளுடன், விரக்தி முகத்தில் படர வதங்கி காணப்பட்டார், அவரிடம் கதைவிட்டு "என்ன வட்டி என்கிறீர்கள்? யாருக்கு கொடுக்க வேணும்?...... அதை எப்படிச் சொல்வது? ஒன்று இரண்டு பேரா? இப்ப தொண்டைப் பிடியில் கைவைத்துக்கொண்டு குலசேகரம் எண்ட நண்பர் விடாப்பிடியாக நிற்க்கிறார். அவரிடம் 10,000€ மாதம் 40€ வட்டிக்கு வாங்கினனான், ஆனால் அவர் தன்ர சிநேகிதன் வேலாயுதம் என்பவரிடம் வாங்கித் தந்தாகச் சொன்வர். யார் தந்தால் என்ன? என அவருக்கு நன்றி கூறி வட்டிப்பணமும் ஏறக்குறைய முதலாக தந்த பணத்துடன் ஒப்பிடுபோது... முக்கால் பங்கு நாலு வருசத்துக்கு கொடுத்துவிட்டன் தம்பி - இப்ப கொஞ்சக்காலமாக, வட்டியும் கொடுக்கேல்லை. அதனால் முழு பணத்தையும் தரச் சொல்லி வேலாயுதம் நிற்க்கிறாராம் தம்பி நான் தொழிலில் முறிந்து போனன் என்று அறிந்திட்டார், 10000€ உடனே வைக்கட்டாம் அல்லாவிடில் லோயரிடம் போகாப்போகிறாராம்.... என்று அடிக்கடி பிரச்சனை கொடுக்கின்றார் என அழாக்குறையாக கூறினார் இதனால் என் குடும்பத்திலும் பிரட்ச்சனை பிரிந்தும் இருக்கின்றன் தம்பி! எல்லாம் தம்பி ஏமாந்து போனன் ஊருக்கு போய்விடலாம் என்று இருக்றன்.....

என்ன கடனாளியாகவா?

.... என்ன செய்யத் தம்பி?....

பொறுங்கோ அண்ணன்! அந்த வேலாயுதம் என்பவர் யார்?....

...... HERNE – ல் இருக்கிறார்.

என்ன? வேறர்ண வேலாயுதமா? பிரசாந் என்ற 28 வயது மகன் ஒருவர் இருக்கிறாரா?

ஓம்! தம்பி!...... மகனும் என்னை வெருட்டி, ஒரு கை பார்க்கப் போறானாம் என்று வேலாயுதம் சொன்னவராம்.... என்று குலசேகரம் சொல்கிறார்....

அப்படியா? பிரசாந்தை எனக்குத் தெரியும் ஊரில் நாங்கள் ஒன்றாக SSC படித்தனாங்கள். நல்லவன் ஒரு வழியில் எனக்கு பொக்கற் பிறண்ட்....

அப்படியா தம்பி? எனக்காக நீ ஒருக்கா அவனுடைய அப்பா வேலாயுதத்திடம் கதைத்துப்பார்! கூடிய விரைவில் தருவேன், சட்டத்தரணியிடம் போக வேண்டாம் என்று சொல்லு! ஓ நான் அப்படிச் செய்யுறன், நீங்கள் யோசிக்க வேண்டாம் எனக் கூறி, அவரை சமாதானப்படுத்தி அனுப்பிவைத்தேன் நான்.

மறுநாள் காலை நான், வேறர்ண நகருக்கு பிரசாந் வீட்டிற்க்கு சென்றபோது, அவனும் தந்தையாரும் என்னை வரவேற்றார்கள், உபசரித்தார்கள். பழைய கதைகளையும் நாம் பரிமாறிக்கொண்டோம் அதே நேரம் தாயார் தந்த தேநீரைப் பருகியபடி, கடந்த கால வாழ்வுக்கு சென்று இருந்தோம் பின்னர் மத்தியான சாப்பாடு வந்தது, பின்னர் குணபாலன் மாமாவின் விடயம் பற்றி, மெல்லக் கதையை ஆரம்பித்தேன். .....பிரசாந்! உங்க அப்பா! குணபாலன் மாமாவுக்கு 10,000€ வட்டிக்குக் கொடுத்தவராம். உடனே வட்டியையும் முதலையும் தரும்படியும் அல்லாவிட்டால் லோயரிடம்

தொடர்ச்சி..51ம் பக்கத்தில்...




படிப்பகம்

www.padippakam.com



இராணுவ பாதுகாப்பிற்காக, முட்கம்பிகளால் மூடப்பட்ட பாடசாலைப்பாதை



மாணவர் பற்றாக்குறை காரணமாக
பாடசாலை மண்டபமொன்று சைக்கிள் கொட்டகையாகிறது...
**வேலணை மத்திய மகா வித்தியாலய பழையமாணவர் சங்கம் - பிரான்ஸ்**

படிப்பகம்

www.padippakam.com

எங்கள் கிராமம் எழிலோடு தெரிகிறது!

தெங்கும் பனையும் வாழைபலா தேமாவும்
நுங்கும் இளநீரும் முக்கனியும் தீந்தமிழும்
தந்தே எமை வளர்த்த தாய்மண் தெரிகிறது
பத்தாயிரம் கற்கள் தூரத்தே நானிருந்து
முத்தாய்க் கடல்நடுவண் விளங்கும் எமதூரை
நெஞ்சில் நிறுத்தி நினைவெடுத்துப் பார்க்கின்றேன்.
பிஞ்சு வயதிலிருந்து பிறப்போடு வளர்ப்புண்ட
எங்கள் கிராமம் எழிலோடு தெரிகிறது !
அல்லிக் குளமும் அதனருகே ஆலயமும்
முல்லை மலர்க்காடும் முற்றித் தலைகவிழ்ந்த
செந்நெல் வயல்வெளியும் செம்மாலைப் போதுகளும்
அம்மம்ம ! நெஞ்சத்து வீணை நரம்புகளை
மீட்டி இசை பொழிய நினைவு தொடர்கிறது!

படிப்பகம்